# நக்கல் நமசிவாயம்




Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 287 பிலவ வருடம், ஆடி மாதம் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (27.07.2021) ஹிஜ்ரி - 1442, துல்ஹஜ் பிறை - 16, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30

## ரிஷாட்டும் சந்தேகநபர்

### சட்ட மா அதிபர் திணைக்களம்

டயகம சிறுமியின் உயிரிழப்பு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் சந்தேகநபராக பெயரிடப்படலாம் என சட்ட மா அதிபர் திணைக்களம் கொழும்பு நீதவான் நீதிமன்றுக்கு நேற்று அறிவித்தது.

தீக்காயங்களுக்கு உள்ளான சிறுமி பணிக்கமர்த்தப்பட்ட வீட்டின் பிரதான நபர் என்றவகையில் அவருக்கு பொறுப்புக்கூறல் இருப்பதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் மன்றுக்கு அறிவித்துள்ளார்.

## பல பகுதிகளில் இன்று மழை

நாட்டில் மேல், சப்ரகமுவ, மத்திய மாகாணங்கள், காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் இன்று மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டல திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதேபோன்று வடமாகாணத்திலும் அவ்வப்போது மழை பெய்யக்கூடும் எனவும் கூறியுள்ளது. ஊவா மாகாணத்தில் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் அதிகாலை அல்லது இரவுநேரத்தில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் எனவும் எதிர்வு கூறியுள்ளது.

மத்திய, வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் 40 – 50 மில்லிமீற்றர் மழை பெய்யக்கூடும் என்பதோடு, இடையிடையே 60 மில்லிமீற்றர் மழையும் பெய்யக்கூடும் எனவும் வளிமண்டல திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.



கொழும்பில் நேற்று பெய்த அடைமழை காரணமாக குமாரதுங்க முனிதாஸ மாவத்தையில் வெள்ளம் ஏற்பட்டதுடன், வாகன சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர். (படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)

# சிறுமியின் சடலத்தை தோண்டி மீண்டும் பிரேத பரிசோதனை

## ரிஷாட் மனைவி, மனைவியின் தந்தை உட்பட்ட நால்வருக்கு விளக்கமறியல்

### கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவு

•யோ.தர்மராஜ்

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணிப்பெண்ணாக கடமையாற்றிய சிறுமி தீக்காயங்களுக்குள்ளாகி உயிரிழந்தமை தொடர்பில் சந்தேகத்தின்பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்த ரிஷாட்டின் மனைவி உள்ளிட்ட நால்வரை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இச்சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது கொழும்பு மேலதிக நீதவான் ரஜீந்திரா ஜயசூரிய இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

மேலும், சிறுமியின் சடலத்தை தோண்டியெடுத்து சிரேஷ்ட சட்ட வைத்திய நிபுணர்கள் குழு முன்னிலையில் மீண்டும் பிரேத பரிசோதனை செய்வதற்கு நீதிமன்றம் அனுமதியளித்தது.

டயகம சிறுமி குறைந்த வயதில் பணிக்கமர்த்தப்பட்டமை, தீக்காயங்களுக்குள்ளாகியமை மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டமை ஆகியவை தொடர்பில் விசாரணைக்கென சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்கப்பட்ட ரிஷாட்டின் மனைவி... 02»

## ரிஷாட் வீட்டில் பணியாற்றிய மேலும் இருவர் உயிரிழப்பா?

### தீவிர விசாரணை ஆரம்பம்

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணியாற்றிய மேலும் இரண்டு பணிப்பெண்கள் உயிரிழந்த சம்பவங்கள் குறித்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

டயகம சிறுமியின் மரணம் குறித்த விசாரணைகளின்போது மேலும் இரு பணிப்பெண்கள் உயிரிழந்த சம்பவங்கள் குறித்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒருவர் ஓடும் ரயிலின் முன்னால் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டுள்ளதாகவும் இன்னொரு பணிப்பெண் உடல்நிலை மோசமாக பாதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த இரு சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## எல்லா மாவட்டங்களிலும் டெல்ட்டா தொற்றுக்குள்ளான நோயாளர்கள்!

### சுகாதார அமைச்சு அதிர்ச்சித் தகவல்



•யோ.தர்மராஜ்

நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் டெல்ட்டா தொற்று பரவியுள்ளதாக சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். ஒவ்வொரு மாவட்டங்களிலும் டெல்ட்டா திரிபினால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருக்கலாம் என்ற முடிவுக்கு வந்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். டெல்ட்டா திரிபு பரவல் குறித்து ஊடகங்களுக்கு... 02»

## மலையகத்தில் சவால்களை எதிர்கொள்ள கூட்டுப்பொறுப்பு அவசியமென்கிறார் மனோ

### அரசியல், சட்ட, சிவில், வர்த்தக செயற்பாட்டாளர்களை ஒன்றிணைய வலியுறுத்து



மலையக தமிழ்ச் சமூகம் இன்று சந்திக்கும் சவால்களை எதிர்கொள்ளவும், சமூகம் எழுச்சி பெறவும் மலையகத்தின் முக்கிய நான்கு சமூக கூறுகளான அரசியல் செயற்பாட்டாளர்கள், சட்டத்துறை செயற்பாட்டாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், தொழில் வர்த்தகத்துறை செயற்பாட்டாளர்கள் ஆகியோர் கூட்டிணைந்து செயற்பட வேண்டும். 02»

## சா/த பரீட்சையை பெப்.21இல் நடத்த கல்வி அமைச்சு தீர்மானம்



•யோ.தர்மராஜ்

2021ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சையை எதிர்வரும் 2022 பெப்ரவரி 21ஆம் திகதிமுதல் மார்ச் 03ஆம் திகதிவரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். 02»

## சிறுவர்களிடையே கொரோனா பரவல் மிகத் தீவிரமடைகிறது!

### நாளொன்றுக்கு ஐந்துக்கும் மேற்பட்டோர் றிட்ஜ்வே சீமாட்டி வைத்தியசாலையில் அனுமதி

•நா.தினுஷா

கொழும்பு றிட்ஜ்வே சீமாட்டி வைத்தியசாலையில் கொரோனா தொற்றுடன் நாளாந்தம் ஐந்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் அனுமதிக்கப்படுவதாக அதன் பணிப்பாளர் ஜி.விஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றுப்பரவலினால் அதிக எண்ணிக்கையான சிறுவர்கள் பாதிக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 02»

## சமையல் எரிவாயுவின் அதிகபட்ச விலை நிர்ணயம்

### மாவட்டத்துக்கு மாவட்டம் விலைகளில் வேறுபாடு




•நா.தினுஷா

18 லீற்றர் சமையல் எரிவாயுவின் அதிகபட்ச சில்லறை விலையை ஆயிரத்து 260 ரூபாவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும் இந்த விலை நிர்ணயம் தொடர்பான வர்த்தமானி நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளதாகவும் நுகர்வோர் விவகார அதிகாரசபை அறிவித்துள்ளது. அதற்கமைய, 18 லீற்றர் (9.6 கிலோ கிராம்) சமையல் எரிவாயுவை கொழும்பு... 02»

## சு.க. – பொதுஜன பெரமுன முறுகலுக்கு முற்றுப்புள்ளி

### ஜனாதிபதியுடனான பேச்சு வெற்றியளித்ததாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

•யோ.தர்மராஜ்

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகள் ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தையடுத்து முடிவுக்கு வந்துள்ளதாக அறியக்கிடைத்தது. இரு கட்சிகளுக்குமிடையில் கடந்த காலங்களில் பெரும் முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன. 02»



## அரசாங்க கூட்டணியில் சு.க. பிரதானமான கட்சியொன்றல்ல

### பொதுஜன பெரமுனவின் செயலர் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு பதிலடி



•யோ.தர்மராஜ்

அரசாங்கத்தின் கூட்டணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே பிரதான கட்சி என்ற நினைப்பில் அக்கட்சியிலுள்ள பலர் உள்ளனர். ஆனால், கூட்டணியின் ஒரு பகுதியே சுதந்திரக் கட்சி என்பதை சிரேஷ்ட உறுப்பினர்கள் நினைவிற்கொள்ள வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து... 02»

# யாழ். மாவட்ட அரச அதிபராகவும் சிங்களவரை நியமிக்கத் திட்டம்!

## நிறுத்துமாறு கோரி மஹிந்தவுக்கு சம்பந்தன் கடிதம்

"தமிழ் பேசத் தெரியாத ஓர் அரச உத்தியோகத்தரை மாவட்ட அரச அதிபராக யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு நியமிப்பது பொருத்தமற்ற ஒரு விடயமாகும். மேலும், இது ஜனநாயக விரோதமான செயலாகும்."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்துக்குத் தமிழ் பேச முடியாத ஒருவர் அரச அதிபராக நியமிக்கப்படவிருக்கின்றார் என்ற தகவல் வெளியாகியுள்ள நிலையில், அந்த நியமனத்தை நிறுத்துமாறு கோரி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே சம்பந்தன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"யாழ். மாவட்டத்துக்கு விரைவில் தமிழ் பேச முடியாத ஒருவரை அரச அதிபர் பதவிக்கு நியமிக்கப்படவிருக்கின்றார் என நான் அறிந்து கொண்டேன்.

நீங்கள் அறிந்திருக்கின்ற பிரகாரம், யாழ். மாவட்டத்தில் 95 வீதமானவர்கள் தமிழ் பேசும் சமூகத்தைச் சேர்ந்தவர்களாவர். மேலும், 7 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏனைய நிர்வாகத்தைச் சேர்ந்தவர்களும் தமிழ் பேசும் சமூகத்தைச் சார்ந்தவர்களாவர்.

இந்தப் பின்னணியில் தமிழ் பேச தெரியாத ஓர் அரச உத்தியோகத்தரை மாவட்ட செயலாளராக /அரச அதிபராக யாழ். மாவட்டத்துக்கு நியமிப்பது பொருத்தமற்ற ஒரு விடயமாகும். மேலும், இது ஜனநாயக விரோதமான செயலாகும்.

மாவட்டத்திலுள்ள உயர் பதவியில் இருக்கும் அரச உத்தியோகத்தர் தமிழ் பேசும் ஒருவராக இருக்கும் சந்தர்ப்பத்தில்தான் அவருடனான வாய்மூலம் மற்றும் எழுத்துமூல தொடர்பாடல்கள் பயனுள்ளதாக இருக்கும்.

மேலும், தமிழ் மக்களின் வரலாற்று ரீதியான பூர்வீக இடங்களான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிய அரசியலமைப்பின் ஊடாக அதியுச்ச அதிகாரப்பகிர்வை வழங்கும் அரசு முயற்சிகளை எடுக்கும் சந்தர்ப்பத்தில் இத்தகைய செயற்பாடுகள் எதிர்மறையான விளைவையும், மக்களால் வரவேற்கப்பட முடியாத ஒன்றாகவுமே காணப்படுகின்றன.

எனவே, அத்தகைய பிரேரணையை மீளாய்வுசெய்து, மேற்குறித்த விடயங்களைக் கருத்திற்கொண்டு யாழ். மாவட்டத்தின் மாவட்ட செயலாளராக/அரச அதிபராக அனுபவமும் செயற்றிறனுமுள்ள தமிழ் பேசும் ஓர் அரச அதிகாரியை நியமிக்குமாறு நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்" - என்றுள்ளது.

# தமிழ் மக்களை நிர்வாக ரீதியான ஒடுக்கும் செயற்பாடே சமன் பந்துலசேன நியமனம்

## தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் தெரிவிப்பு

வடக்கில் தகுதியான இலங்கை நிர்வாக சேவையில் சிறப்பு தகைமைகள் பெற்ற பல அதிகாரிகள் இருக்கின்றபோது வடமாகாண பிரதம செயலாளராக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவரை நியமித்திருப்பது மேன்மேலும் பேரினவாதத்தின் மூலம் தமிழ் மக்களை நிர்வாக ரீதியாக ஒடுக்குகின்ற ஒரு பொறிமுறையாகவே நாங்கள் பார்க்கின்றோம் - என்று முன்னாள் வடமாகாண சபையின் விவசாய அமைச்சரும் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவருமான பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது-

தமிழ் மக்களுடைய அதிருப்தி எதிர்ப்பையும் மீறி ஜனாதிபதி, எஸ்.எம்.சமன் பந்துலசேனவுக்கு பிரதம செயலாளர் பதவியை வழங்கியிருக்கின்றார். உண்மையில் தென்னிலங்கை மக்களுக்கு மாகாண சபைகள் தேவையற்றதாக இருக்கும்பொழுது தேசிய இனப்பிரச்சினையின் விளைவாக தமிழ் மக்களுக்கு மாத்திரமே உருவாக்கப்பட இருந்த இந்த மாகாண சபை முறைமை இலங்கை முழுவதற்கும் பரவலாக்கப்படிருந்தது. இது எவ்வாறாக இருந்தாலும் தமிழ் மக்களுடைய மொழி ரீதியான இன ரீதியான பேரினவாதத்தினுடைய ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக நிகழ்ந்த ஆயுதப் போராட்டத்தின் விளைவாக தோற்றுவிக்கப்பட்ட மாகாண சபைக்கு தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்கள அதிகாரி நிறைவேற்று அதிகாரம்கொண்ட அதிகாரியாக நியமிக்கப்படுவது எவ்விதத்திலும் ஏற்புடையதல்ல. இது இந்த நாட்டினுடைய இனப்பிரச்சினைக்கான காரணத்தை அடியோடு நிராகரிக்கின்ற அரசினுடைய எதேச்சிகாரமான போக்காக நாங்கள் பார்க்கின்றோம்.

வடக்கு மாகாணத்தினுடைய பிரதம செயலாளராக நியமிக்கப்பட வேண்டியவர் மாகாண முதலமைச்சரின் ஒப்புதலின்பேரிலேயே நியமிக்கப்பட வேண்டியவர். ஆளுநர் முதலமைச்சரின் பரிந்துரை தேவையில்லை. ஆனால், பிரதம செயலாளர் 13ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டாலும் கூட அதற்கான உடன்பாடு முதலமைச்சரினால் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

அதற்கு ஏதுவாக துணைபோகக்கூடிய வகையிலேயே ஆளுநரையும் நியமனம் செய்திருக்கின்றது. அதுபோல இப்பொழுது பிரதம செயலாளரையும் நியமனம் செய்திருக்கிறது.

எங்களைப் பொறுத்தவரையில் தமிழ் மொழி தெரிந்தவராக இருக்க வேண்டும். மக்களுடைய நிர்வாகம் இலகுபடுத்தப்படல் வேண்டும் என்பதற்காகவே தமிழ் மொழி ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது - என்றார்.

### சமையல் எரிவாயுவின்...

மற்றும் கம்பஹா மாவட்டங்களில் 1150 ரூபாவுக்கும், களுத்துறை மாவட்டத்தில் 1158 ரூபாவுக்கும் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, புத்தளம் மாவட்டத்தில் 1174 ரூபாவுக்கும், கேகாலை மாவட்டத்தில் 1178 ரூபாவுக்கும், குருநாகல் மாவட்டத்தில் 1177 ரூபாவுக்கும், காலி மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் 1181 ரூபாவுக்கும், கண்டி மாவட்டத்தில் 1191 ரூபாவுக்கும், மாத்தறை மாவட்டத்தில் 1194 ரூபாவுக்கும், மாத்தளை மாவட்டத்தில் 1195 ரூபாவுக்கும், திருகோணமலை மாவட்டத்தில் 1217 ரூபாவுக்கும், அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் 1215 ரூபாவுக்கும், வவுனியா மாவட்டத்தில் 1216 ரூபாவுக்கும், மன்னார் மாவட்டத்தில் 1234 ரூபாவுக்கும் பெற்றுக்கொள்ளலாம் என நுகர்வோர் விவகார அதிகாரசபை அறிவித்துள்ளது.

மேலும், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 1217 ரூபாவுக்கும், மொனராகலை மாவட்டத்தில் 1248 ரூபாவுக்கும், பதுளை மாவட்டத்தில் 1235 ரூபாவுக்கும், அம்பாறை மாவட்டத்தில் 1252 ரூபாவுக்கும், நுவரெலியா மாவட்டத்தில் 1229 ரூபாவுக்கும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 1250 ரூபாவுக்கும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 1259 ரூபாவுக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 1243 ரூபாவுக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 1242 ரூபாவுக்கும் சமையல் எரிவாயுவை பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### அரசாங்க கூட்டணியில்...

தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுதந்திரக் கட்சியை ஜனாதிபதி சந்திக்கின்றார். அதற்கான அனைத்து உரிமையும் சுதந்திரக் கட்சிக்கு மட்டுமன்றி, எதிர்கட்சிக்கும் உள்ளது. அந்த சந்திப்பில் தவறில்லை.

எனினும், அரசாங்கம் சுதந்திரக் கட்சிக்கு ஓரவஞ்சனை செய்வதாக சிலர் தெரிவிக்கின்றனர். சில அமைச்சுகளும் கேலிக்குரியதாக உள்ளதென தெரிவித்தனர்.

எனினும் சுதந்திரக் கட்சியிலுள்ள பெரும்பாலான வர்கள் அப்படி நினைக்கவில்லை.

சுதந்திரக் கட்சியிலுள்ளவர்கள், கூட்டணியில் பிரதான கட்சி என்ற நினைப்பில் உள்ளனர். ஆனால், இன்று கூட்டணியில் ஒரு பகுதியாகவே சுதந்திரக் கட்சி உள்ளது. அதனை சிரேஷ்ட உறுப்பினர்கள் நினைவில் கொள்ளவேண்டும்.

### சு.க. — பொதுஜன...

குறிப்பாக, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பின்வரிசை உறுப்பினர்கள் சுதந்திரக் கட்சியை தொடர்ந்து விமர்சித்து வந்ததோடு, அவ்வப்போது பல குற்றச்சாட்டுகளையும் முன்வைத்தனர்.

அதேபோன்று, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களும் அவ்வப்போது அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சித்துவந்தனர். குறிப்பாக, இரசாயன உர இறக்குமதி உடனடியாக தடை செய்யப்பட்டமை பொருத்தமற்றறது என்றும், படிப்படியாக செய்யவேண்டும் என்றும் விமர்சித்தனர்.

மேலும், அமைச்சர் பெசில் ராஜபக்ஷ நாடாளுமன்ற வருகை தந்தாலும் பொருளாதார வளர்ச்சிக்கு எதனையும் செய்யமுடியாதெனவும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் விமர்சித்தனர். இதனையடுத்து, தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சுகள் நகைப்புக்குரியவை எனவும் விமர்சித்த சுதந்திரக் கட்சியினருக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் கடும் குற்றச்சாட்டுகளை தெரிவித்ததையடுத்து, இரு கட்சிக்குமிடையிலான முரண்பாடுகள் தீவிரமடைந்திருந்தன.

இந்நிலையில், இரு கட்சிக்குமிடையிலான முரண்பாடுகள் மற்றும் சுதந்திரக் கட்சியின் கோரிக்கைகள் குறித்து கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதியிடம் தனிப்பட்ட முறையில் சு.கட்சியினர் கோரிக்கை விடுத்ததற்கமைய நேற்று விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பு வெற்றியளித்துள்ளதாக சுதந்திரக் கட்சியினர் தெரிவித்துள்ளதையடுத்து, இரு கட்சிகளுக்குமிடையிலான முரண்பாடுகள் முடிவுக்கு வருவதாக அரசியல் வட்டார தகவல்கள் தெரிவித்தன.

இந்த பேச்சுவார்த்தை குறித்து தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கருத்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தை வெற்றியளித்துள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்ரிபால சிறிசேன உள்ளிட்ட சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் இரண்டரை மணித்தியாலயத்திற்கு மேலாக பேச்சுவார்த்தை நடத்தினோம்.

இதன்போது, சில முக்கிய விடயங்கள் குறித்து இணக்கப்பாடுகளுக்கு வரமுடிந்தது. குறிப்பாக, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு கிடைக்கும் அதே வரப்பிரசாதங்கள் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கும் கிடைப்பதற்குத் தேவையான சூழ்நிலையையும் விதிமுறைகளையும் உருவாக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தோம். அதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார்.

அதேபோன்று, விருப்புவாக்கு முறைமையில்லாத தேர்தல் முறைமை ஒன்றை உருவாக்குவதற்கு தேர்தலின்போது வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆகவே, அரசியலமைப்பு உருவாக்கத்திற்கு காலதாமதம் ஏற்படுமாக இருந்தால் உடனடியாக தேர்தல் முறைமையை திருத்தம் செய்வதற்கான நடவடிக்கையை முன்னெடுக்குமாறும் ஜனாதிபதியிடம் வலியுறுத்தினோம்.

அதேபோன்று, தொழிற்சங்கங்களுக்கு ஏற்படும் அநீதிகள் தொடர்பாகவும் ஜனாதிபதியிடம் முறையிட்டதுடன், சுதந்திரக் கட்சியிலுள்ள தொழிற்சங்கங்களின் ஆதரவும் அரசுக்கு தேவை, அதனை பெற்றுக்கொள்வதற்கு தேவையான திட்டங்களையும் உருவாக்குமாறும் சுட்டிக்காட்டினோம் - என்றார்.

### சா/த பரீட்சையை...

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

2021ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சையை அடுத்தவருடம் ஜனவரியில் நடத்த உத்தேசிக்கப்பட்டிருந்தது. எனினும், நாட்டிலுள்ள தற்போதைய கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையானது எதிர்வரும் பெப்ரவரி 21ஆம் திகதிமுதல் மார்ச் 03ஆம் திகதிவரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவோர் மற்றும் ஏனைய தரப்பினருக்கு வழங்கப்படுகின்ற தடுப்பூசியளிக்கின்ற பணிகள் வெற்றிகரமாக நடத்தப்படுகின்றன. தற்போதுவரை கிடைத்த தகவலுக்கமைய ஆசிரியர்கள், பணிக்குழாம் உள்ளிட்டவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மேல்மாகாணத்தில் 98 சதவீதத்தினருக்கும் தென் மாகாணத்தில் 83 சதவீதத்தினருக்கும், வடமேல் மாகாணத்தில் 82 சதவீதத்தினருக்கும், வடமத்திய மாகாணத்தில் 82 சதவீதத்தினருக்கும், ஊவா மாகாணத்தில் 80 சதவீதத்தினருக்கும், மத்திய மாகாணத்தில் 79 சதவீதத்தினருக்கும், வடமாகாணத்தில் 62 சதவீதத்தினருக்கும், சப்ரகமுவ மாகாணத்தில் 52 சதவீதத்தினருக்கும், கிழக்கு மாகாணத்தில் 48 சதவீதத்தினருக்கும் தடுப்பூசியளிக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக 74 சதவீதத்தினருக்கு தடுப்பூசியளிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆசிரியர்களின் சம்பளப்பிரச்சினையை தீர்ப்பதற்கு நாங்கள் முழுவீச்சாக மேற்கொண்டு வருகின்றோம். அரசாங்கம் என்ற வகையில் ஜனாதிபதி கோட்டாபயவின் சௌபாக்கிய திட்டத்தில் தெளிவாக நேரடியாக தீர்வும், முக்கியத்துவமும் கூறப்பட்டுள்ளது

தொழிற்சங்கங்களுடன் நான் நீண்ட பேச்சுவார்த்தையை நடத்தியிருந்தேன். இன்று (நேற்று) அமைச்சரவை கூடுகின்றபோது அமைச்சரவை பத்திரமொன்றை சமர்ப்பிக்கவுள்ளேன். அதனூடாக தீர்வொன்றை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றேன். இந்தப்பிரச்சினையை தீர்க்க முடியும் என நம்புகிறேன். மாணவர்களை கஷ்டத்திற்குட்படுத்தாமல் கற்றல் செயற்பாடுகளை மீளத்தொடங்கி, ஆசிரியர்களுக்கான இரண்டாம் கட்ட தடுப்பூசியை அடுத்தமாதம் இறுதிக்குள் வழங்கிவிட்டு செப்டெம்பர் மாத முதல்வாரத்தில் முறைப்படி பாடசாலைகளை மீள ஆரம்பிக்க எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

### எல்லா மாவட்டங்களிலும்...

நேற்று கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

டெல்ட்டா திரிபு தொற்றை வேறாக அடையாளம் காண்பதற்கு அடிப்படைத் திட்டங்கள் இல்லை. ஆகவே, காலதாமதம் மற்றும் அதிக செலவுகளை ஏற்படுத்தும் திட்டங்கள் என்பதால் இலங்கையில் மாத்திரமல்ல,. முழு உலகமும் இதன் வீரியத்தைக்கொண்டே தரவுகளை சேகரிக்கின்றது.

இலங்கையின் ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த டெல்ட்டா திரிபினால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருக்கலாம் என்ற முடிவுக்கு வந்துள்ளோம்.

டெல்ட்டா திரிபுள்ள ஒரு பகுதியில் இந்த திரிபை பரவுவதற்கு இடமளித்தால், அது வேகமாக பரவும். ஆகவே, இந்தத் திரிபினால் பாதிக்கப்பட்டவர்களை குறைக்கவேண்டியது முக்கியமாகும்.

இந்நிலையில், மேல் மாகாணத்தில் கொழும்பு பகுதியில் 20 – 30 வரையான டெல்ட்டா தொற்றுக்குள்ளானோர் இருக்கக்கூடும். ஏனைய மாவட்டங்களில் தீர்க்கமான முறையில் டெல்ட்டா தொற்றுக்குள்ளானோர் குறித்து கூற முடியாது. ஆனால், அனைத்து மாவட்டங்களிலும் டெல்ட்டா தொற்றுக்குள்ளானோர் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருக்கக்கூடும் என்பதை சந்தேகமின்றிக் கூற முடியும்.

தடுப்பூசிகள் வழங்கப்படுவதன் ஊடாக நோய் எதிர்ப்புச்சக்தியை அதிகரித்து இந்த டெல்ட்டா திரிபு பரவுவதை தடுக்க முடியாது. எனினும், இந்தத் திரிபினால் ஏற்படும் பாதிப்பை குறைப்பதற்கு முடியும்.

ஆகவே, தடுப்பூசிகள் பெற்றுக்கொள்வதற்கு தகுதியானவரான அனைவரும் தவறாது தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளுமாறு அனைவரிடமும் கோரிக்கை விடுக்கின்றோம். அத்தோடு, அனைத்து சுகாதார விதிமுறைகளையும் தவறாது பின்பற்ற வேண்டும் - என்றார்.

### சிறுவர்களிடையே...

இரு வாரங்களுக்கு முன்னர் ஒரு நாளில் ஒரு குழந்தை மாத்திரமே கொவிட் -19 தொற்றுடன் கொழும்பு சீமாட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அது தற்போது ஐந்துக்கும் மேற்பட்டதாக அதிகரித்துள்ளது என அவர் தெரிவித்துளார்.

இதேவேளை, கொரோனா நோய்த்தொற்றுடன் தாய்மார்களும் கண்டறியப்படுவதாகவும், இதற்கமைய தினமும் எட்டுமுதல் பத்து தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### மலையகத்தில்...

ஒவ்வொருவரும் தமக்குரிய பணியை கூட்டுப்பொறுப்புடன் நிறைவேற்ற வேண்டும். இதுவே மலையகத்தின் இன்றைய தேவை என தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன் எம்.பி. கூறியுள்ளார்.

மலையக சட்டத்துறை மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளுடன் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போது மனோ எம்.பி. மேலும் கூறியதாவது,

முழு இந்திய வம்சாவளி மலையக தமிழர்களும் வீட்டுப் பணியாளர்களும் அல்ல. முழு இந்திய வம்சாவளி மலையக தமிழர்களும் தோட்டத் தொழிலாளர்களும் அல்ல. இப்படியான ஒரு கருத்தை ஒருசில இனவாதிகள் நிறுவ முயல்கிறார்கள். இப்படித்தான் ஒருகாலத்தில் அமெரிக்காவில் வெள்ளை இன ஆதிக்கவாதிகள், கறுப்பு இனத்தவரை சித்திரிக்க முயன்றார்கள். இது சூட்சுமம் நிறைந்த கருத்து. இலங்கையிலும் இது திட்டமிட்டு பரப்பப்படுகிறது.

இதுபற்றி நான் எப்போது சுட்டிகாட்டி வந்துள்ளேன். அதை இப்போதும் நான் எடுத்துச் சொல்கிறேன். முதலில் நாம் ஒன்றுகூடி இந்த கருத்தை முறியடிக்க வேண்டும். இதை எப்படி அமெரிக்காவில் கறுப்பு இனத்து செயற்பாட்டாளர்கள் முறியடித்தார்களோ, அப்படியே நாமும் முறியடிக்க வேண்டும்.

மலையக சமூகம் இன்று வளர்ந்துவருகிறது. இங்கே இன்று அமைச்சர்களும், எம்.பிக்களும், ஏனைய உள்ளூராட்சி மன்ற மக்கள் பிரதிநிதிகளும் இருக்கின்றார்கள். சட்ட வல்லுனர்களும், வளர்ந்த இளைய சட்டத்தரணிகளும் இருக்கின்றார்கள். தொண்டு நிறுவன போராளிகளும், பேராசிரியர்களும், கல்வியாளர்களும் அடங்கிய சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் இருக்கின்றார்கள். தலைநகரம்முதல் நாடு முழுக்க விரவி பரவியுள்ள வர்த்தகர்கள், தொழிலதிபர்கள், தனியார்துறை ஊழியர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள் அடங்கிய தொழில் வர்த்தகத்துறை செயற்பாட்டாளர்கள் இருக்கின்றார்கள்.

ஆகவே, மலையக தமிழர் இன்று ஒரு தேசிய சிறுபான்மை இனமாக, பல்வேறு அடக்கு முறைகள் ஒடுக்குமுறைகளுக்கு மத்தியில் வளர்ந்து வருகின்றனர்.

மலையக தமிழ்ச் சமூகத்தில் மிகவும் பின்தங்கிய ஒரு பிரிவினரான இரண்டு இலட்சம் தோட்டத்தொழிலாளர்கள் ஆவர். இவர்களை கைத்தூக்கி விடவேண்டிய கடப்பாடு, வேறு எவரையும் விட, மேற்சொன்ன மலையக சமூகத்தின் முன்னேறிய அரசியல், சட்டத்துறை, சிவில் சமூக, தொழில் வர்த்தகதுறை செயற்பாட்டாளர்களுக்கு இருக்கின்றது. இன்றைய தேவை, மலையக அரசியல், சட்டத்துறை, சிவில் சமூக, தொழில் வர்த்தகதுறை செயற்பாட்டாளர்களின் கூட்டிணைந்த செயற்பாடாகும். ஒவ்வொன்று பிரிவினரும் தமக்குரிய பணியை கூட்டுப்பொறுப்புடன் நிறைவேற்ற வேண்டும்.

சகோதர இனங்களை சார்ந்த விரல் விட்டு எண்ணக்கூடிய ஒருசில நல்ல மனம் கொண்ட முற்போக்காளர்களை தவிர வேறு எவரும் எமக்கு உதவ மாட்டார்கள். எம்மை எள்ளி நகையாட மட்டுமே பலருக்கு முடியும். எம்மை அவமானப்படுத்த மட்டுமே பலருக்கு முடியும். ஆகவேதான் எம்முடன் எவரும் விளையாட வேண்டாம் என நான் எப்போதும் எச்சரிக்கிறேன். எம்மை அவமானப்படுத்த நினைத்தோருக்கு பகிரங்கமாகவே நான் பதிலடி கொடுக்கிறேன்.

பின்தங்கிய இரண்டு இலட்சம் தோட்டத் தொழிலாளர்களுக்கு, எமது நான்கு ஆண்டு ஆட்சிக்காலத்தில், அதற்கு முற்பட்ட நாற்பது வருட காலத்தில் நடைபெறாத பல்வேறு வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுத்தோம். எமது மக்கள் வளர்ந்தார்கள்.

துரதிஷ்டவசமாக எமது ஆட்சி இடை நின்று விட்டது. அது முடிவு இல்லை. நாம் மீண்டும் முன்பை விட பலமாக எழுந்து வருவோம். எழுதி வைத்துக்கொள்ளுங்கள்.

### சிறுமியின் சடலத்தை...

உள்ளிட்ட நால்வர் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இச்சம்பவத்தில் முதல் சந்தேகநபரான தரகர் பொன்னையா பண்டாரம் (வயது 64) சார்பில் சட்டத்தரணி சஞ்சய கமகேவும் இரண்டாவது சந்தேகநபரான ரிஷாட்டின் மாமனார் மொஹமட் சஹாப்டீன் (வயது 70) சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி அனுஜ பிரேமரத்னவும் மூன்றாவது சந்தேகநபரான ரிஷாட்டின் மனைவி சஹாப்டீன் ஆயிஷா (வயது 46) சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி அனில் சில்வாவும் மனைவியின் சகோதரர் சஹாப்டீன் இஸ்மதீன் (வயது 44) சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கப்சாலி ஹுசைனும் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

சட்டமா அதிபர் சார்பிலும் பொரளை பொலிஸார் மற்றும் கொழும்பு தெற்கு சிறுவர் மற்றும் மகளிர் விவகாரப் பிரிவு சார்பிலும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் ஆஜராகியிருந்தார்.

வழக்கு விசாரணையின்போது பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட மூன்று கோரிக்கைகளுக்கு நீதிமன்றம் அனுமதியளித்தது.

நீண்டநாள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக சிறுமியின் பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அச்சிறுமி அடித்துத் துன்புறுத்தப்பட்டற்கான அடையாளங்கள் இருப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. சிறுமி, தான் துன்புறுத்தப்படுவதாக குறிப்பிட்டாரென பெற்றோரின் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகையால் இவை ஒன்றுக்கொன்று முரணான காரணத்தினால் சடலத்தை தோண்டியெடுத்து சிரேஷ்ட சட்டவைத்திய நிபுணர்கள் குழு முன்னிலையில் மீண்டும் பிரேத பரிசோதனை செய்யப்பட வேண்டும் என பொலிஸார் கோரிக்கை விடுத்தனர்.

அதனை ஏற்றுக்கொண்ட நீதவான் சடலத்தை தோண்டியெடுப்பதற்கான அனுமதியை வழங்கியதுடன் சிரேஷ்டத்துவத்தின் அடிப்படையில் சட்டவைத்திய நிபுணர்கள் தெரிவுசெய்யப்பட்டு பிரேத பரிசோதனை நடத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தல் வழங்கினார்.

மேலும், ரிஷாட் பதியுதீன் எம்.பி.யின் வீட்டில் உள்ள சி.சி.ரி.வி. காணொளித் தடயங்களை அரச பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி அறிக்கை பெறுவதற்கும் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

அத்துடன் ஆறு தொலைபேசி இலக்கங்கள் குறித்தும் அவை எவ்வெந்த இடங்களில் பயன்படுத்தப்பட்டன என்பது குறித்தும் தொடர்பாடல்கள் குறித்தும் அறிக்கைகளை பெறுவதற்கு நீதிமன்றத்தின் அனுமதி பெறப்பட்டது.

இதேவேளை, சுகயீனம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களை முன்வைத்து பிரதிவாதிகளுக்கு பிணை வழங்குமாறு சட்டத்தரணிகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பகட்டத்தில் இருப்பதாலும் சந்தேகநபர்கள் அதிகாரம் படைத்தவர்கள் என்பதால் சாட்சியங்களை மாற்றக்கூடியவர்களென்றும் பிணை வழங்குவது விசாரணைகளை பாதிக்கும் என்றும் பொலிஸார் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது, உண்மைகளை மறைப்பதற்கு முன்னாள் அமைச்சரின் மாமா செயற்பட்டார் என்பது தெரியவருவதால் பிணை மறுக்கப்படுவதாக மேலதிக நீதவான் மன்றில் தெரிவித்தார்.

இவர்கள் சமூகத்தில் உயர்ந்தவர்களுடன் தொடர்புகளை பேணுபவர்கள் என்பதால் இவர்களுக்கு பிணை வழங்கப்படுமாக இருந்தால் சாட்சியாளர்களை அச்சுறுத்துவதற்கு மற்றும் சாட்சியங்களை அழிப்பதற்கு வாய்ப்புகள் இருப்பதால் பிணை வழங்கல் சட்டத்திட்டங்களுக்கு அமைய பிணை கோரிக்கை நிகாரிப்பதாகவும் மேலதி நீதவான் சுட்டிக் காட்டினார்.

இந்த வழக்கின் இரண்டாவது சந்தேகநபரான முன்னாள் அமைச்சரின் மாமா, சிறுமியை வைத்தியசாலையில் அனுமதிக்கும்போது, அவருடைய பெயர் ஹிஷானி என்றும் வயது 18 என்றும் கூறியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறுமி தீ காயங்களுக்குள்ளான அறையில் மண்ணெண்ணெய் போத்தல் மற்றும் லைட்டர் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. எனினும், இந்த வீட்டில் இதற்கு முன்னர் பணிபுரிந்தவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின்போது, குறித்த வீட்டில் மண்ணெண்ணெய் பாவிப்பதில்லை என்பது கண்டறியப்பட்டுள்ளதாகவும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மன்றில் தெரிவித்தார்.

ரிஷாட் பதியுதீனின் மாமாவிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின்போது, சாரதியினால் மண்ணெண்ணெய் வாங்கிவரப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். எனினும், சாரதியிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் தான் மண்ணெண்ணெய் வாங்கி வரவில்லை என தெரிவித்துள்ளதாகவும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் மன்றில் தெரிவித்தார்.

சிறுமி உயிரிழந்த பின்னர் அந்த வீட்டிலிருந்த பொலிஸ் உடைக்கு சமனான உடையணிந்த நபரொருவர், சிறுமியின் சகோதரருக்கு அழைப்பு விடுத்து, இந்த விடயத்தை இழுத்தடிப்புச் செய்ய வேண்டியதில்லை.

பொலிஸிற்குச் செல்ல வேண்டியதில்லை என அச்சுறுத்தி, ஆரம்பத்தில் 50 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளதுடன், மரண சடங்குகளுக்காக 50 ரூபாவும் வழங்கப்பட் டுள்ளது விசாரணைகளிலிருந்து தெரியவருவதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்தார்.

ரிஷாட் பதியுதீனின் வீட்டில் 8 சி.சி.ரி.வி கமராக்கள் இருந்தாலும் மரணம் இடம்பெற்ற தினத்தில் மாலை 6.30 மணிக்கு பின்னர் 6 கெமராக்கள் செயலிழந்திருந்தாக தெரிவித்த, பிரதி சொலிசிட்டர் ஜெனரல் இந்த விடயம் குறித்து சந்தேகம் ஏற்பட்டுள்ளதால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் மன்றில் தெரிவித்தார்.

இந்தச் சம்பவமானது பொதுமக்களிடையே குழப்பநிலையை தோற்றுவித்திருப்பதை கருத்திற்கொண்டு அவர்களின் பிணைமனுவை நீதவான் ரஜீந்திரா ஜயசூரிய நிராகரித்தார். மேலும் சந்தேகநபர்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.

நாடு முழுவதும் பதற்றம்:

# டுனிசிய பிரதமரின் பதவி பறிப்பு; முடக்கப்பட்டது நாடாளுமன்றம்

## ஜனாதிபதி கயீஸ் அதிரடி உத்தரவு

டுனிசிய பிரதமர் ஹிச்சம் மெச்சிச்சியை (Hicham Mechichi) பதவிநீக்கம் செய்துள்ள அந்நாட்டு ஜனாதிபதி கயீஸ் செயிட் (Kais Saied), நாடாளுமன்றத்தையும் முடக்க உத்தரவிட்டுள்ளார்.



டுனிசிய பொருளாதாரத்தை புனரமைக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொரோனா பரவலை தடுத்துநிறுத்தும் வகையில் டுனிசியாவில் பல்வேறு மாநிலங்களில் முழு ஊரடங்கு அறிவிக்கப்பட்டது. தொற்று கட்டுக்குள் வராத காரணத்தால் பிரதமர் ஹிச்சம் மெச்சிச்சி கட்டுப்பாடுகளை விலக்கவில்லை. இந்நிலையில், பொது முடக்கத்தால் வாழ்வாதாரம் முடங்கியதால் கட்டுப்பாடுகளை தளர்த்தக் கோரி டுனிசியா முழுவதும் போராட்டங்கள் வெடித்தன. நாட்டின் பொருளாதாரத்தை உடனே மீட்டெடுக்க வலியுறுத்தி இளைஞர்களும் ஓரணியில் திரண்டு போராட்டம் நடத்தினர்.

தலைநகர் டுனிசில் வெடித்த போராட்டங்கள் நபியூல், சவுசி, கெய்ரோவான், டியூசியோர் உள்ளிட்ட இடங்களுக்கும் பரவியன. பல்வேறு இடங்களில் போராட்டக்காரர்களுக்கும், காவல்துறையினருக்கும் இடையே போராட்டங்கள் வெடித்தன. அரசியல் கட்சியின் அலுவலகங்கள் இளைஞர்களால் சூறையாடப்பட்டன. இதையடுத்து நாடு முழுவதும் பதற்றம் ஏற்பட்டதையடுத்து ஜனாதிபதி கயீஸ் செயிட் பாதுகாப்பு அதிகாரிகளுடன் அவசர ஆலோசனையில் ஈடுபட்டார். இதைத் தொடர்ந்து தொலைக்காட்சியில் பேசிய ஜனாதிபதி கயீஸ், பிரதமர் ஹிச்சம் மெச்சிச்சியை பதவிநீக்கம் செய்துள்ளதாகவும் நாடாளுமன்றத்தை முடக்க உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

''தேசியளவிலான பதற்றம் எதிரொலியாக நாடாளுமன்றத்தை முடக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அரசியலமைப்பு சட்டப்படி நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை. இதனால் நாடாளுமன்றத்தை முடக்க முடிவு செய்துள்ளோம். பிரதமர் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். புதிய பிரதமரை தெரிவுசெய்து விரைவில் அறிவிப்பு வெளியிடப்படும்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதி கயீஸின் அறிவிப்பையடுத்து முக்கிய வீதிகளில் கூடிய பொதுமக்கள் ஆரவாரத்தில் ஈடுபட்டனர். புதிதாக நியமிக்கப்படவிருக்கும் பிரதமர் கொரோனா கட்டுப்பாடுகளை தளர்த்தி சரிந்து கிடக்கும்

# இந்தோனேஷியாவில் கொரோனாவால் குழந்தைகள் உயிரிழப்பு அதிகரிப்பு

இந்தோனேஷியாவில் கொரோனாவால் குழந்தைகளின் உயிரிழப்பு ஆபத்தான அளவுக்கு அதிகரித்துள்ளது.

இந்தோனேஷியாவில் கடந்த சில வாரங்களில் கொரோனா தொற்றால் நூற்றுக்கணக்கான குழந்தைகள் உயிரிழந்தனர். இவர்களில் பலர் ஐந்து வயதுக்குட்பட்டவர்கள்.

இந்த இறப்பு வீதம் மற்ற நாடுகளைவிட அதிகமாகும். நாடு முழுவதும் டெல்ட்டா வகை கொரோனா தொற்று அதிகரித்துள்ளதே குழந்தைகள் உயிரிழப்புக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

வெள்ளிக்கிழமை ஒரேநாளில் புதிதாக ஐம்பதாயிரம் பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளதாகவும், ஆயிரத்து 566 பேர் உயிரிழந்ததாகவும், தொற்றுக்குள்ளானோரில் 12.5 வீதமானோர் குழந்தைகள் என்றும் அரசு தெரிவித்துள்ளது.

ஜூலை 12ஆம் திகதியுடன் முடிந்த வாரத்தில் மட்டும் 150இற்கு மேற்பட்ட குழந்தைகள் இறந்துள்ளதாகவும், இவர்களில் பாதி பேர் ஐந்து வயதுக்குட்பட்டோர் என்றும் தெரியவந்துள்ளது. இந்தோனேஷியாவில் கொரோனாவால் இதுவரை 31,94,733 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன்,



84,766 பேர் உயிரிழந்துள்ளமை குறிபிடத்தக்கது.

இதேவேளை, கொரோனா பாதிப்புக்குள்ளானோரில் 3,61,452 பேர் நாடு முழுவதுமுள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருவதுடன், அவர்களில் 4,798 பேரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உலக செய்திகள்

தலிபான்கள் வெறியாட்டம்:

# ஆப்கானிஸ்தானில் மதத் தலைவர்கள் பெண்கள் உட்பட 33 பேர் சுட்டுக்கொலை

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க, நேட்டோ படை வீரர்கள் வெளியேறி வருவதால், தலிபான் தீவிரவாதிகளின் தாக்குதல் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானில் கடந்த சில தினங்களில் அவர்கள் மதத் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், ஆண், பெண் பத்திரிகையாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் உட்பட 33 பேரை கொன்றுள்ளனர்.

ஆப்கானின் பெரும் பகுதியை கைப்பற்றியுள்ள நிலையில், தாங்கள் கைப்பற்றியுள்ள பகுதிகளில் தங்களுக்கு எதிராக செயற்பட்டவர்களை தலிபான்கள் கொன்று குவித்து வருகின்றனர்.

அந்தவகையிலேயே கடந்த சில தினங்களில் மேற்குறிப்பிட்ட 33 பேரை கொன்றுள்ளனர்.

இதனால், அமெரிக்கப் படைகள் இருந்த தைரியத்தில் தலிபான்களை எதிர்த்தவர்கள், குடும்பத்துடன் பாதுகாப்பான இடங்களுக்கு தப்பியோடுகின்றனர். தலிபான்களின் தாக்குதல் அதிகமாகி வருவதால், அவர்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்துவதற்காக ஆப்கானிஸ்தான் அரசு இரவுநேர ஊரடங்கை அமுல்படுத்தியுள்ளது.

அந்தவகையில் ஆப்கானிஸ்தானிலுள்ள 31 மாகாணங்களில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் (24 மணி நேரத்தில்) 262 தலிபான் தீவிரவாதிகளை இராணுவத்தினர் சுட்டுக் கொன்றுள்ளதுடன், 176 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் அந்நாட்டு இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். மேலும், தீவிரவாதிகள் பதுக்கி வைத்திருந்த 21 வெடிகுண்டுகள் செயலிழக்க வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2021, ஜூலை 27ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# சாமி வரம் கொடுத்தாலும்...

வவுனியா ஓமந்தை பகுதியில் வவுனியா பிரதேச ஊடகவியலாளர்களுக்கு வழங்குவதற்கென அடையாளம் காட்டப்பட்டிருந்த காணிகளில் காணப்பட்ட பாதீனியம் மற்றும் முட்செடிகளை அகற்றி சுத்தம் செய்த ஊடகவியலாளர்களை ஓமந்தை பொலிஸார் பொலிஸ் நிலையம் அழைத்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

வவுனியா, ஓமந்தை, வேப்பங்குளம் அரச வீட்டுத்திட்டத்திற்கு அருகாமையில் வவுனியா பிராந்திய தமிழ் ஊடகவியலாளர்களுக்கு அரசாங்கத்தின் வீட்டுத்திட்டம் வழங்குவதற்காக 2018 ஆம் ஆண்டு அப்போதைய பிரதேச செயலாளரால் காணி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த காணியில் ஊடகவியலாளர்களுக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபையினூடாக வீட்டுத் திட்டத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கும், ஊடகவியலாளர்களுக்கும் பிரதேச செயலாளரால் கடிதம் வழங்கப்பட்டது. வனவளத் திணைக்களத்திடமிருந்து குறித்த காணியை ஊடகவியலாளர்களின் வீட்டுத் திட்டத்திற்காக விடுவிக்குமாறும் பிரதேச செயலாளரால் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி குறித்த காணியை வனவளத் திணைக்களத்திடமிருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வவுனியா ஊடகவியலாளர் சங்கத்தினர் ஜனாதிபதி செயலகம், காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு, வனவள பாதுகாப்பு அமைச்சு, வனவள ஆணையாளர் நாயகம் ஆகியோரிடம் கடிதம் மூலம் கோரியிருந்தனர். அதற்கமைவாக காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு மற்றும் ஜனாதிபதி செயலகம் என்பவற்றிலிருந்து காணிகளை விடுவித்து ஊடகவியலாளர்களுக்கு வழங்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதற்கமைவாக வனவளத் திணைக்களத்தின் அனுமதியுடன் ஊடகவியலாளர்கள் குறித்த பகுதியிலிருந்த காடுகளை 2018 ஆம் ஆண்டு டோசர் மூலம் துப்புரவு செய்து அதன் பின், தமது காணிகளுக்கான கம்பி, கட்டைகளை இட்டு சுத்தம் செய்து பராமரித்தனர். தேசிய வீடமைப்பு அதிகார சபையின் வீடமைப்புத் திட்டத்தை வழங்குவதற்காக அப்போதைய அமைச்சரால் அடிக்கல் நாட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது, நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்ப நிலை காரணமாக இந்த வீட்டுத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் நடவடிக்கைகள் இடம் பெறவில்லை. இந்நிலையில், வவுனியா பிரதேச செயலாளர் மாற்றம் பெற்று புதிய பிரதேச செயலாளராக நா.கமலதாசன் பதவியேற்ற பின்னர் குறித்த காணிகளை ஊடகவியலாளர்களுக்கு வழங்க முடியாது என்று தெரிவித்துள்ளார்.

ஆனால், ஊடகவியலாளர்கள் ஒவ்வொருவரும் பெருமளவு பணத்தை செலவு செய்து காணிகளை சுத்தம் செய்து வேலிகள் இட்டபின் பிரதேச செயலாளர் இவ்வாறு நடந்து கொள்வது தவறு எனவும், தமது காணிகளை விடுவிக்குமாறும் பிரதேச மற்றும் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் கோரியிருந்தனர்.

இதன்போது அங்குள்ள அதிகாரிகள் சிலரும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் குறித்த காணியை ஊடகவியலாளர்களுக்கு வழங்கலாம் எனக் கூறிய போதிலும், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பேசப்பட்ட பல விடயங்களைத் தவிர்ந்து காணி வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்படும் கருத்துகளை முதன்மைப்படுத்தி கூட்டறிக்கைகள் எழுதப்பட்டு, குறித்த காணியை வழங்குவதற்கு முட்டுக் கட்டைகள் போடப்பட்டு வருவதாக ஊடகவியலாளர்கள் தரப்பில் சொல்லப் படுகிறது.


குறித்த காணியை விடுவிக்குமாறு பிரதேச செயலாளர் நா.கமலதாசனிடம் ஊடகவியலாளர்கள் எழுத்து மூலம் கோரியபோதிலும், இதுவரை அதற்கான பதில் கிடைக்கவில்லை. இந்நிலையிலேயே ஊடகவியலாளர்கள் தாம் பணம் கொடுத்து துப்புரவு செய்த காணிகளுக்குள் முளைத்த பாதீனியம் மற்றும் பற்றைகளை அகற்றி சுத்தம் செய்தபோது அங்கு சென்ற அப்பகுதி கிராம அலுவலர், குறித்த வேலைகளைச் செய்ய வேண்டாம் எனக் கூறியதுடன், பிரதேச செயலாளரின் அறிவுறுத்தலின் பேரில் ஓமந்தை பொலிஸில் முறைப்பாடும் செய்துள்ளார்.

முறைப்பாட்டுக்கு அமைவாக குறித்த காணிக்கு வருகை தந்த பொலிஸார் ஊடகவியலாளர்களை பொலிஸ் நிலையம் அழைத்து வாக்கு மூலத்தை பதிவு செய்ததுடன், பிரதேச செயலாளரை சந்தித்து வீட்டுக் காணி தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

கடந்த 2018 ஆம் ஆண்டு தமக்கு வழங்கப்பட்ட காணியை மீள கையகப்படுத்த பிரதேச செயலாளர் எடுக்கும் முயற்சி தொடர்பில் ஊடகவியலாளர்கள் அதிருப்தி மற்றும் சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன், இது தொடர்பில் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் மற்றும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தெரிந்தும் அவர்கள் மௌனம் காப்பது குறித்தும் ஊடகவியலாளர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

ஏனைய மாவட்டங்களைப் போன்றே வவுனியா மாவட்ட செய்தியாளர்களும் மிகவும் சிரமங்களுக்குள்ளாகிய நிலையில் தமது பணிகளை செய்கின்றனர். போரினால் பாதிக்கப்பட்ட சமூகமொன்றிலிருந்து, அச்ச நிலைமை நீங்கி அவர்கள் இப்போதே சுதந்திரமாக செயற்பட தொடங்கியுள்ளனர். அவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத்தை தட்டிப் பறிக்க முயல்பவர்கள் யார்? அதற்கான பின்னணி என்ன என்பதை தேடவேண்டியிருக்கிறது.

26 ஊடகவியலாளர்களுக்கு தலா நான்கு பரப்பு வீதம் வழங்கப்படவுள்ள காணியை வழங்க மறுக்கும் பிரதேச செயலாளர், அதற்கான காரணத்தைக் கூறவேண்டும். வடக்கு மாகாண ஆளுநர் இதனை வழங்க வேண்டாமென கூறியிருந்தால் அல்லது உயர் அரச அதிகாரிகளிடம் இதுகுறித்து அறிவுறுத்தல் வந்திருந்தால் அதனை பகிரங்கப்படுத்த வேண்டும். ஊடகவியலாளர்களுக்கு கிடைத்திருக்கும் அந்த உரிமையை தட்டிப்பறிப்பது எந்த விதத்தில் நியாயமானது? ஊடகர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படுமென சொல்லும் அரசு, அவையெல்லாம் வெறும் வாய்ப்பேச்சுதான் என்பதை வவுனியா ஊடகவியலாளர்களின் இப்போதைய நிலைமையில் இருந்து உணரமுடிகின்றது. இது, சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி குறுக்கே நிற்பது போலவல்லவா இருக்கிறது.



எம்.ஐ.முபாறக்
(ஊடகவியலாளர்)

தொடர் 05

# தமிழர்களைக் காப்பாற்றிய சிங்களவர்கள்-முஸ்லிம்கள்

## தமிழ்ப் பெண்களை பாதுகாத்த பௌத்த பிக்கு...

## முதியவரை காப்பாற்றிய சிங்களப் பெண்கள்...

தொடர்ச்சியாக 7 நாட்கள் கலவரம். நடத்தியவர்கள் சில சிங்கள இனவாதிகள். அன்றைய அரசின் கைக்கூலிகள்.

பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு இதில் உடன்பாடில்லை. இப்படியான கொடூரத்தை அவர்கள் விரும்பவில்லை. முடிந்தவரை தமிழர்களுக்கு உதவினார்கள்.

சிங்கள வீடுகள் பலவற்றில் அதிகமான தமிழர்கள் அன்று வாடகைக்கு...

அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தவர்கள் வீட்டு உரிமையாளர்களே.! அந்த சிங்களவர்களே.!

தமிழர்களை அனுப்பிவிடுமாறு காடையர்கள் அந்த சிங்களவர்களுக்கு மிரட்டல். புலிகளுக்கு அடைக்கலம் கொடுத்திருப்பதாகக் குற்றச்சாட்டு.

இருந்தும்,பாதுகாத்தனர். ஓரிரு நாட்கள். அந்த வீடுகளின் சீலிங் உள்ளே புகுத்தி.

பகல் முழுவதும் சீலிங்கிற்கு உள்ளே. இரவில் கீழே. மூன்று நேர உணவும் சிங்களவர்களிடமிருந்தே! வீட்டு உரிமையாளர்களிடமிருந்தே!

இப்படித்தான் ஒரு வீடு.

எல்லோரும் சிதறி ஓட...ஒருவர் மட்டும் வீட்டில். சீலிங்கிற்கு உள்ளே...

வருகிறார்கள் காடையர்கள். உடைக்கிறார்கள் கதவை. எரிக்கிறார்கள் வீட்டை. பெற்றோல் குண்டை வீசி...

மேலே இருப்பவருக்குத் தெரியாது. கீழே நடப்பது. மேலே அவர் இருப்பது தெரியாது. இந்தக் காடையர்களுக்கு...

கீழே இறங்குகிறார். அவர்கள் சென்றதும்...

எல்லாம் எரிந்து சாம்பல். உடைமைகள் எல்லாம். அதற்கு மேல் அங்கு இருக்கவில்லை அவர்.

பல தமிழர்களை பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு சென்றவர்களும் சிங்களவர்களே.!

கொள்ளுப்பிட்டியில் ஒரு சம்பவம்...

கடைகளை எரித்து நாசம் பண்ணிக்கொண்டு இருக்கிறார்கள் காடையர்கள்.

அதில் ஒன்று சரஸ்வதி லொட்ஜ். பிரபல்யமான தோசைக்கடை அது. இன்றும்தான்.

உடைக்கிறார்கள் அதை. உள்ளே ஒரு முதியவர். எல்லோரும் தப்பியோட.... அவர் மட்டும் அதற்குள் ஒளிந்த நிலையில்...

சிக்குகிறார் இப்போது காடையர்களிடம்...

முதியவர் என்று கூடப் பார்க்கவில்லை. கடும் தாக்குதல். வழிந்தோடுகிறது இரத்தம்.

மன்றாடுகிறார். உயிர்ப் பிச்சை கேட்டு...

விடுவதாக இல்லை அவர்கள். கொல்வதற்குத் தயார்.

வேடிக்கை பார்க்கிறது ஒரு கூட்டம். பெரும் கூட்டம். சிங்கள மக்களே அவர்கள்.

அதற்குள் பல பெண்கள். சிங்களப் பெண்கள். சிங்கப் பெண்கள். மனிதாபிமானமிக்க பெண்கள்.

பாய்ந்து செல்கிறார்கள் முன்னே. காடையர்களின் முன்னே.

கடும் வாக்குவாதம் அவர்களுடன்...

இறுதியில் தோல்வி. அந்தக் காடையர்களுக்கு... விட்டுச் செல்கிறார்கள் முதியவரை.

உயிர் பிழைக்கிறார் அந்தப் பெரியவர். அந்தப் பெண்களின் துணிச்சலால்... மனிதாபிமானத்தால்...

மற்றுமொரு சம்பவம். இது பம்பலப்பிட்டியில். இராமகிருஷ்ணன் மண்டபத்தில்...

அங்கு அதிகமான பெண்கள். தமிழ்ப் பெண்கள். அகதிகளாக அதற்குள்...

அங்கு ஒரு பௌத்த பிக்கு. அவர்களுக்குப் பாதுக்காப்பாக...

அங்கு வருகிறார்கள் காடையர்கள். பௌத்த பிக்கு ஒருவரின் தலைமையில்...

அவர்களைத் தடுக்கிறார் அந்த பிக்கு. அந்த பெண்களைப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் பிக்கு.

என்னைக் கொன்றுவிட்டு இவர்களைக் கொல்லுங்கள்.

எதிரே போய் நிற்கிறார்.

தன்னுயிரையும் கொடுக்கத் துணிகிறார். அந்தப் பெண்களின் உயிர்களைப் பாதுகாக்க...

இங்கும் கடும் வாக்குவாதம். இரண்டு பிக்குகளுக்குமிடையே...

ஒரு பிக்கு இனவாதியாக... ஒரு பிக்கு மனிதாபிமானியாக...

இறுதியில் வென்றது மனிதாபிமானமே...

பின்வாங்கிச் செல்கிறார்கள் அந்தக் காடையர்கள்.

பாதுகாக்கப்படுகின்றன அந்தப் பெண்களின் உயிர்கள். அவர்களின் கற்புகள். ஒரு பௌத்த பிக்குவால்...

இன்னொரு சம்பவம். கொழும்பு துறைமுகத்தில்...

கப்பலேற்றி அனுப்பப்படுகிறார்கள் தமிழர்கள். வடக்கு - கிழக்கிற்கு அகதிகளாக...

அவர்கள் எல்லோரும் இப்போது கொழும்புத் துறைமுகத்தில்...

உணவில்லை. கடும் பசி. உணவு தேடுகிறார்கள் அங்கு.

அங்கு உணவு விற்பதுண்டு. கேன்டீனில்...

அங்கே சில இளைஞர்கள். சிங்கள இளைஞர்கள். அவர்களிடம் கேட்கிறார்கள் உணவு.

உடனே கொடுக்கிறார்கள். பணம் கொடுக்க வாங்கவில்லை...

ஏன்..?

அது அவர்கள் உண்ண வைத்திருந்த உணவு. மனம் வருந்துகிறார்கள். தமிழர்களுக்கு ஏற்பட்ட நிலை கண்டு...

இது அரசியல் சதி. எங்களுக்கு இதில் உடன்பாடில்லை. நீங்கள் எல்லோரும் திரும்பி வர வேண்டும். மீண்டும் நாம் ஒற்றுமையாக வாழ வேண்டும்.

இவ்வாறு கூறுகிறார்கள் அவர்கள். பெரும் ஆறுதல் தமிழர்களுக்கு. இப்படியும் இருக்கிறார்களே என்று...

இப்படி எத்தனையோ சம்பவங்கள். சிங்களவர்கள் மட்டுமல்ல, முஸ்லிம்களும்தான் உதவினார்கள். அடைக்கலம் கொடுத்தார்கள். காப்பாற்றினார்கள்.

அதையும் தாண்டித்தான் ஏனையவர்கள் கொல்லப்பட்டார்கள்.400 பேர் பலி என்கிறது உத்தியோகபூர்வ அறிக்கை.

இல்லை... 3000 என்கிறது சுயாதீன அறிக்கை.

மேலும், 5000 இற்கும் மேற்பட்ட வீடுகள், கடைகள் எரிப்பு.



கோடிக்கணக்கான சொத்துகள் சூறை.

ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் வடக்கு - கிழக்கிற்கு இடம்பெயர்வு.

அடுத்து என்ன..?

பார்ப்போம் நாளைய தொடரில்..!

[தொடரும்]


# இன்சுலின்: அற்புத மருந்தின் நூற்றாண்டு

நூறு ஆண்டுகளுக்கு முன்பு இன்சுலின் கண்டுபிடிக்கப்பட்டதை கொரோனா பெருந்தொற்றுக்கு இடையிலும் கொண்டாடுகிறது அறிவியல் உலகம். காரணம், இருபதாம் நூற்றாண்டின் அற்புதக் கண்டுபிடிப்புகளில் இன்சுலின் முக்கியமானது. நீரிழிவு நோயை எதிர்கொள்ளும் சிறந்த வழிமுறை இது. நவீன மருத்துவத்தில் ஒரு மைல்கல் இது!

இன்சுலினுக்கு முந்தைய காலத்தில், உலக அளவில் கோடிக்கணக்கான நீரிழிவுக் குழந்தைகள் கடுமையான பத்திய உணவுகளால் களைத்துப்போயினர். மரபுவழி மருந்துகளுக்கு நோய் கட்டுப்படாமல், பிறந்த சில வருடங்களில் இறந்துகொண்டிருந்தனர். இன்சுலினுக்குப் பிந்தைய காலத்தில் இந்தத் துயரங்கள் குறையத் தொடங்கின. இன்சுலினைக் கண்டுபிடித்து உலகளாவிய உயிரிழப்பைக் குறைத்தவர்கள் கனடாவைச் சேர்ந்த பேண்டிங் (Banting), பெஸ்ட் (Best) ஆகிய இரண்டு அறிவியலாளர்கள் ஆவர்.

### கனவு காட்டிய கண்டுபிடிப்பு

பேண்டிங் டொரொண்டோ பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற அறுவை சிகிச்சை மருத்துவராவார்.




1920 வரை உடலில் செரிமான நீரைச் சுரக்கும் கணையத்துக்கும், நீரிழிவுக்கும் தொடர்பிருக்கலாம் என்பது மருத்துவர்களின் ஊகம். 1920 ஒக்டோபர் 30ஆம் நாள் இரவில் பேண்டிங் கணையம் குறித்து மோசஸ் பேரோன் எழுதிய கட்டுரையைப் படித்துவிட்டு உறங்கச் செல்கிறார். நள்ளிரவில் அவருக்கு ஒரு கனவு வருகிறது.

அதில் பேண்டிங் கணையத்தை அறுவைச் சிகிச்சை செய்து கணையக் குழாயை முடிச்சுப்போட்டு மூடிவிடுகிறார். அதனால் செரிமான நீர் வழக்கம்போல் முன்சிறுகுடலுக்குச் செல்ல வழியில்லை. சுரப்புச் செல்கள் தாமாகவே அழிந்துவிடுகின்றன. அதே சமயத்தில், கணையத்தில் 'லாங்கர்ஹான் திட்டுகள்' மட்டும் அழியாமல் இருக்கின்றன. கனவு கலைகிறது. இந்தப் பின்னணியில், 'கணையத் திட்டுகளில் நீரிழிவோடு தொடர்புடைய வேதிப்பொருள் இருந்தால், அதனைத் தனியாகப் பிரித்தெடுத்து, நோயாளிகளுக்குக் கொடுத்து, நீரிழிவைக் கட்டுப்படுத்த சாத்தியம் இருக்கிறது' என்று பொறிதட்ட, மருத்துவப் பேராசிரியர் பணியிலிருந்து ஆராய்ச்சியாளராக மாறுகிறார் பேண்டிங். அப்போது அவரிடம் ஆராய்ச்சிக்கூடம் எதுவுமில்லை. ஆகவே, பேராசிரியர் மேக்ளியாடை அணுகுகிறார். அவரும் தன்னுடைய ஆராய்ச்சிக்கூடத்தைக் கொடுத்ததோடு, பெஸ்ட் என்பவரையும் அவருக்கு உதவியாளராக அமர்த்துகிறார்.

பேண்டிங், தன்னுடைய ஆராய்ச்சியின் முதல் படியாக, ஆரோக்கியமான ஒரு நாயின் கணையத்தை அகற்றுகிறார். அதனைத் தொடர்ந்து, அந்த நாய்க்கு இரத்தச் சர்க்கரை அதிகரித்து, கடுமையான நீரிழிவு வந்து இறந்துவிடுகிறது. இப்படிப் பல நாய்களை ஆராய்ந்த பிறகு, நீரிழிவுக்கும் கணையத்துக்கும் உள்ள தொடர்பை உறுதிசெய்கிறார். பிறகு, நாயின் கணையத்திலிருந்து ஒரு திரவத்தைப் பிழிந்து, அதை நீரிழிவு நோயுள்ள நாய்க்கு ஊசி மூலம் செலுத்த, அதன் இரத்தச் சர்க்கரை குறைகிறதா என்பதை பெஸ்ட் கணிக்கிறார். ஆரம்பத் தோல்விகளுக்குப் பிறகு, 1921 ஜூலையில் அந்த அதிசயம் நிகழ்கிறது!

கணையத் திரவம் செலுத்தப்பட்ட நாயின் இரத்தச் சர்க்கரை குறையத் தொடங்குகிறது. அதே போன்ற திரவத்தைப் பல நாய்களிடம் சோதித்துப் பார்க்கிறார். எல்லா நாய்களுக்கும் இரத்தச் சர்க்கரை குறைவது உறுதியாகிறது.

(தொடர்ச்சி 5 ஆம் பக்கம் பார்க்க...)

## மக்கள் கடிதம்

*வாசகர்களே ,*

*உங்கள் ஊரிலுள்ள குறைநிறைகளை, பிரச்சினைகளை எங்களுக்குத் தபால் மூலமாகவோ,மின்னஞ்சலினூடாகவோ எழுத்துமூலம் தெரிவியுங்கள்.*

*பிரதி சனிக்கிழமைகளில் எமது பத்திரிகையில் வெளிவரவுள்ள மக்கள் கடிதம் பகுதியில் அவற்றைப் பிரசுரிப்போம்.*

thamilaneditor@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அல்லது 0761393805 என்ற தொலைபேசி இலக்கத்தின் வட்ஸப்புக்கு அனுப்பலாம்.

# பூநகரி - கௌதாரிமுனையில் கடலட்டை பண்ணைகளை அமைக்கும் பணிகள் ஆரம்பம்





பூநகரி, கௌதாரிமுனையில் கடலட்டைப் பண்ணைகளை அமைக்கும் பணிகள் பிரதேச கடற்றொழிலாளர்களினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலுக்கு அமைய நக்டா நிறுவனத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட 16 இடங்களில் பண்ணைகளை அமைக்கும் பணிகள் முதற்கட்டமாக நேற்று (26) ஆரம்பிக்கப்பட்டன.

இதற்கான பயனாளர்கள் கௌதாரிமுனை கடற்றொழிலாளர் சங்கத்தினால் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன், அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் பண்ணைகளை அமைப்பதற்குத் தேவையான வலைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், ஒரு தொகுதி வலைகள் நேற்று வழங்கிவைக்கப்பட்டன.

பொருத்தமான இடங்கள் தெரிவுசெய்யப்பட்டு கடலட்டைப் பண்ணைகளை அமைக்கும் செயற்பாடுகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் திட்டமிடலில் வடக்கு மாகாணத்தில் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், கௌதாரிமுனை பிரதேசத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களும் நிரந்தர வாழ்வாதாரத்தினை வழங்கக் கூடிய கடலட்டைப் பண்ணைகளை அமைப்பதில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். அதனால், இதுவரை சுமார் 30 இற்கும் மேற்பட்டவர்கள் கடலட்டைப் பண்ணைகளுக்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர். இந்நிலையில் இதுவரை பொருத்தமான 16 இடங்களை நக்டா எனப்படும் தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபை அடையாளப்படுத்தியுள்ள நிலையில், அவற்றில் பண்ணைகளை அமைக்கும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# சகல தேசிய பூங்காக்களும் மீளத் திறப்பு

வனஜீவராசிகள் திணைக்களத்தின் கீழுள்ள அனைத்து தேசிய பூங்காக்களும் நேற்று (26) முதல் மீண்டும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக திறக்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றி இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. கொரோனா தொற்று நிலைமை காரணமாக குறித்த தேசிய பூங்காக்கள் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தன.

எனினும் யால, உடவளவ, ஹோட்டன் சமவெளி மற்றும் மின்னேரியா ஆகிய தேசிய பூங்காக்கள் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக ஏற்கனவே திறக்கப்பட்டுள்ளன.

இதனிடையே, மிரிஸ்ஸ கடலில் திமிங்கிலங்களைப் பார்வையிட சுற்றுலாப் பயணிகளுக்கு நேற்று (26) முதல் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் வயது எல்லையை 18 ஆக வரையறுக்க நடவடிக்கை

## அமைச்சரவைப் பத்திரம் தயாராவதாக அமைச்சர் பியல் தகவல்



சிறுவர்களை வேலைகளுக்கு அமர்த்த முடியுமான ஆகக்குறைந்த வயதெல்லையை 18 ஆக உயர்த்துவதற்கான அமைச்சரவைப் பத்திரமொன்றைத் தயாரித்து வருவதாக மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் வீட்டு வேலைக்காக அமர்த்தப்பட்டிருந்த சிறுமி எரிகாயங்களுடன் இறந்த சம்பவத்தைத் தொடர்ந்து, வயது குறைந்த சிறுவர்களை வேலைகளுக்காக அமர்த்துவது தொடர்பாக சமூகத்தில் விவாதங்கள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான சம்பவங்களின் அடிப்படையில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதைத் தடுக்க, ஆகக் குறைந்த வயதெல்லையை 18 ஆக உயர்த்துவதில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வைத்தியசாலையில் தாதியை தாக்கிய பிக்கு கைது



தாதி உத்தியோகத்தர் ஒருவரை பீங்கான் கோப்பையால் தாக்கிக் காயப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் பௌத்த பிக்கு ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று ஆனமடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த தாதி குருநாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

ஆனமடுவ ஆதார வைத்தியசாலையில் கொரோனா சிகிச்சை விடுதிப் பிரிவில் பணியாற்றி வரும் தாதி ஒருவர் மீதே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

காய்ச்சல் காரணமாக ஆனமடுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஆனமடுவ குமாரகம விகாரையின் பிக்கு ஒருவர் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

பி.சி.ஆர். பரிசோதனையின்போது வலி ஏற்பட்டதால் ஆத்திரமடைந்த பிக்கு அருகிலிருந்த பீங்கான் கோப்பையை எடுத்து தாதியின் தலையில் அடித்தார்.

இதன்போது தலையில் காயங்களுக்குள்ளான நிலையில் தாதி நிலத்தில் விழுந்தார்.

இதையடுத்து வைத்தியசாலையின் தாதியர்கள் உள்ளிட்ட சேவையாளர்கள் தாதியை உடனடியாக மீட்டு சிகிச்சைக்குட்படுத்தினர்.

அத்துடன் குறித்த பிக்குவையும் உடனடியாக பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த தாதி மேலதிக சிகிச்சைக்காக குருநாகல் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப் பட்டார்.

## 1,018 பேருக்கு கொரோனா

நாட்டில் மேலும் ஆயிரத்து 18 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இவர்கள் அனைவரும் புதுவருட கொவிட் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், அதன்படி, இந்நாட்டு மொத்த கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 297,534 ஆக அதிகரித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது என்றார்.

## இன்சுலின்: அற்புத மருந்தின் நூற்றாண்டு (4ஆம்பக்கத் தொடர்ச்சி...)

ஆரம்பத்தில் பேண்டிங் தயாரித்த கணையத் திரவம் சுத்திகரிப்பு இல்லாமல் இருந்ததால், நாய்களுக்கு ஊசி போட்ட இடத்தில் வீக்கம் ஏற்பட்டு காய்ச்சல் வந்தது. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அறிவியலர் ஜேம்ஸ் கோலிப், பேண்டிங் தயாரித்த கணையத் திரவத்தைச் சுத்தப்படுத்திக் கொடுக்கிறார்.

ஆராய்ச்சியின் அதிமுக்கியமான அடுத்த பாய்ச்சலுக்குத் தயாராகிறார் பேண்டிங். நீரிழிவினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்த லெனார்ட் தொம்சன் என்ற 14 வயதுச் சிறுவனுக்குச் சுத்திகரிக்கப்பட்ட திரவத்தை முதன்முதலில் செலுத்துகிறார். அவனுக்கும் நீரிழிவு கட்டுப்படுகிறது. அதன்மூலம், ‘கணையத்தில் இன்சுலின் சுரக்காததுதான் நீரிழிவுக்குக் காரணம். அதற்கான தீர்வு இன்சுலினைச் செலுத்துவது’ என்று பேண்டிங் உறுதிசெய்கிறார். இது நடந்தது 1922 ஜனவரி 23இல். இந்தச் சாதனைக்கு 1923இல் பேண்டிங் நோபல் பரிசு பெறுகிறார்.

**இன்சுலின் ஓர் அருமருந்து**

பேண்டிங், தான் கண்டுபிடித்த திரவத்துக்கு ‘ஐலெடின்’ (Isletin) என்று பெயரிடுகிறார். ஆனால், அவருடைய ஆராய்ச்சிக்கு உதவிய மேக்ளியாட் ‘இன்சுலின்’ (Insulin) என்று அதை மாற்றிவிடுகிறார். அதனைத் தொடர்ந்து லில்லி என்ற மருந்து நிறுவனம், வணிக முறையில் இன்சுலினைத் தயாரிக்கத் தொடங்குகிறது. நாயிடம் பெறப்பட்ட இன்சுலினுக்கு ஒவ்வாமை குணங்கள் தெரிய ஆரம்பித்ததால் அடுத்த முயற்சியாக மாடு/பன்றியின் கணையத்திலிருந்தும் இன்சுலினைத் தயாரித்தனர். 1978இல் ‘டி.என்.ஏ. மறுஇணைப்பு தொழில்நுட்ப’த்தைப் (DNA recombinant technology) பயன்படுத்தி மனித இன்சுலினைப் போன்று அதன் தயாரிப்புகளை மேம்படுத்தினர்.

இப்போது அதன் வேதிக் கட்டமைப்பில் பல மாற்றங்களைச் செய்து, பலதரப்பட்ட இன்சுலின்களைத் தயாரிக்கின்றனர். உலகில், முதலாம் வகை நீரிழிவு நோயாளிகள் 11 இலட்சம் பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு இன்சுலின்தான் ஒரே மருந்து. இப்போதைய உலகத் தரவுகளின்படி, ஆயுள் முழுவதும் இன்சுலின் போட்டுக்கொண்டவர்கள் 90 வயது வரை வாழ்ந்துள்ளனர்.

இன்சுலின் கண்டுபிடிக்கப்பட்ட 100 ஆண்டுகளுக்குப் பிறகும் அது கடைக்கோடிச் சாமானியருக்கு எளிதாகச் சென்றடைய முடியவில்லை என்பதுதான் துயரம். அதற்குப் பொருளாதாரம் உள்ளிட்ட பல காரணங்கள் தடையாக இருக்கின்றன. வளரும் நாடுகள் பலவற்றுக்கு இன்னமும் இன்சுலின் கிடைக்கவில்லை. உலகளவில் மூன்று மருந்து நிறுவனங்கள்தான் இன்சுலின் தயாரிப்பில் கோலோச்சுகின்றன. அதனால் அதன் விலை சமநிலையில் இல்லை. வளர்ந்த நாடுகளில்கூட நடுத்தரச் சமூகத்துக்கு இன்சுலினை ஆயுளுக்கும் வாங்கும் சக்தி இல்லை.

எல்லோருக்கும் இன்சுலின் கிடைப்பதில்லை. இலவச இன்சுலினுக்குத் தட்டுப்பாடு இருக்கிறது. அதனால் ஏற்படும் மரணங்களைத் தவிர்க்க முடியவில்லை. அரசுகள் இந்தக் குறைபாடுகளைக் களைந்து, இலவசமாக இன்சுலின் கிடைக்கச் செய்வதைக் கொள்கை முடிவாக எடுத்துச் செயற்பட்டால், பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை ஆண்டுதோறும் காப்பாற்றலாம்.

**- கு.கணேசன்,**
**பொதுநல மருத்துவர்**

**(இன்சுலினைக் கண்டுபிடித்து 100 ஆண்டுகளை யொட்டி இந்த கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது )**

# இன்றைய ராசி பலன்

**நாள்: 27.07.2021 செவ்வாய்க்கிழமை**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

**மேடம்** — வாழ்க்கைத்துணையின் ஒத்துழைப்பும், நிதி நிலைமையும் நல்ல நிலையில் இருக்கும். ஆசிரியர்களுக்கு நன்மை.

**ரிஷபம்** — அரசியலில் இருப்பவர்களுக்கு நன்மை கிடைக்கலாம். பணிகளில் உற்சாகம் தேவைப்படும். பணியிடங்களில் புதிய நிலை உருவாகலாம்.

**மிதுனம்** — எதிர்பார்த்த வெளிநாட்டுப் பயண விடயங்களில் நன்மை கிடைக்கப் பெறலாம்.பெற்றோர்களுக்கு பிள்ளைகளின் முயற்சிகளில் மகிழ்ச்சி கிடைக்கும்.

**கடகம்** — தவறிய சந்தர்ப்பங்கள் மீண்டும் கிடைக்கலாம். பண விடயங்களில் அதிக கவனம். செயல்களின் நிறைவேற்றத்தில் உங்கள் எண்ணம் மட்டுமே சிறந்ததாக இருக்கும்.

**சிம்மம்** — இல்லத்தில் அனைவரின் அன்பும்,ஒத்துழைப்பும் ஊக்கத்தை தரும். கவனமாக அனைத்திலும் இருப்பது ஆக்கபூர்வமாகும்.

**கன்னி** — வணிகம் நல்ல நிலைமையில் இருக்கும். பணிகளில் உயர்நிலையில் இருப்பவர்கள் தரும் ஊக்கத்தால் அதிக ஆர்வம் உண்டாகும்.

**துலாம்** — பணியிடங்களில் திறமைக்கு நிர்வாகத்தால் சிறந்த நன்மைகள் கிடைக்கும். வேலைகளில், பதவிகளில் உயர்வு கிடைக்க பெறலாம்.

**விருச்சிகம்** — இறைவணக்கம் நன்மை தரும். வீண் விவாதங்கள், மற்றவர்களின் பிரச்சினைகள் தவிர்ப்பது நன்மை. இல்லத்திலும் அனைவருடனும் அன்பாக இருப்பதும் நன்மை.

**தனுசு** — சந்தைப்படுத்தும் வணிகம் இலாபம் தரும். பணியிடங்களில் பதவியுயர்வு அல்லது ஊதிய உயர்வு கிடைக்கப் பெறலாம். இல்லத்திலும் மேன்மை உண்டாகும்.

**மகரம்** — இறையருளால் இனிமையான நாளாக அமையும். நிதி நிலைமையில் நன்மை. வேலைகளிலும் சிறந்த முறையில் நிறைவேற்றம். தம்பதியரிடையே உறவின் நிலை சிறப்பாக அமையலாம்.

**கும்பம்** — வழக்குகளில் சாதகமான நிலை உண்டாகலாம். பணிகளில் பிரச்சினைகளின் தாக்கம் நீங்கும். இல்லத்தில் ஒற்றுமை அதிகரிக்கும்.

**மீனம்** — பங்குச்சந்தை வர்த்தகத்தில் அதிக கவனம் தேவைப்படலாம். பணியிடங்களில் பொறுமையுடன் பணியாற்றுவது நன்மை.

# அனைத்து அரச ஊழியர்களையும் பணிக்கு அழைக்க நடவடிக்கை

அரச நிறுவனங்களுக்கு குறைந்தளவான பணியாளர்கள் பணிக்கு அழைக்கப்படுவதன் காரணமாக, நிறுவன நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாதுள்ளதாக அமைச்சின் செயலாளர்கள் பலர் அறிவித்துள்ளதாக பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

அனைத்து அரச ஊழியர்களையும் எதிர்வரும் முதலாம் திகதி முதல் மீண்டும் சேவைக்கு அழைப்பது தொடர்பில் சுகாதார அமைச்சின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இதுதொடர்பில் கலந்துரையாடி அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் . அரச நிறுவனங்களின் ஊழியர்கள், தற்போது வாரத்தில் இரண்டு நாட்கள் மாத்திரம் சேவைக்கு அழைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முன்னேஸ்வரம் ஆலய திருவிழா ஆரம்பம்



சிலாபம், முன்னேஸ்வரம் சிவன் ஆலயத்தின் வருடாந்த திருவிழா நேற்று ஆரம்பமாகியது. முன்னேஸ்வரம் சிவன் ஆலயத்தின் திருவிழாவை முன்னிட்டு எதிர்வரும் 17ஆம் திகதி தீ மிதிக்கும் விழா இடம்பெறவுள்ளது.

இம்முறை இடம்பெறவுள்ள தீ மிதித்தல் திருவிழா சுகாதார பாதுகாப்புடன் இடம்பெறவுள்ளதாகவும், திருவிழா காலப்பகுதியில் திருவிழா இடம்பெறும் இடத்தை அண்மித்த பகுதிகளில் தற்காலிக வியாபார நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கப்படவில்லை எனவும் முன்னேஸ்வரம் ஆலயத்தின் பிரதான பூசகர் எஸ்.பத்பநாப குருக்கள் தெரிவித்துள்ளார்.



# ஹிஷாலினியின் மரணத்துக்கு நீதிகோரி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு!

## மரண அறிக்கையிலும் சந்தேகம் என்கிறார் தாய்

*யோ.தர்மராஜ்*

ஹிஷாலினியின் மரணம் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றை முன்வைத்த தாயார், தன் மகளுக்கு நீதி கிடைப்பதோடு, தவறிழைத்தவர்களுக்கு உரிய தண்டனையை பெற்றுக்கொடுக்குமாறு கைக்கூப்பிக் கேட்டுக் கொள்கின்றேன் என தெரிவித்தார்.

டயகம ஹிஷாலினியின் மரணம் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றை முன்வைத்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக் கையில்,

என்னுடைய மகள் வேலைபார்த்த வீட்டில் அதிக துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். சரியாக உணவு வழங்கப்பட்டிருக்கவில்லை. வெளிச்சமில்லாத இருட்டு அறையிலேயே தங்கவைக்கப்பட்டுள்ளார். என் மகளுக்கு தனிமையில் இருக்கவும் இருட்டில் இருப்பதற்கும் பயம். என் மகள் தங்கவைக்கப்பட்டிருந்த அறையை சென்று பார்வையிட்டேன். அந்த அறை சமையலறைக்கு பின்னாலுள்ளது. அந்த அறையில் நாய்கள் கூட தங்காது. செல்வந்தர்கள் வீட்டில் தங்களுடைய நாயைக் கூட அந்த அறையில் தங்க வைக்கமாட்டார்கள்.

நாங்கள் இவ்வாறான வீட்டில் என் மகளுக்கு அதிக பாதுகாப்பு கிடைக்கும் என்றே எதிர்பார்த்தோம். இன்று அது பொய் என்பதோடு, என் மகள் என்னையும் இந்த உலகத்தையும் விட்டுச் சென்றுவிட்டாள். நான் என்னுடைய மகளை மூடிய பெட்டியிலேயே பார்த்தேன். அவளின் மரணத்துக்கு நீதி கிடைக்காதவரை நான் கண்ணீர் சிந்தமாட்டேன் என உறுதியளித்துள்ளேன்.

என் மகளின் மரணத்துக்கு நீதியும் தவறு செய்தவர்களுக்கு உரிய தவறும் கிடைக்க வேண்டும்.

அதனாலேயே நான் இங்கு (மனித உரிமைகள் ஆணைக்குழு) முறைப்பா டொன்றை முன்வைத்துள்ளேன். அதேபோன்று, என்னுடைய மகளின் பிரேத பரிசோதனை அறிக்கையிலும் சந்தேகம் உள்ளது. அதனை ஒரு முஸ்லிம் வைத்தியர் ஒருவர் செய்துள்ளதால் அதனை மீண்டும் செய்து என்ன நடந்துள்ளது என்பதை கண்டறியவேண்டும்.

தவறு இழைத்தவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும். என் மகளுக்கு நீதி கிடைப்பதோடு, தவறிழைத்தவர்களுக்கு உரிய தண்டனையை பெற்றுக் கொடுக்குமாறு கைக் கூப்பிக் கேட்டுக்கொள் கின்றேன். இவர்களுக்கு வழங்கும் தண்டனையால் மற்றவர்கள் பயம் கொள்ள வேண்டும் - என்றார்.



**நாய்கூட தங்காத இருட்டறையில் மகள்**

**உரிய நேரத்துக்கு உணவுமில்லை**

# நக்கில்ஸ் மலைச்சாரலுக்கு பாதிப்பில்லாது மீமுரே கிராம பிரச்சினைகளுக்கு 115 தீர்வுகள்!

## மத்திய மாகாண ஆளுநர் தெரிவிப்பு





(கண்டி நிருபர்)

உலக மரபுரிமைகளில் ஒன்றான நக்கில்ஸ் மலைச்சாரலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மீமுரே கிராமத்தில் ஜனாதிபதியின் கிராமத்துடனான உரையாடல் நிகழ்ச்சியின்போது எழுப்பப்பட்ட 115 கோரிக்கைகளுக்கு தற்போது தீர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார்.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் மத்திய மாகாணத்தில் மீமுரே கிராமத்தில் நடைபெற்ற ஜனாதிபதியின் கிராமத்துடனான உரையாடல் நிகழ்ச்சியின்போது எழுப்பப்பட்ட 115 பிரச்சினைகளுக்கு வழங்கப்பட்ட தீர்வுகளின் முன்னேற்றம் பற்றிய கள ஆய்வொன்று இடம்பெற்றது.

அதில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே, கிராமப்புற வீதிகள் மற்றும் பிற உட்கட்டமைப்புத்துறை இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா, மாணிக்கக்கல் மற்றும் நகை கைத்தொழில், சிறைச்சாலை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் லோகன் ரத்வத்தே, கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான வசந்த யாப்ப பண்டார உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மேற்படி 115 பிரச்சினைகளில் இன்னும் 15 பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டவில்லை என பொதுமக்கள் தெரிவித்ததையடுத்து உலக மரபுரிமைகளில் ஒன்றான நக்கில்ஸ் மலைச் சாரலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அவை தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக குழுவினர் தெரிவித்தனர்.

# லிந்துலையில் ஹிஷாலினிக்கு அஞ்சலியும் நீதிகோரி ஆர்ப்பாட்டமும் முன்னெடுப்பு



(நோட்டன் பிரிட்ஜ் நிருபர் )

டயகம ஹிஷாலினியின் மரணத்திற்கு நீதி கோரி லிந்துலை என்போல்ட் தோட்டத்தில் கவன யீர்ப்பு ஆர்ப்பாட்டமும் அஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றன.

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் வீட்டில் பணிபுரிந்த டயகம பகுதியைச் சேர்ந்த சிறுமி ஹிஷாலினி தீக்காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் சிகிச்சைபெற்ற நிலையில் உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்த சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மலையகம் உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் சிறுமியின் மரணம் தொடர்பில் உரிய விசாரணை வேண்டும், குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கவேண்டும் என பல்வேறு போராட்டங்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில், தொழிலாளர் தேசிய சங்கத்தின் லிந்துலை என்போல்ட் பிரதேச அமைப்பாளர் ரமேஸ் தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதுடன், சிறுமி ஹிஷாலினிவின் ஆத்மா சாந்தியடைய வேண்டி உருவப்படத்துக்கு மெழுகுவர்த்தி ஏந்தி தோட்ட மக்களினால் அஞ்சலி செலுத்தப்பட்டது.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# சிறார்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதை தடுக்க தேசிய பொறிமுறையொன்றை உருவாக்க தீர்மானம்

மலையக சிறார்கள் கூலி வேலைக்கு அமர்த்தப்படுவதை தடுப்பதற்கும், அவர்களுக்கான கல்வி உரிமையை உறுதிப்படுத்தி வளமானதொரு எதிர்காலத்துக்கு அடித்தளமிடுவதற்கான தேசிய பொறிமுறையை உருவாக்கி அதனை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு கண்டியில் நேற்று நடைபெற்ற விசேட கூட்டமொன்றில் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

அரசியல் பிரமுகர்கள், பாதுகாப்புத் தரப்பு, அரச சார்பற்ற பிரதிநிதிகள், பெண்கள் மற்றும் சிறார்களுக்கான குரல் எழுப்பும் தேசிய அமைப்புகளின் பிரதிநிதிகள், சர்வதேச மட்டத்திலான பிரதிநிதிகள், புத்திஜீவிகள் ஆகியோரின் உதவியுடன் இத்திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்த வேண்டும் எனவும், நகர மற்றும் தோட்டப்புற இளைஞர்கள் வலயமைப்பையும் இதில் உள்வாங்க வேண்டும்



எனவும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

மலையக சிறார்கள் மற்றும் மலையகத்திலிருந்து வீட்டு பணிக்குச் செல்லும் பெண்களின் பாதுகாப்பு, நலன்புரி விடயங்கள் உட்பட இதர விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக மலையக மக்கள் உரிமை மையத்தின் ஏற்பாட்டில் கண்டியில் நேற்று விசேட கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் பேராசிரியர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற அமைப்புகளின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

ஹிஷாலினியின் மரணம்போல் மீள் நிகழாமல் இருப்பதற்காக முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டதுடன், கடந்த காலங்களில் இழைக்கப்பட்ட தவறுகள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

மலையக சமுதாயம் இன்னமும் முழுமையாக தேசிய பொறிமுறைக்குள் உள்வாங்கப் படாமையால் வறுமை உட்பட மேலும் பல விடயங்கள் தொடர்கின்றன. சிறார்கள் பாடசாலைகளை விட்டு இடைவிலகி வேலைக்கு செய்வதற்கு இதுவும் ஒரு பிரதான காரணம். அதேபோல் மலையக சமுதாயத்தை தேசிய நீரோட்டத்தில் இணைப்பதற்கும், உரிமை மற்றும் அபிவிருத்தி அரசியலை சமாந்தரமாக முன்னெடுப்பதற்கும் உரிய அரசியல், தொழிற்சங்க தலைமைத்துவம் வழங்கப்படவில்லை என கூட்டத்தில் பங்கேற்ற பிரதிநிதிகள் சிலர் சுட்டிக்காட்டினர்.

எனவே, மலையக சிறார்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதை தடுத்து, அவர்களின் கல்வி உரிமையை உறுதிப்படுத்தி வளமானதொரு அடித்தளத்தை உருவாக்குவதற்கான தேசிய பொறிமுறையை உருவாக்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. அப்பொறிமுறை எவ்வாறு அமையவேண்டும் என்பது தொடர்பில் கருத்துகளை உள்வாங்குவதற்கும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், வீட்டு வேலைக்குச் செல்லும் பெண்களின் தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

# இரத்தினபுரி தமிழ் கல்லூரிக்கு கிடைத்த காணியில் விரைவில் அபிவிருத்தி நடவடிக்கை

## இ.தொ.கா. உப செயலாளர் ரூபன் பெருமாள் உறுதி!

இரத்தினபுரி தமிழ் தேசிய கல்லூரிக்காக பலாங்கொடை பெருந்தோட்டக் கம்பெனியின் மூலம் கிடைக்கப்பெற்ற 5 ஏக்கர் காணியின் நில அளவை செயற்பாடுகள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளர் ரூபன் பெருமாளினால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இரத்தினபுரி இரத்தினேஸ்வரம் ஆலயத்தில் நடைபெற்ற பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து நில அளவை நிகழ்வுகள் ஆரம்பித்துவைக்கப்பட்டன. கடந்த மாதம் இடம்பெற்ற கடும் மழை காரணமாக குறித்த பாடசாலை மண்சரிவுக்குள்ளானதைத் தொடர்ந்து, கல்லூரியின் அதிபர் மற்றும் பாடசாலை சமூகத்தினர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸிடம் வேண்டுகோள் விடுத்ததைத் தொடர்ந்து பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் பலாங்கொடை பெருந்தோட்ட நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி 5 ஏக்கர் காணியினை பெற்றுக் கொடுத்தார்.

அதனைத் தொடர்ந்து பாடசாலைக்கு மூன்று மாடிக் கட்டிடம் ஒன்றை அமைப்பதற்கு நிதி ஒதுக்கீட்டினை பெற்றுத்தருவதாக உறுதியளித்தார்.



அதன்படி குறித்த காணி அளப்பதற்குத் தேவையான நில அளவை வேலைத்திட்டங்கள், பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் மூலம் நிதி ஒதுக்கீட்டிற்கு அமைய நேற்று ஆரம்பித்துவைக்கப்பட்டது.

குறித்த நில அளவை செயற்பாடுகளை தொடர்ந்து காணிக்கான வேலியை அமைக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட ரூபன் பெருமான் அங்கு கருத்து தெரிவிக்கையில்,

இரத்தினபுரி தமிழ் சமூகத்திற்கு நீண்டகால குறைபாடாகக் காணப்பட்ட சகல வசதிகளுடன் கூடிய தமிழ் பாடசாலை யொன்றை அபிவிருத்திசெய்யும் நடவடிக்கை இலங்கை தொழிலாளர் காங்கிரஸினால் கூடிய விரைவில் ஆரம்பித்து வைக்கப்படும் என உறுதியளித்தார்.

# கடும் குளிருடன் பனிப்படலம்; வாகன சாரதிகளுக்கு அறிவுரை



(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பலாங்கொடை மற்றும் சுற்றுப் பிரதேசங்களில் தற்போது கடும் குளிரான காலநிலை நிலவுகிறது. அத்துடன், இப்பிரதேசத்தில் மந்தமான காலநிலை நிலவுகிறது. இரவு மற்றும் அதிகாலைவேளைகளில் இந்நிலைமை அதிகரித்து காணப்படுவதகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இரத்தினபுரி - பதுளை வீதியில் எல்லெபொல ஹொரகெட்டிய பம்பஹின்ன பெலிஹுல் ஓயா ஹல்தும்முல்ல பெரகல பிரதேசம் வரை அடிக்கடி பனிப்படலம் படர்வதால், இவ்வீதி வழுக்கும் தன்மை அடைவதாலும் இவ்வீதியில் பயணிக்கும் சாரதிகள் வாகனங்களை அவதானமாக ஓட்டுமாறும் பனிசார்ந்த இடங்களில் வாகன விளக்குகளை ஒளிர விட்டு பயணிக்குமாறும் பொலிஸார் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

# பிளாஸ்ரிக் கழிவுகளை பொறுப்பாக அகற்றி நிர்வகித்தால் அது பெரும் வளமாகும்

உலகில் வளரும் பல நாடுகள் முறையற்ற கழிவு நிர்வகிப்பு பிரச்சினையை எதிர்கொள்கின்றன. இலங்கையிலும் நிலைமை வேறுபட்டதல்ல. நாட்டில் ஒவ்வொரு நபரும் ஒரு நாளைக்கு சுமார் 0.64 கிலோகிராம் குப்பைகளை அப்புறப்படுத்துகிறார்கள். இது ஆண்டுதோறும் 4.8 மெட்ரிக் தொன் குப்பைகளை அவர்கள் சேர்க்கிறார்கள். இது பொறுப்பற்ற பிளாஸ்ரிக் கழிவுகளை அகற்றும் பிரச்சினையின் ஒரு பகுதியாக மாறிவிட்டது.





தற்போது இலங்கையில் ஆண்டுதோறும் பிளாஸ்ரிக் நுகர்வு 16 வீதம் அதிகரித்து 2,65,000 மெட்ரிக் தொன்களாக அதிகரித்து வருகிறது. எனவே, பிளாஸ்ரிக் கழிவு பயன்பாட்டைக் குறைத்தல், மீள்பயன்பாடு மற்றும் நிலையான மீள்சுழற்சி ஆகியவற்றிற்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். இலங்கையை பசுமை பொருளாதாரமாக மாற்ற தேசிய கொள்கைகளுடன் செயல்படும் சேகரிப்பாளர்களையும் அமைப்புகளையும் அடையாளம் காண்பது முக்கியம்.

இரத்தினபுரி மாவட்டத்தில் நிறுவப்பட்ட கோ மீள்சுழற்சி மையம் (Go Recycling Hub) - (GoR) என்பது சிலோன் எமரல்ட் வே நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சியாகும். வீட்டுக் கழிவுகளை பிரித்தல் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுகளை அகற்றுவது குறித்து அவர்கள் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு (CSR) நடவடிக்கைகள், பிளாஸ்ரிக்குகளை மீள் கொள்முதல் செய்தல் மற்றும் வீடுகள், பாடசாலைகள், மருத்துவமனைகள், பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் பொது இடங்களிலிருந்து அதிகளவு பிளாஸ்ரிக் ஆகியவற்றை சேகரித்தல் மற்றும் சேகரிக்கப்படும் மீள்சுழற்சிக்காக அனுப்ப நடவடிக்கை எடுக்கும்.

இது குறித்து Go Recycling Hub பணிப்பாளர் மங்கள பண்டார கூறுகையில், ''வசதிகளை வழங்கும் நிறுவனமாக பிளாஸ்ரிக் கழிவுக ளுக்கு புத்துயிரை அளிப்பதற்கு நாங்கள் முயற்சிசெய்கிறோம். அதனால்தான் 2020ஆம் ஆண்டில் புழசு திட்டம் மற்றும் மூலப்பொருட்களை மீளப் பெற்றுக்கொள்ளும் வசதி (Material Recovery Facility - MRF) ஆகியவற்றை நாங்கள் தொடங்கினோம். PET (தண்ணீர், சோடா மற்றும் குளிர்பான போத்தல்கள் போன்றவை) மற்றும் PP (மாஜரின் கொள்கலன்கள் மற்றும் யோகட் கோப்பை), HDPE மற்றும் LDPE (உதாரணம்: கலப்பு ஷாம்பு / கண்டிஷனர், தூய்மையான போத்தல்கள் மற்றும் பொலித்தீன் பைகள் உட்பட) போன்ற பிளாஸ்ரிக்குகளையும் நாங்கள் சேர்க்கிறோம். கொக்கோ-கோலா மற்றும் ஈகோ ஸ்பிண்ரில்ஸ் இணைந்து அமைத்த வசதியைப் பயன்படுத்தி இந்தப் பொருட்கள் மீள்சுழற்சி செய்யப்படுவதை நாங்கள் உறுதிசெய்கிறோம். இரத்தினபுரி மாவட்ட மக்களுக்கு குப்பைகளை சேகரிப்பதன் மூலம் வேலைவாய்ப்பை உருவாக்குவதே எங்கள் நோக்கம்'' - என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''இரத்தினபுரி மாவட்டத்தில் அதிகரித்துவரும் பிளாஸ்ரிக் கழிவுப் பிரச்சினையை அடையாளம் கண்ட பின்னர் பணிக்குழு இந்த நடவடிக்கையை ஆரம்பித்தது. எனவே, நிலப்பரப்புகளில் அல்லது நீர் நிலைகளில் கொட்டப்பட்ட அல்லது எரிக்கப்பட்ட பிளாஸ்ரிக் கழிவுகளை சேகரிப்பதற்காக குப்பைத்தொட்டிகள் திட்டம், பை திட்டம், பிற விநியோக வலையமைப்பு திட்டம் மற்றும் கிராமப்புற திட்டம் ஆகிய நான்கு திட்டங்களை 'GoR' அறிமுகப்படுத்தியது. நாங்கள் தற்போது இரத்தினபுரியில் ஏழு நகரங்களில் செயற்பட்டு வருகிறோம், 2021ஆம் ஆண்டின் இறுதிக்குள் இந்தத் திட்டத்தை மேலும் ஏழு நகரங்களுக்கு கொண்டுசெல்வதே எங்கள் குறிக்கோள்.

இந்த குப்பைத் தொட்டி திட்டத்தின் மூலம் கொக்கோ-கோலாவுடன் இணைந்து இரத்தி னபுரி மாவட்டத்தில் 15 பிளாஸ்ரிக் சேகரிப்புத் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. பை திட்டத்தின் மூலம் சிறிய மற்றும் பெரிய கடைகளுக்கு சுமார் 120 PET போத்தல்களை (5 கிலோ) சேமிக்கக்கூடிய பெரிய பைகளை GoRகள் வழங்கியுள்ளது. கடை உரிமையாளர்களுக்கு ஊக்கத் தொகையாக சேர்க்கப்படும் இந்த பிளாஸ்ரிக், அவர்களிடமிருந்து ஒரு கிலோவுக்கு 20-25 ரூபா வரை வாங்கப்படுகிறது.

'GoR' திட்டத்தின் ஊடாக பிரதேச சபை மற்றும் மாநகர சபைகளிடமிருந்து பிளாஸ்ரிக் கழிவுகளை அவர்களின் பிற விநியோக வலையமைப்புகள் திட்டத்தின் மூலம் சேகரிக்கிறது. நாங்கள் சிறிய அளவிலான பிளாஸ்ரிக் கழிவு சேகரிப்பாளர்களிடமிருந்து பிளாஸ்ரிக்கை சேகரித்து, ஒரு கிலோ PET பிளாஸ்ரிக்கிற்கு 35 ரூபா செலுத்துகிறோம். நாங்கள் சேகரிப்பாளர்களுக்கு முறையாக பணம் செலுத்துவதால், எங்கள் சேகரிப்பாளர் வலையமைப்பு விரிவடைந்துள்ளது, மேலும் சேகரிக்க போதுமான பிளாஸ்ரிக் கழிவுகள் எங்களிடம் உள்ளன. பெப்ரவரியில் நாங்கள் சுமார் 1000 கிலோ பிளாஸ்ரிக்கை பெற்றோம், ஜூன் மாதத்தில் சுமார் 3000 - 4000 கிலோ பிளாஸ்ரிக் கழிவுகளை சேகரிக்க முடிந் தது. இது அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதோடு, அதிகமான பிளாஸ்ரிக் கழிவுகளை எங்கள் தேவைக்கேற்ப கொண்டுவர அவர்களை ஊக்குவிக்கும்.

கொக்கோ-கோலா, ஈகோ ஸ்பிண்டில்ஸ், பிராந்திய சுகாதார மருத்துவ அலுவலகம் (MOH), பொதுச் சுகாதார ஆய்வாளர் (PHI), கிராமசேவகர் அலுவலகம் மற்றும் மத்திய சுற்றுச்சூழல் ஆணையம் (CEA) இரத்தினபுரி மாகாண அலுவலகம் ஆகியவற்றின் உதவியுடன் புழசு இன் புதிய கிராமப்புற திட்டம் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. பல்வேறு நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து வீடுகள் மற்றும் பாடசாலைகளில் பொறுப்பான மீள்சுழற்சி குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதே அவர்களின் நோக்கம். இங்கு வீட்டிலுள்ள பிளாஸ்ரிக் கழிவுகளை கொண்டுவர குழந்தைகளை உற்சாகப்படுத்துவதற்காக பாடசாலைகளில் போட்டிகளும் நடத்தப்படுகின்றன.

மாவட்டத்தின் கிராமப்புறங்களில் பலருக்கு பல்வேறு காரணங்களால் வாழ ஒரு நிலையான வருமானம் இல்லை. மேலும் இது COVID-19 ஆல் மேலும் மோசமடைந்துள்ளது. எனவே, வேலைவாய்ப்பை அதிகரிப்பதும் இந்த புதிய திட்டத்தின் ஒரு பகுதியாகும் என மங்கள வலியுறுத்தினார்.

அவர்களின் சேவைகளை விரிவுபடுத்துவதற்காக கொக்கோ-கோலா நிறுவனத்தினால் ஒரு சேகரிப்பு மத்திய நிலைய அலகு அலுவலகமாகவும் மற்றும் Bailing Machine மற்றும் அனைத்து வகையான பிளாஸ்ரிக்களையும் சிறு துண்டுகளாக (flakes) உடைக்கக்கூடிய இயந்திரத்துடன் 20 அடி நவீனமயப்படுத்தப்பட்ட கொள்கலனையும் வழங்குகிறது. இது தயாரிப்புகளுக்கான மூலப்பொருளாக மீள்சுழற்சிசெய்வதற்கு முன்னர் பிளாஸ்ரிக் கழிவுகளுக்கு குறிப்பிடத்தக்க மதிப்பைச் சேர்க்கக்கூடிய ஒரு விரிவான MRF வசதியை நிறுவ அவர்களின் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பை 'GoR' வழங்குகிறது.

ஜூலை 2021க்குள் அவர்கள் தங்கள் பிளாஸ்ரிக் Crusherஐ பயன்படுத்தி PET போத்தல்களை நெரித்து இலங்கையின் மிகப்பெரிய பிளாஸ்ரிக் மீள்சுழற்சி நிறுவனமான ஈகோ ஸ்பிண்டில்ஸுக்கு விற்பனைசெய்வார்கள். பிளாஸ்ரிக் துண்டுகளிலிருந்து நேரடியாக நூல் தயாரிக்கும் திறன்கொண்ட உலகில் தற்போதுள்ள இரண்டு தொழிற்சாலைகளில் ஈகோ ஸ்பிண்டில்ஸ் ஒன்றாகும்.

பிளாஸ்ரிக் கழிவுகளை கட்டுப்படுத்து வதற்கான நடவடிக்கைகள் நடந்துவருகின்ற போதிலும், கழிவு சேகரிப்புப் பணியிலுள்ள சிக்கல்களை அரச தரப்பு கவனித்து வருகிறது. சாதாரண சேகரிப்பாளர்கள் வீதிகளிலுள்ள மற்றும் அவர்களுக்கு நேரடியாக வழங்கப்படும் பிளாஸ்ரிக் குப்பைகளை சேகரிப்பதைத் தவிர நீர்நிலைகளில் கொட்டப்படும் பிளாஸ்ரிக் கழிவுகளை அவர்கள் சேகரிப்பதில்லை. குப்பை சேகரிப்பாளர்கள் சரியான நேரத்தில் வீடுகளிலிருந்து பிளாஸ்ரிக் கழிவுகளை சேகரிக்காதபோது, மக்கள் அதை எரிக்க முயற்சிக்கின்றனர் என மங்கள சுட்டிக்காட்டினார். தினசரி குப்பை சேகரிப்புக்கு மேலதிகமாக, 'GoR' திட்டம் ஒவ்வொரு இரண்டு மாதங்களுக்கும் ஒரு பெருநிறுவன சமூகப் பொறுப்பாக, ஆறுகள் மற்றும் பொது இடங்களிலிருந்து பிளாஸ்ரிக் சேகரிப்புத் திட்டங்களை மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.






DIMO நிறுவனம், Innovation ThreeSixty நிறுவனத்துடன் இணைந்து டிஜிட்டல் தீர்வுகள் நிறுவனமான Azend Technologiesஇனை அறிமுகப்படுத்துவது தொடர்பில் அண்மையில் அறிவித்தது. இது டிஜிட்டல் தீர்வுகள் பரப்பில் DIMO நிறுவனத்தின் நுழைவை குறிப்பதுடன், DIMOவின் பல்வகைப்படுத்தல் முயற்சிகளை மேலும் விரிவுபடுத்துகிறது. இந்த பங்குடமையானது டிஜிட்டல் தீர்வுகள் தொழிற்துறையில் பாரியளவிலான அபிவிருத்திகளை ஏற்படுத்தும். இது தொடர்பில் அறிந்துகொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள் www.azend.tech


## தன நிதானய

உத்தியோகபூர்வ முடிவுகள்

NLB

ஆங்கில எழுத்து: W

வெற்றி இலக்கங்கள்: 06 22 38 68

திகதி: 26.07.2021

சீட்டிழுப்பு இலக்கம்: 0547

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100,000.00 | 6 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 3,000.00 | 72 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000.00 | 146 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100.00 | 4082 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா 60.00 | 2808 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா 20.00 | 69252 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா 20.00 | 12914 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 3,182,000.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 89,280

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை
ரூ. 100,558,640.80

- ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Web: www.nlb.lk



## கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள்

NLB

சீட்டிழுப்பு இலக்கம்: 2812 சீட்டிழுப்பு திகதி: 26.07.2021

ஆங்கில எழுத்து: P

வெற்றி இலக்கங்கள்: 06 12 15 67

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து மற்றும் 4 இலக்கங்கள் பொருந்துமாயின் | 80,984,947.20 | 1 |
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 3 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 2,000.00 | 129 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 1,000.00 | 336 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 8070 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 5309 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 132486 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 24173 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 170,507

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை
ரூ. 86,031,487.20

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 60,000,000.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01,
தொலைபேசி: 0112-324324, 0114 607000
Fax: 0114 663416 Web: www.nlb.lk






## Mega POWER

மெகா பவர்

NLB

சீட்டிழுப்பு இலக்கம்: 0865

உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 26.07.2021

ஆங்கில எழுத்து: R சுப்பர் இலக்கம்: 15 வெற்றி இலக்கங்கள்: 01 38 44 54

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 5 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 63 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 188 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 4340 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 2942 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 71186 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 13062 |

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு

அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 138,750,227.60

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை
ரூ. 2,893,640.00

N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி 0112-470662, 0114 607000 இணையம்: www.nlb.lk

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD



சீட்டிழுப்பு இலக்கம்: 4517 உத்தியோகபூர்வ முடிவுகள்

NLB

## மஹஜன சம்பத

திகதி: 26.07.2021

வெற்றி எழுத்து: U வெற்றி இலக்கங்கள்: 3 4 6 5 9 9

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | பரிசு | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 3 | 4 | 6 | 5 | 9 | 9 | ரூபா. 2,000,000/- | 0 |
| 2ஆம் பரிசு | | 4 | 6 | 5 | 9 | 9 | ரூபா. 100,000/- | 10 |
| 3ஆம் பரிசு | | | 6 | 5 | 9 | 9 | ரூபா. 10,000/- | 99 |
| 4ஆம் பரிசு | | | | 5 | 9 | 9 | ரூபா. 1,000/- | 941 |
| 5ஆம் பரிசு | | | | | 9 | 9 | ரூபா. 100/- | 9424 |
| 6ஆம் பரிசு | | | | | | 9 | ரூபா. 20/- | 93486 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | பரிசு | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ஆம் பரிசு | | 3 | 4 | 6 | 5 | 9 | | ரூபா. 10,000/- | 10 |
| 8ஆம் பரிசு | | 3 | 4 | 6 | 5 | | | ரூபா. 1,000/- | 100 |
| 9ஆம் பரிசு | | 3 | 4 | 6 | | | | ரூபா. 100/- | 941 |
| 10ஆம் பரிசு | | 3 | 4 | | | | | ரூபா. 50/- | 9355 |
| 11ஆம் பரிசு | U | | | | | | | ரூபா. 20/- | 37372 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 7,252,410.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,755,304.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை
32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.
தொலைபேசி 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.
www.nlb.lk



## JATHIKA SAMPATHA

NLB

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 1125

திகதி: 26.07.2021

லக்னம்

வெற்றி இலக்கங்கள்: 8 2 6 8 8 1

வலமிருந்து இடமாக பரிசுக்கட்டமைப்பு

| | | | | | | | பரிசு | வெற்றியாளர் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 பரிசு | 8 | 2 | 6 | 8 | 8 | 1 | ரூ. 1,000,000.00 | 0 |
| 02 பரிசு | | 2 | 6 | 8 | 8 | 1 | ரூ. 100,000.00 | 3 |
| 03 பரிசு | | | 6 | 8 | 8 | 1 | ரூ. 10,000.00 | 23 |
| 04 பரிசு | | | | 8 | 8 | 1 | ரூ. 1,000.00 | 222 |
| 05 பரிசு | | | | | 8 | 1 | ரூ. 100.00 | 2287 |
| 06 பரிசு | | | | | | 1 | ரூ. 20.00 | 22172 |

இடமிருந்து வலமாக பரிசுக்கட்டமைப்பு

| | | | | | | | பரிசு | வெற்றியாளர் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 07 பரிசு | 8 | 2 | 6 | 8 | 8 | | ரூ. 10,000.00 | 4 |
| 08 பரிசு | 8 | 2 | 6 | 8 | | | ரூ. 1,000.00 | 20 |
| 09 பரிசு | 8 | 2 | 6 | | | | ரூ. 200.00 | 255 |
| 10 பரிசு | 8 | 2 | | | | | ரூ. 100.00 | 2191 |
| 11 பரிசு | லக்னம் | | | | | | ரூ. 20.00 | 18516 |
| 12 பரிசு | வெற்றி இலக்கங்கள் ஆறும் எந்த ஒழுங்கில் பொருந்தினாலும் | | | | | | ரூ. 200.00 | 30 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 2,130,560.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத் தொகை அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசிலைப் பெறுவதற்கு அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சனிக்கிழமைக்கான சுப்பர் பரிசு ரூ. 16,231,605.70

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
NATIONAL LOTTERIES BOARD
32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே முதலிகே மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 011 4607000, 011 2324324
பக்ஸ்: 011 4669416

# மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிய கிராமசேவகர் பிரிவுகள் – பிரதேச செயலகங்களை உருவாக்க எல்லை நிர்ணயம் குறித்து கலந்துரையாடல்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் புதிய கிராம சேவையாளர் பிரிவுகளை உருவாக்குதல், புதிய பிரதேச செயலகங்களை உருவாக்குதல், பிரதேச செயலக எல்லைகளை விஸ்தரித்தல் போன்றவற்றின் அடிப்படையில எல்லை நிர்ணய விடயங்கள் குறித்து ஆராய்வதற்கான விசேட கலந்துரையாடல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்களிப்புடன் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.




இக்கலந்துரையாடலில் ஒவ்வொரு பிரதேச செயலகங்களும் எல்லை நிர்ணயம் தொடர்பாக முன்வைத்த முன்மொழிவுகள் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

சிக்கல்களுக்குரிய பிரதேச எல்லை நிர்ணய முன்மொழிவுகள் சில எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கும், இன்னும் சில அந்தந்த பிரதேச செயலக மட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், சமூக உயர்மட்ட பிரிவினரின் பங்குபற்றலுடன் தீர்த்துக்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இக்கலந்துரையாடலில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஹாபிஸ் நசீர் அஹமட், தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன் மற்றும் கோவிந்தன் கருணாகரன் (ஜனா), அரசாங்க அதிபர் க.கருணாகரன், பிரதேச செயலாளர்கள், உதவித்திட்டமிடல் பணிப்பாளர்கள், காணி உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

# அக்கரைப்பற்றில் ஆணொருவரின் சடலம் மீட்பு

(வி.சுகிர்தகுமார்)

அக்கரைப்பற்று பஸ் நிலையத்துக்கு அருகில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பண்டார விஜயதுங்க தெரிவித்தார்.



பொலிசாருக்குக் கிடைத்த தகவலையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் நேற்று (26) காலை சடலத்தை மீட்டதாகவும் கூறினார்.

சடலமாக மீட்கப்பட்டவர் பொத்துவில் ஜலால்தீன் சதுக்கம் என்ற பிரதேசத்தை சேர்ந்த 60 வயதுடைய கலந்தர் லெப்பை என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

குறித்த நபரின் மரணத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மனைவியை அவதூறாகப் பேசியவரிடம் விசாரிக்கச் சென்ற கணவன் மீது கத்திக்குத்து

## தாக்குதலை நடத்தியவர் தப்பியோட்டம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கல்லடியில் தனது மனைவியைப் பற்றி அவதூறாகப் பேசிய நபர் ஒருவரிடம் அது தொடர்பாக கேட்கச் சென்றவர் மீது கத்துக்குத்து தாக்குதல் மேற்கொண்டதுடன், தாக்குதலை நடத்திய சந்தேக நபர் தப்பியோடியுள்ளார். இந்நிலையில் நேற்று (26) பிற்பகல் தாக்குதலுக்கு இலக்கான நபர் படுகாயமடைந்த நிலையில், மட்டு. போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது,

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள கல்லடி டச்பார் வீதி, 8ஆம் குறுக்கு வீதியிலுள்ள கத்திக்குத்துக்கு இலக்கானவர் நேற்று (26) பிற்பகல் அதே வீதியிலுள்ள தனது வீட்டிற்கு அருகாமையிலுள்ள குறித்த நபரின் வீட்டிற்கு சென்று தனது மனைவியைப் பற்றி அவதூறாகப் பேசியமை தொடர்பாக அவரிடம் கேட்டுள்ளார்.

இந்நிலையில் இருவருக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்ட நிலையில், குறித்த நபர் அவதூறு தொடர்பாக கேட்கச் சென்றவர் மீது கத்திகுத்துத் தாக்குதலை நடத்தியதையடுத்து 43 வயதுடைய ரகுபதி உதயகுமார் என்பவர் படுகாயமடைந்த நிலையில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

இதேவேளை, கத்திக்குத்துத் தாக்குதலை நடத்திய 32 வயதுடைய செரன் அவுஸ்கோன் என்பவர் தப்பியோடி தலைமறைவாகியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, தப்பியோடிய நபரை கைதுசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தம்பலகாமத்தில் இறந்த நிலையில் யானை மீட்பு

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உல்பெத்வெவ காட்டுப் பகுதியில் யானையொன்று இறந்த நிலையில் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த யானைக்கு வெடி வெடித்ததில் தொண்டைப் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக நேற்று முன்தினம் (25) மாலை 4 மணியளவில் இறந்துள்ளதாகவும் தெரிவித்தனர். இது சுமார் 35 தொடக்கம் 40 வயது வரை மதிக்கத்தக்க பெண் யானை எனவும், 8 அடி உயரம் கொண்டதாகவும் தெரியவருகிறது.

இறந்த யானையின் உடலை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் இணைந்து வைத்திய பரிசோதனை மேற்கொள்ளவுள்ளதாகவும் வனஜீவராசிகள் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# வாழைச்சேனையில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, வாழைச்சேனை பகுதியில் இருந்து கல்குடா, பசப்புசேனை பகுதிக்கு வியாபாரத்துக்காக கஞ்சாவை எடுத்துச் சென்ற கஞ்சா வியாபாரியான 62 வயதுடைய பெண்ணொருவரை 16 கிராம் 400 மில்லிகிராம் கஞ்சாவுடன் நேற்று (26) கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து, நேற்று (26) வாழைச்சேனை பொலிஸ் நிலைய போதை ஒழிப்புப் பிரிவு பெறுப்பதிகாரி ராஜகருணா தலைமையில் பொலிஸ் சார்ஜன் அசங்க ரட்னாயக்க, மாவட்ட புலனாய்வுப் பிரிவு பொலிஸ் சார்ஜன் கமலநாதன், நிலாந்தன், ஆகியோர் வாழைச்சேனை பகுதியில் வீதி கண்காணிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

இதன்போது ஓட்டமாவடி பிறைந்துறைச்சேனை பகுதியிலிருந்து கல்குடா, பசப்புசேனை பகுதிக்கு பையொன்றில் கஞ்சாவை எடுத்துச்சென்ற நிலையில், அவரை பொலிஸார் மடக்கிப்பிடித்து, சோதனையிட்டபோது அவரிடமிருந்து 16 கிராம் 400 மில்லிகிராம் கஞ்சாவை மீட்டதுடன், அவரை கைதுசெய்தனர்.

குறித்த பெண் 62 வயதுடையவர் எனவும், கஞ்சா வியாபாரத்தில் நீண்டகாலமாக ஈடுபட்டு வந்துள்ளதாகவும் பொலிஸாரின் விசாரணை மூலம் தெரியவந்துள்ளதுடன், இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சேதனப் பசளை உற்பத்தி தொடர்பில் விழிப்புணர்வு

(மட்டக்களப்பு நிருபர்)

சுபீட்சத்தை நோக்கிய சௌபாக்கியா வேலைத்திட்டத்தின் கீழ், சேதன உர உற்பத்தியை எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பில் செயன்முறை விளக்கமளிக்கும் விழிப்புணர்வு நிகழ்வு நேற்று (26) தேத்தாதீவில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டம், மண்முனை தென் எருவில்பற்று பிரதேசத்திற்குட்பட்ட தோத்தாத்தீவு - செட்டிப்பாளையம் விவசாயப் போதனாசிரியர் எம்.குணமகராஜ் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.



இதன்போது விவசாயப் போதனாசிரியர் பி.ஸ்ரீபவன் கலந்துகொண்டு விவசாயிகளுக்கு செயன்முறை விளக்கப் பயிற்சியையும், தெளிவூட்டல்களையும் வழங்கினார்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு தெற்கு வலய உதவி விவசாயப் பணிப்பாளர் த.மேகராசா மற்றும் விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# மக்களின் நீண்டநாள் பிரச்சினைக்கு உரிய தீர்வை வழங்கிய அக்கரைப்பற்று பிரதேச சபை

(நூருல் ஹுதா உமர்)

நீண்ட நாள் தேவையாக இருந்து வந்த அக்கரைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட பட்டியடிப்பிட்டி ஜவாத் மரைக்கார் வீதிக்கு நீர்க் குழாய்கள் பொருத்தப்பட்டு இணைப்புகள் வழங்கப்பட்டன. பிரதேச சபையினுடைய சகல வீதிகளுக்குமான நீர்க் குழாய்களை இணைக்கும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் ஜவாத் மரைக்கார் வீதி உள்வாங்கப்பட்டு இவ்வேலைத்திட்டம் முற்றுப் பெற்றது.



அக்கரைப்பற்று பிரதேச சபையும், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையும் இணைந்து மேற்கொள்ளும் இத்திட்டத்தில் அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.ராசீக், சபை உதவித் தவிசாளர் ஏ.எம்.அஸ்ஹர் ஆகியோரின் பிரசன்னத்தோடு வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த உப தவிசாளர் ஏ.எம். அஸ்ஹர்,

எதிர்காலத்தில் எல்லா வீதிகளும் இந்த வேலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டு இருப்பதால் அவசர அவசரமாக எல்லா வீதிகளும் நீர் இணைப்பை பெற்றுக்கொள்ள வாய்ப்புள்ளமை சந்தோஷத்தைத் தருகிறது. சபையில் காணப்படும் ஐந்து வட்டாரங்களிலும் பேதங்கள் இல்லாமல் நடைபெறவிருக்கும் இத்திட்டம் கூடுதலான மக்களின் கோரிக்கையின் அடிப்படையிலும், அவசர அவசரமாக புனரமைப்பு செய்யப்பட இருக்கின்ற வீதிகள் அடிப்படையிலும், முன்னுரிமைப்படுத்தப்பட்டு தெரிவுசெய்யப்பட்டு நீர் இணைப்பு வழங்கப்படுகிறது.

அத்துடன், இணைப்பு வழங்கப்பட்ட வீதியுடன் சேர்த்து இந்தப் பிராந்தியத்தில் மட்டும் (பட்டியடிப்பிட்டி) 2.3 கி.மீ. வீதிகள் கொங்கிறீட் இடுவதற்கு எல்லா ஆயத்தங்களும் செய்யப்பட்டுள்ளன என்பதனை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் சொற்ப நாட்களில் அவ்வேலைத் திட்டம் வெற்றிகரமாக தேசிய காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ்வின் பிரசன்னத்தோடு ஆரம்பித்து வைக்கப்பட இருக்கிறது. எமது மக்கள் பணிக்கு ஒத்தாசையாக இருந்த தவிசாளருக்கும், இன்னும் ஏனைய உறுப்பினர்களுக்கும் நன்றிகளைக் கூறிக் கொண்டார்.

தவிசாளர் ராசிக் கருத்து தெரிவிக்கும் போது இந்த வருட இறுதிக்குள் எமது பிரதேசத்தில் எஞ்சியிருக்கும் ஒவ்வொரு வட்டாரத்திலுமுள்ள எல்லா வீதிகளுக்கும் தண்ணீர் இணைப்புடன் கொங்கிறீட் இடுவதற்குமான பூரணப் படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் ஒவ்வொன்றும் முற்றுப்பெற்று வேலைகள் ஆரம்பிக்கின்ற தறுவாயில் இருப்பதாகத் தெரிவித்தார்.

# பாண்டிருப்பில் கொரோனா தொற்றினால் 71 வயது வயோதிபரொருவர் உயிரிழப்பு

(பாண்டிருப்பு நிருபர்)

கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிமனைக்குட்பட்ட பாண்டிருப்பு கிராமத்தில் கொரோனா தொற்றினால் 71 வயது நபரொருவர் உயிரிழந்துள்ளாரென கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிமனை தெரிவித்துள்ளது.

கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு கடந்த நான்கு நாட்களுக்கு முன்பு சுகயீனம் காரணமாக சிகிச்சைக்கு சென்றவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்ததுடன், அங்கு அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா தொற்றிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து சிகிச்சை பெற்றுவந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிமனையினால் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான பல்வேறு விழிப்புணர்வு செயற்பாடுகளில், பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஆர்.கணேஸ்வரன் தலைமையிலான பொதுச் சுகாதாரப்பரிசோதகர்கள் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்கள் ஆகியோர் ஈடுபட்டுவருகின்றனர்.

கல்முனை வடக்கில் கொவிட் -19 தொற்றின் மூன்றாவது அலையில் 200க்கு மேற்பட்டோர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இதுவரை பாண்டிருப்பில் மாத்திரம் 51 பேர் கொரோனா தொற்றக்குள்ளாகியுள்ளனர். அத்துடன் இருவர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சண்டையை சமரசம் செய்யச் சென்றவர் மீது கத்திக்குத்து

**வாழைச்சேனையில் சம்பவம்**

(எச்.எம்.எம்.பர்ஸான்)

கணவனும், மனைவியும் சேர்ந்து பெண் ஒருவரை தாக்கிய போது அதனைத் தடுத்து சமரசம் செய்யச் சென்ற நபர் மீது கத்திக்குத்து தாக்குதல் இடம்பெற்ற சம்பவமொன்று நேற்று முன்தினம் மாலை (25) இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வை.அஹமட் வித்தியாலய வீதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

என்னைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள் என்று பெண்ணொருவரின் அழுகுரல் சப்தம் கேட்டபோது அதனை செவியுற்ற நபரொருவர் அவ்விடத்திற்குச் சென்றுள்ளார்.

அப்போது கணவனும், மனைவியும் சேர்ந்து பெண்ணொருவரைத் தாக்கியுள்ளனர். அதனை தடுத்து நிறுத்தி சமரசம் செய்யச்சென்ற அந்நபர் மீது முரண்பட்டுக்கொண்ட கணவனும், மனைவியும் தாக்குதல் நடத்தியதுடன், அந்நபரை மனைவி பிடித்துக் கொண்டிருக்க கணவன் கத்தியால் குத்தியுள்ளதாக பொலிஸாரின் விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

இச் சம்பவத்தில் கழுத்திலும், வயிற்றிலும் கத்திக்குத்துக்குள்ளான நபர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் கத்தியால் குத்திய நபரை பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன், அவரது மனைவியும், மற்றைய பெண்ணும் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மூன்று நாட்களாக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் கொவிட் தடுப்பூசி ஏற்றப்பட்டது

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் தடுப்பூசி செலுத்தும் பணிகள் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ஏ.எல்.எப்.ரஹ்மான் தலைமையிலும், நேரடி கண்காணிப்பிலும் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மூன்று தினங்களாக தொடர்ந்து தடுப்பூசி ஏற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது பொதுமக்கள் ஆர்வத்துடன் வருகை தந்து கொரோனா சினோபார்ம் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டனர். கர்ப்பிணித் தாய்மார், 60 வயதிற்கு மேற்பட்டோர், பாலுட்டும் தாய்மார் எனப் பலர் ஆர்வத்துடன் தடுப்பூசிகளை ஏற்றிக்கொண்டனர். தொற்றா நோய்களுக்குள்ளானவர்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதுடன், இவர்களுக்கு மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இதில் வைத்தியர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், தாதி உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.







இதேவேளை கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு சுகாதார வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம்.அஸ்மி தலைமையில் நடைபெற்றது.

கல்முனை அல்-பஹ்ரியா தேசிய பாடசாலை, மருதமுனை அல்-மதீனா வித்தியாலயம், நற்பிட்டிமுனை அல்-அக்ஸா மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் என அரச திணைக்களங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்பட்டன.

# கல்முனை வர்த்தகர் சங்கத்தினால் கொவிட் சுகாதார நடைமுறைகள் இறுக்கமாக அமுல்




(சாய்ந்தமருது நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் மிகப்பெரும் பொருளாதார மையமாகத் திகழ்கின்ற கல்முனை மாநகர பொதுச் சந்தையில் கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான சுகாதார நடைமுறைகளை இப்பொதுச் சந்தை வர்த்தகர் சங்கம் மிகவும் இறுக்கமாக நடைமுறைப்படுத்தி வருகின்றது.

கல்முனை மாநகர சபை மற்றும் சுகாதாரத்துறையினரின் ஆலோசனை, வழிகாட்டலில் சங்கத்தின் தலைவர் ஏ.பி.ஜமால்தீன் ஹாஜியார், செயலாளர் ஏ.எல்.கபீர், பொருளாளர் யூசுப் ஹாஜியார் ஆகியோர் இச்சந்தையில் கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான சுகாதார செயற்பாடுகளை நெறிப்படுத்தி வருகின்றனர்.

பொதுச் சந்தையின் பிரதான நுழைவாயிலில் சுகாதார அறிவுறுத்தல்கள் பொறிக்கப்பட்ட பாரிய பதாகை அமைக்கப்பட்டிருக்கிறது. அத்துடன், அங்கு பல இடங்களிலும் கை கழுவுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதேவேளை, முகக்கவசம் அணிந்து வருகின்ற பொதுமக்களுக்கு அவற்றை வர்த்தகர் சங்கத்தினர் இலவசமாக வழங்கி வருகின்றனர்.

மேலும், சந்தையில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோர் மத்தியில் சமூக இடைவெளியை உறுதிப்படுத்துவதிலும், சுகாதாரக் கட்டுப்பாடுகளுடன் அவர்களை வழிப்படுத்துவதிலும் வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகள் தீவிரமாக ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

# பாசிக்குடா கடற்கரைக்கு செல்லத் தடை




(எச்.எம்.எம்.பர்ஸான்)

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாப் பயணிகளை கவர்ந்த இடமான பாசிக்குடா கடற்கரைக்கு உள்ளூர் மற்றும் வெளியூர் சுற்றுலாப் பயணிகள் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று காரணமாகவே குறித்த கடற்கரைக்கு சுற்றுலாப் பயணிகள் செல்வதற்கு தற்காலிகமாக தடைவிதித்துள்ளதாக பாசிக்குடா சுற்றுலா காவலரண் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கடற்கரைப் பகுதிக்குள் எவரும் செல்லாத வகையில் தடைவிதித்து பொலிஸார் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால், இக்கடற்கரைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# மறைந்த முன்னாள் அமைச்சர் மன்சூரின் 4 ஆவது ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிப்பு



(எஸ்.அஷ்ரப்கான்)

முன்னாள் வர்த்தக, வாணிபத்துறை அமைச்சர் கலாநிதி அல்-ஹாஜ் ஏ.ஆர்.மன்சூர் மறைந்து கடந்த 25 ஆம் திகதியுடன் 4 வருடங்களாகின்றன.

இவரது ஞாபகார்த்த தினத்தை முன்னிட்டு கல்முனை முகைதீன் ஜும்ஆ பள்ளிவாசலில் ஜும்ஆ தொழுகையைத் தொடர்ந்து அவருக்கான நினைவுப் பேருரை மற்றும் துஆ பிரார்த்தனை என்பன சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி நேற்று முன்தினம் (25) இடம்பெற்றன.

கல்முனையின் பொதுநலன் விரும்பிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நினைவுப் பேருரை மற்றும் துஆ பிரார்த்தனையை மௌலவி நௌபர் நிகழ்த்தினார். இந்நிகழ்வில் கல்முனை பிரதேச பொதுநலன் விரும்பிகள் மற்றும் உலமாக்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அட்டாளைச்சேனை உதவிப் பிரதேச செயலாளருக்கு பிரியாவிடை நிகழ்வு





(அட்டாளைச்சேனை நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளராக கடமையாற்றி இறக்காமம் பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச்செல்லும் எம்.ஏ.சி.அஹமட் நஸீலை வாழ்த்தி வழியனுப்பும் நிகழ்வு நேற்று (26) பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அட்டாளைச்சேனை நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் சாபிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், உதவிப் பிரதேச செயலாளரின் சேவைகளைப் பாராட்டி வாழ்த்துப்பத்திரம், நினைவுச் சின்னம் மற்றும் பொன்னாடைகள் போர்த்தி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், கணக்காளர் ஏ.எல்.எம்.றிபாஸ், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.ஹுசைனுடின், நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.எம்.நழில், சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் ஜே.எம்.நிஹ்மத்துல்லா, நலன்புரிச் சங்கச்செயலாளரும், பொது முகாமைத்துவ உத்தியோகத்தருமான எம்.ஏ.சீ.றக்கீப், நிதியாளர் வை.பீ.லாபிர், கிராம உத்தியோகத்தர்களுக்கான நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எல்.ஜஃபர் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பட்டதாரி பயிலுனர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

# மருதமுனையில் 150 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் அன்பளிப்பு





(மருதமுனை நிருபர்)

கொரோனா தொற்றுக் காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கு உதவும் வகையில், மருதமுனை சுலைஹா பவுண்டேஷனின் ஏற்பாட்டில், காலஞ்சென்ற மர்ஹூம் கலாநிதி முகைதீன் பாவாவின் புதல்வர்களான தாஹா, ஒமர் ஆகியோரால் உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

மூன்று இலட்சம் ரூபா நிதியில் 150 குடும்பங்களுக்கு தலா 2000 ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் இதன்போது வழங்கப்பட்டன.

பவுண்டேஷனின் தலைவர் எம்.ஐ.எம்.ஏ.காதர் வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கு இந்த உலருணவுப் பொதிகளை வழங்கிவைத்தார். கடந்த காலங்களில் ஏற்பட்ட அனர்த்தங்களின் போதும் இவர்கள் நிவாரணங்களுக்காக பல இலட்சம் ரூபா நிதியுதவியை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாண்டிருப்பில் வீடொன்றிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்பு

(பாறுக் ஷிஹான்)

மர்மமான முறையில் உயிரிழந்த குடும்பஸ்தர் ஒருவரின் சடலமொன்று பாண்டிருப்பில் மீட்கப்பட்டுள்ளது.


அம்பாறை மாவட்டம், கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாண்டிருப்பு - தோம்புதோர் வீதியிலுள்ள வீடொன்றில் குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் 45 வயதுடைய தர்மராசா திருச்செல்வம் என அடையாளம் காணப்பட்டுள்ளார். சம்பவ இடத்திற்கு கல்முனை பொலிஸார் வருகைதந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இறந்த நபரின் மனைவி குவைத் நாட்டில் தொழில்புரிந்து வருபவர் எனவும், தனது மகளுடன் வாழ்ந்து வந்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

# நஞ்சற்ற விவசாய உணவுப் பொருட்களை மக்கள் உண்ணவேண்டும் என்பதே அரசாங்கத்தின் குறிக்கோள்

## விவசாயப் போதனாசிரியை முர்ஷிதாஷிரீன்







(மட்டக்களப்பு நிருபர்)

இரசாயனங்களைத் தவிர்த்து ஆரோக்கியமாக நோயற்ற வாழ்வு வாழவும், தொற்றா நோய்களிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் வேண்டுமெனில் நாம் முற்று முழுதாக சேதனப் பசளை விவசாய உற்பத்தி முறைக்குத் திரும்ப வேண்டுமென ஏறாவூர் நகர பிரதேச விவசாயப் போதனாசிரியை எம்.எச். முர்ஷிதாஷிரீன் தெரிவித்தார்.

சுபீட்சத்தை நோக்கிய சௌபாக்கியா திட்டத்தின் கீழ் 'சேதன உர உற்பத்தியும் , பாவனையும்' நிகழ்ச்சியில் திரவ சேதன உர உற்பத்தி நிகழ்வு ஏறாவூர் சவுக்கடியில் அமைந்துள்ள கிழக்கு மாகாண புற்றுநோயாளர் பராமரிப்பு நிலையத்தில் நேற்று (26) இடம்பெற்றது.

கிழக்கு மாகாண புற்றுநோயாளர் பராமரிப்பு நிலைய பண்ணை முகாமையாளர் யூ.நூஹூலெப்பை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தொடர்ந்து உரையாற்றிய விவசாயப் போதனாசிரியை முர்ஷிதாஷிரீன் இந்நாட்டில் முழுக்க முழுக்க திண்ம சேதன உரத்தையும், திரவ நிலையில் பாவிக்கக் கூடிய திரவ சேதன உரத்தையுமே உற்பத்தி செய்து , நஞ்சற்ற விவசாய உணவுப் பொருட்களை மக்கள் உண்ணவேண்டும் என்பதே அரசாங்கத்தின் குறிக்கோளாகும். இரசாயன உரப்பாவனையில் பழகிப்போன நமது விவசாயிகளுக்கு இதுவொரு பாரிய சவாலான விடயமாக இருந்தாலும், விவசாயத் திணைக்களத்தினூடாக 2010ஆம் ஆண்டிலிருந்து நாம் நஞ்சற்ற இயற்கை விவசாய உற்பத்திக்கு விவசாயிகளைத் தூண்டி வந்துள்ளோம் என்றார்.

அங்கு இடம்பெற்ற திரவ உர உற்பத்தி செய்முறை நிகழ்வில் கிளிசரியா, மாட்டுச் சாணம், உள்ளி, வெல்லம், எரிக்கிலை , அன்னாமின்னா (சீத்தா) இலை ஆகியவற்றின் கரைசல்களைச் சேர்த்து, மண்புழு இட்டு ஏனைய கழிவு உணவுப் பொருட்கள், இலை குழைகள் கொண்டு சேதன திரவ உர உற்பத்தி செய்முறை காண்பிக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் வி.நிஹாரா, மட்டக்களப்பு வடக்கு விவசாய உதவிப் பணிப்பாளர் எஸ்.சித்திரவேல் , விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் ஆர்.லதாபிரியா, கமநல சேவைகள் நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.தேவரஜனி உள்ளிட்டோரும் பண்ணை விவசாயிகளும் கலந்துகொண்டனர்.

# நீர்ப் பம்பிகள் - மோட்டார் சைக்கிள்கள் சுய உற்பத்தியாளர்களுக்கு வழங்கிவைப்பு



(கே.எ.ஹமிட்)

கதிரவெளி கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட கல்லரிப்பு விவசாய கிராமத்திற்கு விஜயம் செய்த மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், சுய உற்பத்தியில் ஈடுபடும் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்தும் முகமாக தெரிவுசெய்யப்பட்ட சுய உற்பத்தி மற்றும் விற்பனையாளர்களுக்கு நீர்ப் பம்பிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் போன்றவற்றினை வழங்கி வைத்திருந்தார்.

அதன் பின்னர் நீடித்த மீள்குடியேற்றத்திற்கான உதவித் திட்டத்தின் கீழ், இலங்கை மற்றும் ஐக்கிய நாடுகள் இணைந்த செயற்றிட்டத்தினூடாக காவியா பெண்கள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட கரையோரப் பாதுகாப்பிற்கான மரக்கன்றுகளை நடும் வேலைத்திட்டத்தினையும் ஆரம்பித்து வைத்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து வாகரை பிரதேசத்தில் உள்ள கிருமிச்சை மற்றும் மதுரங்கேணிக்குளம் போன்ற பகுதிகளுக்கும் விஜயம்செய்து, அங்குள்ள மக்களை சந்தித்து, அவர்களுடைய குறைகளை கேட்டறிந்ததுடன், அவற்றை நிவர்த்திசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரையும் விடுத்திருந்தார். அதனடிப்படையில் அப்பிரதேசத்தில் மிக விரைவாக தேவையான அத்தியாவசிய விடயங்கள், நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்பு குழு இணைத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனால் பூர்த்திசெய்யப்படவுள்ளன.

# கொரோனா தொற்று சூழ்நிலையால் போரதீவுப்பற்றில் நெல் அறுவடை இயந்திரங்களுக்குத் தட்டுப்பாடு

## விவசாயிகள் திண்டாட்டம்

(வீரமுனை நிருபர்)

போரதீவுப்பற்று பிரதேச செயலக மண்டூர், வெல்லாவெளி கமநல சேவைகள் நிலையத்திற்குட்பட்ட பிரதேசங்களில் நெற்செய்கை அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில், அறுவடை இயந்திரங்களின் பற்றாக்குறையால் விவசாயிகள் பல்வேறு சிரமங்களுக்குட்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

போரதீவுப்பற்று செயலகத்திற்குட்பட்ட மண்டூர், ஆனைகட்டியவெளி, சின்னவத்தை, மாலையர்கட்டு, வெல்லாவெளி, பாலையடிவட்டை, காக்காச்சிவட்டை ஆகிய கிராமங்களிலுள்ள நெற்செய்கைகளை மூன்று அரை மாத காலத்திற்குள் (105 நாள்) அறுவடை செய்யவேண்டிய காலம் நெருங்கியுள்ள நிலையில், அறுவடை இயந்திரமின்றி விவசாயிகள் திண்டாடுகின்றனர்.

பெரும் முதலீடு செய்த நெல்வயல்களை அறுவடைசெய்ய காலதாமதம் ஏற்படுமாயின், நெற்கதிர்கள் நிலத்தில் வீழ்ந்து சேதமாகுவதுடன், கால்நடைகளுக்கும், யானைகளுக்கும் உணவாகும் நிலையேற்படும் என செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கொரோனா தொற்றுப் பரவல் சூழ்நிலையினால் வடமத்திய மாகாணம் உட்பட பல்வேறு வெளி மாகாணங்களிலிருந்து இம்முறை அறுவடைக்கான இயந்திரங்கள், போரதீவுப்பற்றுக்கு வருகை தராமையே அறுவடை இயந்திரத்தின் தட்டுப்பாட்டிற்கு பிரதான பின்னணி என செய்கையாளர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கார் - முச்சக்கரவண்டி மோதி விபத்து; ஒருவர் பலி - இருவர் படுகாயம்





(கிண்ணியா நிருபர்)



திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியின் சேருநுவர பகுதியில் நேற்று முன்தினம் (25) இடம்பெற்ற வாகன விபத்தில் திருகோணமலையைச் சேர்ந்த ஆசிரியை ஒருவர் பலியாகியுள்ளதுடன், அவரது கணவர் மற்றும் மகன் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில், கணவர் மூதூர் வைத்தியசாலையிலும், 7 வயதான மகன் திருகோணமலை வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவிலும் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இக்குடும்பத்தினர் முச்சக்கர வண்டியில் வெருகல் முருகன் கோவிலுக்குச் சென்று வீடு திரும்பியபோது, கார் ஒன்று கட்டுப்பாட்டை மீறி முச்சக்கர வண்டியின் மீது மோதியதாலேயே இந்த பரிதாபகரமான சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது திருகோணமலை பாலையூற்று சென்.லூட்ஸ் வித்தியாலய ஆசிரியை திருமதி பாமதி ஞானவேல் (49) என்பவரே உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்முனையில் தடுப்பூசி பற்றாக்குறையால் ஏமாற்றத்துடன் வீடு திரும்பிய மக்கள்

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருதில் கொரோனா தடுப்பூசியேற்றும் பணிகள் கடந்த மூன்று நாட்களாக சுகாதார வைத்திய அதிகாரி அல்-அமீன் றிசாத் தலைமையில் வெற்றிகரமாக இடம்பெற்றன. கடந்த சனிக்கிழமை 1162 பேருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதுடன், ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணி வரையில் 850 பேருக்கு தடுப்பூசியேற்றப்பட்டுள்ளதாகவும் சுகாதார வைத்திய அதிகாரி அல்-அமீன் றிசாத் தெரிவித்தார்.

காரைதீவு பிரதேச செயலக பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன், உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.பாத்தீபன் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பட்டதாரி பயிலுனர்கள் மற்றும் பல்நோக்கு அபிவிருத்தி பயிற்சி உதவியாளர்கள் தடுப்பூசியை நேற்று முன்தினம் (25) பெற்றுக்கொண்டதோடு, தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்திலும் இணைந்துகொண்டனர்.

மேலும், காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட பிரிவில் சனிக்கிழமை மொத்தமாக 1930 பேர் தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டுள்ளனர். ஞாயிற்றுக்கிழமை மாலை 04.00 மணிவரை 1800 பேருக்கு தடுப்பூசியேற்றப்பட்டுள்ளதாக காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி தஸ்லிமா வஸீர் தெரிவித்தார். மேலும், கொரோனா தடுப்பூசி கிடைக்காமையினால் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் சில இடங்களில் அதிகமானோர் ஏமாற்றத்துடன் வீட்டுக்குத் திரும்பிச்சென்றதையும் அவதானிக்க முடிந்தது.

நிந்தவூர் பிராந்தியத்திற்கு கிடைக்கப்பெற்ற கொவிட்-19 தடுப்பூசி மருந்துகள் 3000 செலுத்தி முடிவடைந்த நிலையில், ஏனையவர்களிற்கான தடுப்பூசி மருந்தானது எதிர்வரும் தினங்களில் கிடைக்கப்பெற்றவுடன் முன்னுரிமை அடிப்படையில் இத்தடுப்பூசி வழங்கும் ஏற்பாடு கட்டங்கட்டமாக கிராமசேவகர் பிரிவுகளில் முன்னறிவிப்பு செய்யப்பட்டு வழங்கப்படுமென நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் பறூசா நக்பர் தெரிவித்துள்ளார்.

கல்முனை பிராந்தியத்திற்கு சுகாதார அமைச்சினால் 50 ஆயிரம் தடுப்பூசிகள் வழங்கப்பட்டிருந்த நிலையில், முதல் நாளில் மட்டுமே 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# காத்தான்குடியில் தொடரும் திருட்டுச் சம்பவங்கள்; கண்டுகொள்ளாத பொலிஸார் – அச்சத்துடன் மக்கள்

(வீரமுனை நிருபர்)

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தமிழ்க் கிராமங்களில் சமீப காலமாக தொடரும் திருட்டுச் சம்பவங்களால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளதுடன், உடமைகளைப் பறிகொடுத்தோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்துள்ள போதிலும், எத்தகைய நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையென்பதுடன், எவரும் கைதுசெய்யப்படவுமில்லையென பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஆரையம்பதி பிரதேச செயலக காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு, கிரான்குளம், தர்மபுரம், தாழங்குடா, ஆரையம்பதி ஆகிய பிரதேசங்களிலுள்ள வீடுகள் மற்றும் கடைகளை உடைத்து குறிப்பாக இரவு வேளைகளில் ஜன்னல்கள் மற்றும் கதவுகள் வழியாக உள்நுழையும் திருடர்கள் பணம், நகை உள்ளிட்ட பெறுமதியான பொருட்களை களவாடிச் சென்றுள்ளதாக தெரியவருகிறது.

குறித்த திருட்டுச்சம்பவங்கள் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களினால் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டும் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லையென பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளர்.

தொடர்ச்சியாக இவ்வாறான திருட்டுச்சம்பவங்கள் தமிழ்க் கிராமங்களில் அரங்கேறி வருவதால் பொலிஸார் திருடர்களை கைதுசெய்ய விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஐஸ் போதைப்பொருளுடன் வர்த்தகர் ஒருவர் கைது

(ரீ.எல்.ஜவ்பர்கான்)

86 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் பிரபல போதைப்பொருள் வர்த்தகர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயனசிறி தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் பெறுமதி ஆறு இலட்சம் ரூபா எனத் தெரியவந்துள்ளது.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புதிய காத்தான்குடி அல்-அமீன் வீதியிலுள்ள குறித்த நபரின் வீட்டிலிருந்தே நேற்று (26) காலை இந்த போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் வாகனம் திருத்தும் நிலையம் ஒன்றினை நடத்திவரும் இவர், நீண்டகாலமாக போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

கைதான வர்த்தகர் மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் அரசியல் கைதிகள் 53 பேர் படுகொலை செய்யப்பட்டதன் 38 ஆவது நினைவுதினம் திருகோணமலையில் அனுஷ்டிப்பு





(ந.குகதர்சன்)

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற தமிழின அழிப்பைத் தொடர்ந்து ஜூலை 25, 27ஆம் திகதிகளில் வெலிக்கடை சிறைச்சாலைக்குள் நடைபெற்ற படுகொலைகளில் ஆயுதப் போராட்ட ஆரம்ப கர்த்தாக்களான தேசப்பிதா தங்கதுரை, தளபதி குட்டிமணி அடங்கலாக 53 அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்டதன் 38ஆவது நினைவு தினம் திருகோணமலையில் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் ஏற்பாட்டில் 38ஆவது கறுப்பு ஜூலை, வெலிக்கடை படுகொலை நினைவு தினம் என்பன நேற்று முன்தினம் (25) திருகோணமலை கடற்கரையில் அமைந்துள்ள வெலிக்கடை தியாகிகள் நினைவரங்கத்தின் எதிரில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தி அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமும், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரன் (ஜனா) தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுப்பிரமணியம் வினோ நோகராதலிங்கம், தமிழீழ விடுதலை இயக்கத்தின் உப தலைவரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதி தவிசாளருமான இந்திரகுமார் பிரசன்னா, கட்சியின் இளைஞரணி உப தலைவர் இரத்தின ஐயா வேணுராஜ் மற்றும் ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர்.

பொலிஸாரின் தடையை மீறி இந்நிகழ்வு நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீ சித்தாண்டி சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயத்தின் உற்சவகால பொதுக்கூட்டம்







(வாழைச்சேனை)

வரலாற்றுப் புகழ்பெற்ற சித்தாண்டி ஸ்ரீ சித்திர வேலாயுதர் சுவாமி ஆலயத்தின் உற்சவகால பொதுக்கூட்டம் ஆலயத்தின் வன்னிமை மற்றும் வண்ணக்கர் தலைமையில் நேற்று ஆலயத்தின் மடாலயத்தில் இடம்பெற்றது.

எதிர்வரும் 07.08.2021 அன்று நண்பகல் ஆலயத்தின் கொடியேற்றம் இடம்பெற சித்திரவேலாயுதர் சுவாமி திருவருள் கூடியிருப்பதால் ஆலயத்தின் உற்சவ காலங்களில் இடம்பெறவிருக்கும் ஆயத்தங்கள் மற்றும் திருவிழாக்கள் தொடர்பான விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

நேற்றைய பொதுக்கூட்டத்தில் குடிவாரியான உறுப்பினர்கள் கலந்துகொண்டு, தங்களுடைய விடயங்களை முன்வைத்தனர். கொடியேற்றத்தைத் தொடர்ந்து 16 நாட்களைக் கொண்ட உற்சவகால திருவிழாக்கள் நடைபெறும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பெருந்தொற்றால் சுகாதார நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதுடன், இம்முறை ஆலயத்தின் வழிபாடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இதனைப் பின்பற்றியே உற்சவகால அங்கத்தவர்கள் கலந்துகொள்ளவேண்டும். ஆலயத்தில் அடியவர்களை அனுமதிப்பது மற்றும் சுவாமி வெளி வீதி உலாவருதல் என்பன மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

ஆலயத்தின் மகோற்சவமானது 07.08.2021 அன்று ஆரம்பமாகி, மயில்கட்டுத்திருவிழா 19, 20, 21 ஆம் திகதி ஆகிய மூன்று நாட்களும் விசேடமாக இடம்பெறும். அத்துடன் கொடியிறக்கம் மற்றும் தீர்த்தோற்சவம் என்பன 22ஆம் திகதி இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஹிஷாலினிக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதில் மக்கள் காங்கிரஸ் பின் நிற்கப்போவதில்லை

## அ.இ.ம.கா. மூதூர் தொகுதிக்கான கொள்கை பரப்புச் செயலாளர் மஹ்தி

(கிண்ணியா நிருபர்)

ஹட்டன் - டயகம பகுதியைச் சேர்ந்த ஹிஷாலினியின் மரணத்திற்குக் காரணமானவர்கள் யாராக இருந்தாலும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, உரிய தண்டனையை பெற்றுக்கொடுக்க வேண்டிய அதேவேளை, நிரபராதிகள் எக்காரணத்தைக் கொண்டும் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக தண்டிக்கப்படவோ அல்லது வீணாக விமர்சிக்கப்படவோ இடமளிக்கக் கூடாது எனவும் கிண்ணியா நகர சபை உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மூதூர் தொகுதிக்கான கொள்கை பரப்புச் செயலாளருமான எம்.எம்.மஹ்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

திருகோணமலையில் நேற்று முன்தினம் (25) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

ஹிஷாலினிக்கு உரிய நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென வீதிக்கு இறங்கியுள்ள சில அரசியல் வங்குரோத்துகாரர்கள் முன்னாள் அமைச்சரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவருமான ரிஷாட் பதியுதீனை இவ்வாறான இக்கட்டான சூழ்நிலையில், ஒன்றன்மேல் ஒன்றாக பல்வேறு திட்டமிட்ட சதி முயற்சிகளுக்கு முகங்கொடுத்து துன்பப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றபோது, அதில் அரசியல் இலாபம் தேட முயற்சிப்பது மனிதாபிமானமற்ற செயற்பாடாகும்.



பல்வேறு கோணங்களிலும் பொலிஸ் திணைக்களத்தினால் விசாரணைகள் முடக்கி விடப்பட்டிருக்கின்ற இத்தருணத்தில் அவரையும் அவரது குடும்பத்தையும் பற்றி உண்மைக்குப் புறம்பான பல்வேறு செய்திகள் வெளியிடப்படுவதை ஊடகங்கள் வாயிலாக காணக் கிடைக்கின்றன.

இதற்கு முன்னரும் முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, விமர்சனங்கள் வந்தபோதிலும், அவற்றுக்கெதிராக நடத்தப்பட்ட விசாரணைகள் எதிலுமே அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டு இருக்கவில்லை.

ஹிஷாலினியின் மரண சம்பவம் திட்டமிட்டு நடைபெற்றதா? எதேச்சையாக நடைபெற்றதா? கொலையா? தற்கொலையா? ஏன், எதற்காக, எப்படி, யாரால் என பொலிஸார் கண்டுபிடிக்க முன்னமே ஊடகங்களில் பல்வேறு முரண்பாடான கருத்துகளை அரசியல் காரணங்களுக்காக வெளியிட்டு, மக்களை ஏமாற்றி பழி தீர்க்க முயற்சிப்பது கவலையைத் தருகின்றது.

இதற்கு முன்னர் 11 யுவதிகள் அவரது இல்லத்தில் பணி புரிந்ததாகவும், அதில் 22 வயது நிரம்பிய யுவதி பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளானதாகவும் கூறுகின்றனர். இந்த யுவதி தனது வீட்டில் வைத்து ஒன்றையும், கொழும்பில் வைத்து இன்னொன்றையும் கூறுகின்றார். இவ்வளவு நாட்கள் கழித்து ஏன் இவ்வாறு கூறுகின்றார் என்பதில் சந்தேகம் எழுகின்றது. அதுமாத்திரமன்றி மனோ கணேசன், இராதாகிருஷ்ணன் போன்றவர்கள் கூட ஹிஷாலினிக்கு உரிய நீதி கிடைக்கவேண்டும் என்று போராடுகின்றனர். அவர்கள் கூட உரிய விசாரணை நடைபெற வேண்டும். நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது என்கின்ற விடயத்தில் கவனமாக இருக்கின்றார்கள் என்பது எனக்கு புலனாகின்றது. ரிஷாட் பதியுதீன் இல்லத்திற்கு எதிரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர் ரவிகுமார் ஊடகங்களுக்கு வழங்கிய வெறித்தனமான கருத்துகள் அவருடைய கீழ்த்தரமான அரசியல் வங்குரோத்து நிலைமையை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

சகோதரி ஹிஷாலினிக்கான தீர்வினை முறையான நீதி விசாரணையின் மூலம் நீதிமன்றம் வழங்க முன்னர் அரசியல் வக்கிரம் கொண்டு வீணான விமர்சனங்களை செய்து இனங்களுக்கிடையே பிளவுகளை ஏற்படுவதற்கோ அல்லது ஒரு நிரபராதியை தண்டிப்பதற்கோ, விமர்சனங்களுக்குட்படுத்துவதற்கோ, இடமளிக்கக் கூடாது.

எனவே, இவ்வாறான துரதிர்ஷ்டவசமான கடினமான சூழ்நிலையில் மிகவும் நிதானமாகவும், புத்திசாலித்தனமாகவும் நடந்துகொள்ள வேண்டும் என அவ்வாறான அரசியல் வங்குரோத்துக்காரர்களையும் ஊடகங்களையும் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன் என்று தெரிவித்தார்.

# மருதமுனை அல்-ஹம்றாவுக்கு விளையாட்டு உபகரணங்கள்



(மருதமுனை நிருபர்)

இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி சிபான் மஹ்றூப்பின் ஏற்பாட்டில் மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்திற்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்வு மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இங்கு சட்டத்தரணி சிபான் மஹ்றூப், அதிபர் ஐ.உபைதுல்லாவிடம் குறித்த உபகரணங்களைக் கையளித்தார்.

# அரசியல் – பொருளாதார நெருக்கடிகள் தொடர்பில் சமசமாஜ – சோஷலிசக் கட்சிகளுக்கிடையில் பேச்சு

## அடுத்தகட்ட கலந்துரையாடல்களுக்கு செல்ல எதிர்பார்ப்பதாக திஸ்ஸ எம்.பி. தெரிவிப்பு

நாட்டில் நிலவும் பொருளாதார பிரச்சினை உள்ளிட்ட மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்தாலோசிக்கும் லங்கா சமசமாஜக் கட்சி மற்றும் முன்னிலை சோஷலிசக் கட்சி ஆகியவற்றுக்கிடையிலான முதற்கட்ட பேச்சுவார்த்தை நேற்று (26) கொழும்பிலுள்ள சம சமாஜக் கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் சம சமாஜக் கட்சியின் பிரதான செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ விதாரண, முன்னிலை சோஷலிசக் கட்சியின் பிரதான செயலாளர் குமார் குணரத்னம், செயலாளர் புபுது ஜெயகொட, அந்தக்கட்சியின் பேச்சாளர் துமிந்த நாகமுவ உள்ளிட்ட பலர் கலந்துக்கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் திஸ்ஸ விதாரண எம்.பி. தெரிவிக்கையில்,

இதன்போது, நாட்டில் தற்போதுள்ள பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கருத்து களைப் பரிமாறிக்கொண்டோம். முன்னிலை சோஷலிசக் கட்சியுடன் கலந்துரையாடக் கிடைத்தமை தொடர்பில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அவர்களினால் பல்வேறு பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டிருந்தன. அந்தப் பரிந்துரைகள் தொடர்பில் எங்களின் கூட்டணியுடன்



கலந்துரையாட எதிர்பார்த்துள்ளோம்.

அதற்கமைய, மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் எங்களுக்கு இருக்கும் கவலையை போன்றே முன்னிலை சோஷலிசக் கட்சிக்கும் இருக்கிறது. ஒருவேளை எதிர்காலத்தில் நாட்டில் ஏற்படும் பிரச்சினைகளுக்கமைய அந்தப் பிரச்சினைகளை மக்களை இணைத்துக் கொண்டு செயற்பட வேண்டிய அவசியம் ஏற்படுப் போது முன்னிலை சோஷலிசக் கட்சியின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.

இது ஆரம்பகட்ட கலந்துரையாடல் என்பதுடன், ஆரம்பகட்ட கருத்து பரிமாற்றமாகவும் அமைந்துள்ளது. இதுபோன்ற கலந்துரையாடல்களை தொடர்ந்தும் முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளின மத்தியில் வலய ரீதியில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமைகள் தொடர்பில் முன்னிலை சோஷலிசக் கட்சியினால் திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டம் தொடர்பில் சிறய கட்சிகளின் நிலைப்பாடுகளை அறிந்து கொள்வது இந்தக் கலந்துரையாடலின் பிரதான நோக்கமாக அமைந்ததாக குமார் குணரத்னம் தெரிவித்தார்.

# நிர்வாகங்களின் அடாவடித்தனத்தை அடக்க தொழிற்சங்கப் போராட்டத்தில் இறங்க வேண்டும்

## சதாசிவம் அழைப்பு



(தலவாக்கலை நிருபர்)

பெருந்தோட்ட நிர்வாகங்களின் அடாவடித் தனத்தையும், சர்வாதிகாரப்போக்கையும் ஒழிப்பதற்கு பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் தொழிற்சங்க அரசியல் பேதங்களை மறந்து தொழிற்சங்கப் போராட்டத்தில் களம் இறங்க வேண்டும்.

இவ்வாறு களம் இறங்கும் பட்சத்திலேயே தொழிலாளர்கள் ஒற்றுமையை வெளிக்காட்டி அதன்மூலம் ஒன்று சேர்ந்து உரிமைகளை பெற்றெடுக்க முடியும் என்று இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலார் சுப்பையா சதாசிவம் தெரிவித்தார்.

நுவரெலியா கூட்டுறவு சங்க சுற்றுலா விடுதியில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற தோட்ட கமிட்டி தலைவர்கள் மற்றும் அமைப்பாளர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

என்றும் இல்லாதவாறு தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களுக்கு தோட்டங்களில் வேலை பளுவை அதிகரித்துள்ளது.

இதனால் பாரிய பொருளாதார நெருக் கடிக்கு மத்தியில் தொழிலாளர்களுக்கு குடும்ப சுமைகளும் அதிகரித்துள்ளன.

அதேவேளை தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களுக்கு வழங்கி வந்த சலுகைகளையும் நிறுத்தியுள்ளன. ஒரு சில தோட்டங்களில் 20 கிலோவிற்கு குறைவாக கொழுந்து பறித்தால் அரை நாள் சம்பளம் வழங்கப்படுகிறது. சந்தா பிடிப்பதில்லை. தோட்ட நிர்வாகம் சர்வாதிகாரமாக செயற்படுகின்றது.


தோட்டங்களில் தற்பொழுது சந்தா பணம் பிடிக்காததால் தோட்டத் தொழிற்சங்க தலைவர்கள் தோட்ட நிர்வாகத்துடன் தொழில் பிணக்குகள் சம்பந்தமாக பேச்சுவார்த்தைக்கு செல்லும் பொழுது தோட்டத்தில் தொழிற்சங்க சந்தா பிடிப்பதில்லை.

ஆகையால் உங்களை தொழிற்சங்க தலைவர்களாக ஏற்றுக்கொள்ள முடியாதென கூறி பேச்சுவார்த்தை நடத்தாது தோட்ட நிர்வாகத்தினர் புறக்கணிக்கின்றனர்.

அந்தவகையில் தோட்டங்களில் தொழிற் சங்கங்களை செயலிழக்க தோட்ட நிர்வாகம் திட்டமிட்டு செயற்படுகின்றது. அத்துடன் தொழிலாளர்களின் தொழில் உரிமை விடயங் களில் தான் தோன்றித்தனமாக செயற் படும் நிலையும் உள்ளது.

தோட்ட நிர்வாகங்களுக்கு எதிராக தோட்டத் தொழிலாளர்கள் தகுந்த பாடம் புகட்டுவதற்கு தோட்டத் தொழிலாளர்கள் தொழிற்சங்க, அரசியல், கட்சி பேதங்களை மறந்து ஒன்றுபட்டுப் போராட்டம் நடத்த களமிறங்க முன்வரவேண்டும் - என்றார். இதன்போது டயகம மேற்கு பிரிவைச் சேர்ந்த 16 வயது ஹிஷாலினி சிறுமியின் மறைவையொட்டியும், கெப்பிடல் மஹாராஜா நிறுவனத்தின் குழு தலைவர் ஆர். மகேந்திரனின் மறைவையொட்டியும் ஆத்மா சாந்திக்காக இரண்டு நிமிடம் மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

# ஏறாவூரில் ஹெரோயின் வியாபாரி ஒருவர் கைது





(கல்குடா நிருபர்)

ஏறாவூர், பெண் சந்தை வீதியில் 37 வயதுடைய பிரபல ஹெரோயின் போதைப்பொருள் வியாபாரி ஒருவர் நேற்று (26) மாலை கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், போதை வியாபாரத்திற்கு பயன்படுத்திய முச்சக்கர வண்டியும் கைப்பற்றப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய புலனாய்வுப் பிரிவினரும், ஏறாவூர் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பின்போதே மேற்படி சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர்களிடமிருந்து ஹெரோயின் போதைப் பொருள் 08 கிராம் 120 மில்லிகிராம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர் போதைப் பொருள் வியாபாரத்திற்காக பயன்படுத்திய முச்சக்கர வண்டியும் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஏறாவூர் பிரதேசத்தை சேர்ந்த குறித்த சந்தேக நபர் பிரபல போதைவஸ்து வியாபாரி என்றும், இவருக்கு ஏற்கனவே போதைப்பொருள் சம்பந்தப்பட்ட வழக்கு உயர் நீதிமன்றில் உள்ளது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

குறிந்த நபரே ஓட்டமாவடி , வாழைச்சேனை, பிறைந்துறைச்சேனை ஆகிய பிரதேசங்களுக்கு ஹெரோயின் போதைப்பொருளை விநியோகிப் பவர் என்று தெரியவந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# நடிகை உபேக்ஷா பிணையில் விடுதலை

கண்டி, கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்து சம்பவம் தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடிகை உபேக்ஷா ஸ்வர்ணமாலி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவர் பயணித்த வாகனம் கண்டி – குருநாகல் பிரதான வீதியில், நுகவெல பிரதேச செயலகம் அருகே மோட்டார் சைக்கிள் மீது மோதியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 18 வயதுடைய நபர் காயமடைந்த நிலையில் பேராதேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் உபேக்ஷா ஸ்வர்ணமாலி நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவர் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளார்.



# ரிஷாட் வீட்டில் உயிரிழந்த சிறுமிக்கு நீதிகோரி ஜனாதிபதிக்கு மகஜர்

டயகம மூன்றாம் பிரிவைச் சேர்ந்த ஜூட்குமார் ஹிஷாலினி முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் வீட்டுக்கு வேலைக்குச் சென்று கடந்த 15 ஆம் திகதி எரிகாயங்களுடன் மர்மமான முறையில் மரணமடைந்தார்.

இந்நிலையில் இவரது மரணத்துக்கு நீதி கோரி மலையகத்தின் பல பகுதிகளிலும் போராட்டங்களும், எதிர்ப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஹிஷாலினியின் மரணத்திற்கு நீதி கோரி ஹட்டன் மெதஸ்டிக் சிறுவர் இல்லத்தின் சிறுவர்கள் ஜனாதிபதியிடம் கையளிப்பதற்காக நேற்று முன்தினம் கையெழுத்து வேட்டையில் ஈடுபட்டனர். கல்வி கற்பது எங்களின் உரிமை, எதிர்காலத் தலைவர்கள் நாங்கள், ஏன் எங்கள் வாழ்க்கையை சீரழிக்கிறீர்கள்?, ஆணுக்கும் பெண்ணுக்கும் சரிநிகர் என்ற போது ஏன் இந்த ஏற்றத்தாழ்வு? போன்ற வாசகங்களை எழுதிய பதாகைகளை காட்சிப்படுத்தி கையெழுத்து திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

குறித்த நடவடிக்கை டன்பார் வீதியில் ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரிக்கு அருகாமையில் இடம்பெற்றது. இதன்போது இவர்கள் வீதியில் செல்பவர்களிடம் கையெழுத்துகளைப் பெற்றனர்.



# இதுவரை கிடைக்காத “நீதியை தேடி” நூல் பிரதமரிடம் கையளிப்பு





சிரேஷ்ட சட்டத்தரணி கல்யாணந்த திரணகம எழுதிய இதுவரை கிடைக்காத “நீதியை தேடி” எனும் நூல் நேற்று (26) அலரி மாளிகையில் வைத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

பொலிஸ் சிறையறை, சிறைச்சாலை, நீதிமன்றம் மற்றும் பொது அரங்குகளில் கல்யாணந்த திரணகம பெற்றுக்கொண்ட அனுபவத்தின் அடிப்படையில் இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது.

இதன்போது விசேட உரை நிகழ்த்திய பேராசிரியர் இதுராகாரே தம்மரதன தேரர் தெரிவித்ததாவது,

“அரசியல் தொடர்பிலேயே இலங்கையின் வரலாறு எழுதப்பட்டுள்ளது. மன்னர்களின் வரலாறு பற்றியே மகாவம்சம் எழுதப்பட்டுள்ளது. நாட்டின் விவசாயம், கட்டுமானத்துறை, பௌதீக வளம், ஆடை அணிகலன்கள் தொடர்பில் எழுதப்படவில்லை. இதனை இலங்கையின் வரலாற்றை எழுதுவதற்கான விடயங்களை திரட்டிக்கொள்ளக் கூடிய ஒரு நூலாக கருதலாம்” என்று தெரிவித்தார்.

வணக்கத்திற்குரிய கொடபொல அமரகித்தி தேரர், கலாநிதி மெதகொட அபயதிஸ்ஸ தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினர் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

மேலும், அமைச்சர்களான விமல் வீரவங்ச, உதய கம்மன்பில, நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, பிரதமரின் மேலதிக செயலாளர் சமிந்த குலரத்ன, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன மற்றும் கலாநிதி குணதாச அமரசேகர உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

# கிரிபத்கொடையில் போலி அடையாள அட்டை தயாரிக்கும் இடம் சுற்றிவளைப்பு

## மேலும் பல ஆவணங்களுடன் சந்தேகநபரொருவர் கைது





கிரிபத்கொடை பொலிஸ் பிரிவுக்குட் பட்ட வெவெல்துவ பிரதேசத்தில் போலி அடையாள அட்டை உள்ளிட்ட மேலும் பல போலி ஆவணங்களைத் தயாரிக்கும் இடமொன்று சுற்றிவளைக்கப் பட்டுள்ளதாகவும், சந்தேக நபரொருவர் கைதுசெய்யப்பட் டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிரிபத்கொடை பொலிஸ் பிரிவுக்குட் பட்ட வெவெல்துவ பிரதேசத்தில் போலி அடையாள அட்டைகள் தயாரிக்கப்படுவதாக கிரிபத்கொடை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, போலியாக தேசிய அடையாள அட்டை தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட 05 அச்சு இயந்திரங்கள், 90 லெமினேட் கார்ட்கள், போலியாக தயாரிக்கப்பட்ட 05 அடையாள அட்டைகள், ஒரு போலி சாரதி அனுமதிப்பத்திரம், போலி இறப்பர் முத்திரைகள் மற்றும் அடையாள அட்டை தயாரிப்புக்கு பயன்படுத்தப்பட்ட கடதாசி என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

களனி பிரதேசத்தைச் சேர்ந்த 66 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், இவரை நேற்று மஹர நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தனர். இவ்வாறான செயற்பாடுகளில் அவதானத்துடன் செயற்பாடுமாறும், இதுதொடர்பான சுற்றிவளைப்புகளை எதிர்காலத்தில் முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அஜித் ரோஹண சுட்டிக்காட்டினார்.

# இந்தியாவில் எசல போயா தின கொண்டாட்டம்

இந்திய கலாசார மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சு, மகாபோதி சங்கம் – இந்தியா, கலாசார உறவுகளுக்கான இந்திய பேரவை ஆகியவற்றுடன் இணைந்து சர்வதேச பௌத்த கூட்டமைப்பு ஏற்பாடு செய்த வருடாந்த எசல போயா தினம் (இந்தியாவில் ஆஷாத பூர்ணிமா என அழைக்கப் படும்) கடந்த 24 ஆம் திகதி அனுஷ்டிக் கப்பட்டதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தனது செய்தியில், பௌத்த மதத்தை முறையாகப் பின்பற்றும் 550 மில்லியனுக்கும் அதிகமான மக்களைத் தாண்டி பௌத்தத்தின் சிறப்பம்சம் சென்றடைவதாகவும், மனிதகுலம் எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு பௌத்த மதத்தின் தர்க்க ரீதியான, பகுத்தறிவுள்ள மற்றும் எளிமையான தீர்வுகள் காரணமாக புத்தபெருமானின் போதனைகளால் ஏனைய மதத்தவர்கள், ஐயுறவுவாதிகள் மற்றும் நாஸ்திகர்களும் ஈர்க்கப் படுகின்றனர் எனவும் குறிப்பிட்டார். புத்தபெருமானின் முக்கிய கொள்கைகளான, பிரபஞ்சம்சார் இரக்கம், வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் ஒழுக்கம் மற்றும் பணிவு போன்ற எண்ணற்ற கொள்கைகள், சாரநாத்தில் அவரது முதல் பிரசங்கத்திலிருந்து கடந்த 2 ஆயிரத்து 600 ஆண்டுகளில், மக்களை ஊக்கப்படுத்தியுள்ளன. மேலும், சத்தியத்தை உறுதியாக கடைபிடித்ததன் விளைவே புத்தரின் ஆன்மிக சக்திக்கு காரணமாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கொவிட்-19 பெருந்தொற்றின் தாக்கத்தால் முன்னொருபோதும் இல்லாத வகையில் இரக்கம், அன்பு மற்றும் சுயநலம் இல்லாத தன்மை தற்போது உலகிற்கு அதிகம் தேவைப்படுகிறது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். அத்துடன் பௌத் தத்தில் கூறப்பட்டிருக்கும்பிரபஞ்சம் சார்ந்த மாண்புகளை ஏற்கவேண்டு மெனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இப்புனித நாளைக் குறிக்கும் முகமாக நடைபெற்ற மற்றொரு நிகழ்வில் உரை நிகழ்த்தியிருந்த பிரதமர் நரேந்திர மோடியும் இதுபோன்ற நிலைப்பாட்டை பிரதிபலித்திருந்ததுடன், பல்வேறு நெருக்கடி நிலைகளில் ஒற்றுமை மற்றும் அன்பு ஆகியவற்றின் சக்தியினை உலகம் உணர்ந்துகொண்டதாகவும் குறிப்பிட்டார்.

எமது மனம், பேச்சு, மற்றும் உறுதிப்பாடு ஆகியவற்றுக்கும் எமது செயல் மற்றும் முயற்சி ஆகியவற்றுக்கும் இடையிலான ஒற்றுமையானது, வலிகளிலிருந்து எம்மை வேறாக்கி மகிழ்வை நோக்கி கொண்டுசெல்லும் என புத்தபெருமானை மேற்கோளிட்டு பிரதமர் மோடி குறிப்பிட்டிருந்தார்.

புராதன வரலாறுகளின்படி புத்த பெருமான் மூன்று வேறுபட்ட சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்,

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பல்லாயிரம் ஆண்டுகள் பழைமையான பௌத்த உறவானது அக்காலப்பகுதி முதல் பேணப்பட்டு வருகிறது. பின்னர் அசோக மன்னர் தனது மகன் மஹிந்த மற்றும் மகள் சங்கமித்த தேரர் ஆகியோரை இலங்கைக்கு அனுப்பினார்.

தற்போதைய நவீன காலத்தில் இந்த ஆழமான உறவானது மதரீயான விழாக்கள், யாத்திரைகள் போன்றவற்றினால் குறிப்பிடப்படு கின்றன. 2020 செப்டெம்பரில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடனான மெய்நிகர் இருதரப்பு மாநாட்டின்போது இலங்கை - இந்தியா இடையிலான பௌத்த உறவினை மேம்படுத்துவதற்காக பிரதமர் நரேந்திர மோடி 15 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியினை ஒதுக்கியிருந்தமை இந்த சந்தர்ப்பத்தில் நினைவில் கொள்ளப்படவேண்டியது அவசியமாகும்.

# நபரொருவரின் சடலம் மீட்பு

(ஜூட் சமந்த)

புத்தளம், வன்னியதீவு, தல்கஸ்கந்த பிரதேசத்தில் புகையிரத பாதைக்கு அருகிலுள்ள ஒரு காட்டுப்பகுதியில் உயிரிழந்த நிலையில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவர்கள் சிலரால் நேற்று முன்தினம் இந்தச் சடலம் அவதானிக்கப்பட்டுள்ளதுடன் சடலம் தொடர்பில் அவர்களின் வீடுகளிலுள்ளவர்களுக்கு அறியப்படுத்தியுள்ளனர். அதன்பின்னர் அவர்களால் புத்தளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த நபர் 55 - 60 வயதுக்கு இடைப்பட்டவராக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். சில தினங்களுக்கு முன்னர் இவர் உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகிப்பதாகவும் உயிரிழந்தவர் யார் என்பது இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த மரணம் தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் இடம்பெறவுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# சிலாபம் நீதிமன்றத்திலிருந்து இரு சந்தேகநபர்கள் தப்பியோட்டம்

(ஜூட் சமந்த)

சிலாபம் நீதிமன்றத்தலிருந்து தப்பித்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படும் சந்தேகநபர்கள் இருவரை கைதுசெய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் இருவரும் கடந்த 25ஆம் திகதி தப்பிச்சென்றுள்ளனர். சிலாபம், திம்பில்ல மற்றும் பங்கதெனிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இருவரே இவ்வாறு நீதிமன்ற கட்டடத்தொகுதியிலிருந்து தப்பித்துச் சென்றுள்ளனர். அதற்கமைய, திமபில்ல பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேகநபர் ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பங்கதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேகநபர் திருட்டுத்தனமாக தேங்காய் திருடியது தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இவர்கள் இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். ஜீப்பினூடாக இருவரும் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதுடன், நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் தப்பிச் சென்றுள்ளனர்.

அதனையடுத்து அவர்களை கைது செய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். இருந்தபோதிலும் சந்தேகநபர்கள் இருவரும் இதுவரையில் கைதுசெய்யப்படவில்லை.

# கடும் மழையினால் கொழும்பின் சில பகுதிகளில் வெள்ளம்





(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

கொழும்பில் பல பகுதிகள் நேற்று அதிகாலையிலிருந்து பெய்த பெருமழை காரணமாக நீரில் மூழ்கின. கொழும்பு புறநகர்ப் பகுதிகளில் பல தாழ்நில வீதிகள் நீரில் மூழ்கியதால் போக்குவரத்து சில மணிநேரம் தடைப்பட்டது. பெருமளவான வாகனங்கள் தலைநகருக்குள் வந்திருந்த நிலையில் வீதிகள் நீரில் மூழ்கியதால் போக்குவரத்துத் தடையும் ஏற்பட்டது.

வெல்லம்பிட்டி பகுதிகளில் பல இடங்கள் நீரில் மூழ்கியதுடன் வீடுகளுக்குள்ளும் நீர் புகுந்துள்ளது. பலர் தமது உறவினர்களின் வீடுகளுக்கு செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

# சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறுபட்ட கோரிக்கைகளை முன்வைத்து அதிபர்கள் - ஆசிரியர்கள் புத்தளத்தில் ஆர்ப்பாட்டம்





(புத்தளம் நிருபர் )

சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள நிலையில் நேற்று புத்தளம் பிரதேசத்தில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

சம்பள முரண்பாட்டை நீக்குதல் உள்ளிட்ட மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்து புத்தளம் கல்வி வலயத்திற்குட்பட்ட அதிபர்கள் ஆசிரியர்களினால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இலங்கை ஆசிரியர் சங்கம், அதிபர் சங்கம் உள்ளிட்ட பல்வேறு ஆசிரியர் மற்றும் அதிபர் சங்கங்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தன.

சமபள முரண்பாட்டை நீக்கி அதிபர், ஆசிரியர் சம்பளத்தை வழங்குமாறும், கல்வித்துறையை ஆக்கிரமிக்க வேண்டாம் என வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மேலும், உத்தேச கொத்தலாவல பல்கலைக்கழக சட்டத்தை இல்லாதொழிக்குமாறும், 24 வருடகாலமாக இருந்துவரும் சம்பளப் பிரச்சினையை உடனடியாக பெற்றுக் கொடுக்குமாறும், இலவசக் கல்வியை விற்க வேண்டாம் என்றும் சம்பளப் பிரச்சினைக்காக போலி அமைச்சரவைப் பத்திரங்களை முன்வைக்க வேண்டாம் என்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் வலியுறுத்தினர்.

# கடமைகளிலிலிருந்து விலக அதிபர் சங்கங்கள் தீர்மானம்

(ஜூட் சமந்த)

உடன் அமுலுக்குவரும் வகையில் சகல கடமைகளிலிருந்தும் விலகுவதற்கு தீர்மானித்துள்ளதாக 09 அதிபர் சேவை சங்கங்கள் கல்வி அமைச்சின் செயலாளருக்கு கடிதத்தினூடாக அறிவித்துள்ளன.

அதற்கமைய, தற்போது நடைமுறையிலுள்ள ஆசரியர், அதிபர் சேவைகளிலுள்ள சம்பள பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக முன்னெடுக்கப்பட்டுவரும் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக ஏனைய கடமைகளிலிருந்தும் விலகுவதற்கு தீர்மானித்திருப்பதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் 09 ஆசிரியர் சங்கங்கள் கையொப்பமிட்டுள்ளன.

# நாமல் ராஜபக்ஷவுக்கும் ஜப்பானின் முன்னாள் அமைச்சருக்கும் இடையில் சந்திப்பு



விளையாட்டுத்துறை அமைச்சர் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கும் ஜப்பானின் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழில்துறை முன்னாள் அமைச்சர் ஒபுசி யுகோவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

வர்த்தகம், வேலைவாய்ப்பு, சுற்றுலா, கலாசார நடவடிக்கைகள், முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் இளைஞர் பரிமாற்ற திட்டங்கள் ஆகியவை நாடுகளுக்கும் மக்களுக் குமிடையே நெருக்கமான உறவை வளர்ப்பதில் முக்கிய துறைகளாகும்.

அதனடிப்படையில், இரு நாடு களுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து கலந்துரையாடப் பட்டுள்ளது.

# தொடர் மழையினால் ஆறுகளின் நீர்மட்டம் உயர்வு

ජල සම්පාදන අමාත්‍යාංශය
நீர் வழங்கல் அமைச்சு
MINISTRY OF WATER SUPPLY

இரத்தினபுரி உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் நேற்று பெய்த தொடர் மழையின் காரணமாக களு கங்கை, குரு கங்கை, தெனவக, நிரிஹெலி, வே, கலதுர, குகுலே ஆகிய பிரதான ஆறுகள் மற்றும் சிறயளவான கிளை ஆறுகளின் நீர்மட்டம் விரிவாக உயர்வடைந்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிவனொளிபாதமலை உட்பட ஆறுகள் மற்றும் நீரோடைப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்யும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு மணிநேரத்தில் ஒருசில ஆறுகளின் நீர்மட்டம் 4 - 6 அடிவரை உயர்வடைந்துள்ளதாக நீர்பாசனத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. தொடர்ந்து மழையுடனான காலநிலை நிலவுமாக இருந்தால் அவதானத்துடன் செயற்படுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# குற்றம் தவிர்

Police Roundup

தொகுப்பு:- நா.தினுஷா

## போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் கைது - பியகம

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய பியகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிலுவை தூணுக்கு அருகில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 10 கிராம் 370 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் கத்தியுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பதுரெலிய பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## கல்கிஸை

கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்கிஸை புகையிரத நிலையத்துக்கு முன்னிலையில் நேற்று முன்தினம் பொலிஸ் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இரத்மலானை பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## தலங்கம

தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவத்துகொட பிரதேசத்தில் நேற்று முன்தினம் தலங்கம பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 04 கிராம் 800 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தலவத்துகொட பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய சந்தேகநபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## கிரிபத்கொட

கிரிபத்கொட பொலிஸ பிரிவுக்குட்பட்ட நாஹேன பிரதேசத்தில் நேற்று முன்தினம் கிரிபத்கொட பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 04 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## பொரளை

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சரசவி பிரதேசத்தில் நேற்று முன்தினம் பொரளை பொலிஸ் அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 03 கிராம் 580 மில்லிகிராம் ஹெரொயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பொரளை பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## வத்தளை

வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எவரிவத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 03 கிராம் 05 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## புதையல் தோண்ட முயற்சித்த மூவர் கைது - மொரவெவ

மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹதிவுல்வெவ பிரதேசத்தில் புதையில் தோண்டும் நடவடிக்கை இடம்பெறுவதாக நேற்று முன்தினம் மொரவெவ பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் பூஜைப் பொருட்களுடன் சந்தேகநபர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

விஜிதபுர மற்றும் மஹதிவுல்வெவ பிரதேசத்தைச் சேரந்த 30, 47 மற்றும் 52 வயதுடையவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## நீரிழ் அடித்துச்சென்று இருவர் பலி - கொபெய்கனே

கொபெய்கனே பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெதுஊயா, மஹகெலியாவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் நீராடுவதற்காக சென்ற இருவர் நீரில் அடித்துச் சென்று படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் நிக்கவெரட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது இருவரும் உயிரிழந்துள்ளனர். குளியாப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 17 மற்றும் 27 வயதுடைய இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

## வீதி விபத்து - வெலிகந்த

வெலிகந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செவனபிட்டிய, பொருவெவ கிளை வீதியில் நேற்று முன்தினம் மெனிக்வெல பிரதேசத்தில் செவனப்பிட்டியவை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் அதேதிசையில் பயணித்த ரிப்பர் ரக வாகனமொன்றை முந்திச்செல்ல முயற்சித்தபோது ரிப்பர் வாகனத்தில் மோதி விபத்தொன்று இடம்பெற்றுள்ளது.

விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான மோட்டார் சைக்கிளின் சாரதி வெலிகந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார். வெடகொலுவாகம, கல்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் ரிப்பர் வாகனத்தில் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## வாரியபொல

வாரியபொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவின்ன, கினிமான்ன மாற்று வீதியில் நேற்று முன்தினம் தாபெலியத்த விகாரைக்கு அருகில் நாவின்னவை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் அதே திசையில் பயணித்த இன்னுமொரு மோட்டார் சைக்களின் பின்னால் மோதியதில் விபத்தொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான மோட்டார் சைக்கிள் சாரதிகள் இருவர் மற்றும் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் வாரியபொல வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்ததன் பின்னர் சாரதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இஹலதில்ல, பமுனாகொட்டு பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## கொபெய்கனே

கொபெய்கனே பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புத்தளம் கட்டுகஸ்தொட்ட வீதியில் நேற்று முன்தினம் மொரகஹவெவ பிரதேசத்தில் நிக்கவெரட்டியவை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் அதேதிசையில் பயணித்த சைக்கிளில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயங்களுக்குள்ளான சைக்கிள் ஓட்டுனர் மற்றும் மோட்டார் சைக்கிள் சாரதி இருவரும் நிக்கவெரட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சைக்கிள் ஓட்டுநர் உயிரிழந்துள்ளார்.

மொரகஹவெவ, விதிகுளிய பிரதேசத்தைச் சேர்ந்த 59 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## திடீர் தீப்பரவல் - மின்னேரியா

மின்னேரியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடுகெலியாவ பிரதேசத்திலுள்ள தொழிற்சாலையொன்றில் நேற்று முன்தினம் திடீர் தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். பொலன்னறுவை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகளினால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த தீ விபத்தினால் உயிர் சேதம் எதுவும் இடம்பெறவில்லை என்பதுடன், நட்டம் இதுவரையில் கணிக்கப்பட வில்லை. தீப்பரவல் ஏற்படுவதற்கான காரணம் இதுவரையில் அடையாளம் காணப் படவில்லை.

# வடக்கு செய்திகள்

thamilannorth@gmail.com

# மன்னாரில் 52,144 பேருக்கு முதலாம் கட்ட சமூக தடுப்பூசிகள்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வினோதன்

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் தற்போதுவரை 46 ஆயிரத்து 440 பேருக்கு பைஸர் தடுப்பூசியின் முதலாவது ஊசி செலுத்தப்பட்டுள்ளது – என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு சமூக தடுப்பூசி ஏற்றுதல் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான சமூக தடுப்பூசி ஏற்றும் பணிகள் ஓரளவு நிறைவடைந்துள்ளன.

அதனடிப்படையில் இதுவரையில் 52 ஆயிரத்து 144 பேருக்கு சமூக தடுப்பூசியின் முதலாவது ஊசி செலுத்தப்பட்டுள்ளது.

இதில் 46 ஆயிரத்து 440 பேர் பைஸர் தடுப்பூசியின் முதலாவது ஊசியை பெற்றுக்கொண்டுள்ளனர். 550 பேருக்கு 2ஆவது ஊசி வழங்கப்பட்டுள்ளது.

666 பல்கலைக்கழக மற்றும் கல்வியல் கல்லூரி மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கு முதலாவது தடுப்பூசி பைஸர் வழங்கப்பட்டுள்ளது.



இதனடிப்படையில் மாவட்டத்தில் 68 சதவீதம் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. அவர்களுக்கான 2ஆம் கட்ட தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை எதிர்வரும் 5ஆம் திகதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

இந்த மாதம் தற்போதுவரை 148 பேர் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த வருடத்தில் மொத்தம் 940 தொற்றாளர்களும் தற்போதுவரை 957 தொற்றாளர்களும் மன்னார் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட 600 பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளில் கிடைக்கப்பெற்றுள்ள முடிவுகளின் அடிப்படையில் 14 பேருக்கு தொற்று உள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவர்களில் இருவர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த மாதம் தற்போதுவரை 2 ஆயிரத்து 341 பி.சி.ஆர். பரிசோதனைகளும், அதுவரை 24 ஆயிரத்து 617 பி.சி.ஆர். பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மக்கள் தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டாலும் தொடர்ந்தும் சுகாதார விதிமுறைகளை உரிய முறையில் கடைப்பிடிக்க வேண்டும்.

தடுப்பூசிகள் வழங்கப்படுவது பாரதூரமான கொரோனா தொற்று ஏற்படுவதை தவிர்க்க அன்றி தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்களுக்கும் கொரோனா தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது. அவர்களுக்கு அந்த நோய் பாரதூரமாக அமையாவிட்டாலும், தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு அவர்கள் மூலம் நோய் ஏற்படுகின்றபோது அவர்களுக்கு பாரதூரமான விளைவுகள் ஏற்பட சந்தர்ப்பம் உள்ளது.

இதை அனைவரும் புரிந்துகொண்டு தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டாலும், சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டும்.

முதலாவது தடுப்பூசி பெற்றுக்கொண்ட அனைவரும் 2ஆவது தடுப்பூசியை உரிய நேரத்தில் சென்று பெற்றுக்கொள்ள வேண்டும்.

அதன் மூலம் முழுமையான பாதுகாப்பை கொரோனா தொற்றிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும் – என்றார்.

# வடமாகாண பிரதம செயலாளராக சமன் பந்துலசேன பதவியேற்பு



(சாவகச்சேரி நிருபர்)

வடமாகாணத்தின் புதிய பிரதம செயலாளராக நேற்று திங்கட்கிழமை காலை சமன் பந்துலசேன உத்தியோகபூர்வமாக பதவியேற்றிருந்தார்.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றிய நிலையில் அவர் பதவி உயர்வு கிடைக்கப்பெற்று வடமாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சர்வமதத் தலைவர்களின் ஆசியுடன் பௌத்த மத அனுஸ்டானங்களைத் தொடர்ந்து அவர் தனது பதவியை பொறுப்பேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடமாகாண பிரதம செயலாளராக உத்தியோகபூர்வமாக தனது கடமைகளை பொறுப்பேற்ற பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

மக்களுக்கு கடமையாற்றும்போது மொழி ஒரு பிரச்சினையான விடயமல்ல.

நான் வவுனியாவில் கடந்த ஒன்றரை வருடங்களாக அரச அதிபராக கடமை யாற்றியிருந்தேன். வவுனியாவை பொறுத்தவரை தமிழ் சிங்கள இனத்தைச்சேர்ந்த அனைத்து மதங்களையும் உள்ளடக்கிய மக்கள் வசித்து வருகின்றார்கள் அவ்வாறான பிரதேசத்தில் கடந்த ஒன்றரை வருடங்களாக நான் கடமையாற்றி இருந்தேன்.

எனவே, நான் ஒரு சிங்களவனாக இருந்தாலும் தமிழ் பிரதேசத்தில் கடமையாற்றுவதில் எந்தவித இடையூறும் இருக்காது என நான் கருதுகின்றேன். அதாவது நாங்கள் மக்களோடு கடமை ஆற்றும் போது மொழி ஒரு பிரச்சினையாக இருக்காது – என்றார்.

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் குழந்தைகள் இருவருக்கு கொரோனா

யாழ். தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் பச்சிளம் குழந்தைகள் இருவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

13 நாட்களேயான ஆண் குழந்தை மற்றும் 6 மாதங்களேயான பெண் குழந்தை என இரு பச்சிளம் குழந்தைகளுக்கு இவ்வாறு தொற்று உறுதிசெய்யப்பட்டிருப்பதாக மருத்துவ அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஊழியருக்கு கொரோனா தொற்று

## ஆய்வுகூடம் தற்காலிக முடக்கம்

யாழ்ப்பாணம் தென்மராட்சி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ள நிலையில் வைத்தியசாலையின் ஆய்வுகூடச் செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

தொற்றுக்குள்ளான ஊழியர் வைத்தியசாலையின் ஆய்வுகூட ஊழியர் என்பதால் ஆய்வுகூடத்தில் பணியாற்றிய சக ஊழியர்களுக்கும் பிசிஆர் மாதிரிகள் பெறப்பட்டுள்ளன. பிசிஆர் முடிவுகள் வெளியாகிய பின்னரேயே அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்கப்படும் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# ஹிசாலினியின் மரணத்திற்கு நீதிகோரி வவுனியாவில் கவனயீர்ப்புப் போராட்டம்



(வவுனியா நிருபர்)

சிறுமி ஹிசாலினியின் மரணத்திற்கு நீதி கோரி வவுனியாவில் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா உள்ளூராட்சி மன்றங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பெண் உறுப்பினர்கள் மற்றும் சிவில் பெண்கள் அமைப்புகள் இணைந்து பழைய பஸ் நிலையம் முன்பாக நேற்றுக் காலை குறித்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் வீட்டில் மரணித்த சிறுமி ஹிசாலினியின் மரணத்திற்கு நீதி கிடைக்க வேண்டும். அரசியல் யாப்பில் 18 வயதிற்கு உட்பட்டவர்களை வேலைக்கு அமர்த்தக்கூடாது என கூறப்பட்டுள்ளபோதும் அவை தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை. சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் இடைத்தரகர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கவேண்டும். பெற்றோரும் தங்கள் பிள்ளைகள் தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும். அத்துடன், சட்டம் இயற்றும் நாடாளுமன்றத்தில் பெண் பிரதிநிதிகளை அதிகரிப்பதன் மூலமே இந்த நாட்டில் பெண்களுக்கு சார்பான சட்ட ஏற்பாடுகளை கொண்டுவந்து முழுமையாக நடைமுறைப்படுத்த முடியும் எனவும் கருத்து தெரிவித்தனர்.

இதன்போது அரசே ஹிசாலினியை கொன்றவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி நீதியை வழங்கு, பெண்களை நாட்டின் கண்களாக நினைத்து தீண்டாதிருப்போம், சிறுவர்களை வேலைக்கு அமர்த்தாது அவர்களது உரிமைகளை வழங்குவோம், சிறுவர்களுக்கான பாதுகாப்பை கட்டியெழுப்போம் என எழுதப்பட்ட பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

போராட்டத்தில் வவுனியா நகரசபை மற்றும் பிரதேச சபைகளின் பெண் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# கண்டாவளை பிரதேச செயலக ஊழியருக்கு கொரோனா தொற்று

கிளிநொச்சி மாவட்டம் கண்டாவளை பிரதேச செயலக ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ள நிலையில் செயலகத்தின் செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கொடிகாமத்தைச் சேர்ந்த கண்டாவளை பிரதேச செயலகத்தில் பணியாற்றும் ஊழியர் ஒருவர் எழுமாற்றான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டு கடந்த இரவு அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து, நேற்று முதல் பிரதேச செயலகச் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டு அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கு பிசிஆர் மாதிரிகள் பெறப்படுகின்றன.

இந்நிலையில், ஊழியர்களின் பிசிஆர் முடிவுகள் வெளிவந்த பின்னர் பிரதேச செயலகச் செயற்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்றும், பிறப்பு மற்றும் இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் உட்பட்ட மிக அவசியமான தேவைகளை அரச செயலகத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளுமாறும் பிரதேச செயலர் பிருந்தாபன் தெரிவித்துள்ளார்.

# எல்லப்பர் மருதங்குளம் சிவன் முதியோர் இல்லத்திற்கு சுத்திகரிப்பு குடிநீர்த் தொகுதி



(வவுனியா நிருபர்)

வவுனியா எல்லப்பர் மருதங்குளத்தில் அமைந்துள்ள சிவன் முதியோர் இல்லத்திற்கு இலண்டன் சிறுவர் வறுமை நிவாரண நிதியம் ஊடாக சுத்திகரிப்பு குடிநீர்த் தொகுதி கையளிக்கப்பட்டது.

வவுனியா கோவிற்குளம் அருள்மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோவிலின் அனுசரணையில் அருளகம் சிறுவர் இல்லம் மற்றும் சிவன் முதியோர் இல்லம் என்பன இயங்கிவருகின்றன.

சிவன் முதியோர் இல்லத்தில் வசிப்பவர்களின் நலனை கருத்திற்கொண்டு லண்டன் சிறுவர் வறுமை நிவாரண நிதியம் ஊடாக சுத்திகரிப்பு குடிநீர்த் தொகுதி அமைக்கப்பட்டு பயன்பாட்டுக்கு விடப்பட்டது.

இந்நிகழ்வில் சட்டத்தரணி , பொறியியலாளர், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், வர்த்தக சங்கத்தின் பிரதிநிதி என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# வேலணையில் 12 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

யாழ்ப்பாணம் வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 12 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த 32 பேருக்கு பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அவர்களில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து தொற்றுக்குள்ளானவர்களை கொரோனா சிகிச்சை மையங்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், தொற்றாளர்களுடன் தொடர்பிலிருந்தவர்களை தனிமைப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# சட்டவிரோத காணி அபகரிப்பை நிறுத்த கோரி முசலி பகுதியில் போராட்டம்

(மன்னார் நகர் நிருபர்)

முசலி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத காணி அபகரிப்பை தடுத்து நிறுத்தக் கோரி நேற்றுக காலை 10 மணியளவில் முசலி பிரதேச செயலகத்துக்கு முன்னால் வை.எவ்.சி. அமைப்பினரால் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது

பூனாட்சிகுளம், பண்டாரவெளி போன்ற பகுதிகளிலுள்ள அரச காணிகள் தனியார் சிலரால் அடாத்தாக பிடிக்கப்படுகின்றன. இதனால் அப்பகுதியிலுள்ள மக்களுக்கும், இளைஞர்களுக்கும் காணிகள் இல்லாத நிலை காணப்படுகின்றது. இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் விரைவில் அடையாளம் காணப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் நேற்று போராட்டத்தை முன்னெடுத்தனர்



காணிகளை விடுதலைசெய்து காணியில்லாத ஏழை விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கவும், காணி அத்துமீறலை உடனே நிறுத்து, அடாவடி காணி பிடித்தலை உடனடியாக நிறுத்தவும், அடாத்தாக காணி பிடித்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும், எமது பகுதியில் பணம் படைத்தவர்கள் மற்றும் அரசியல் செல்வாக்கு உள்ளவர்களே காணிகளை அபகரிக்கின்றனர் போன்ற பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டக்காரர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்

குறித்த போராட்டத்தின் பின்னர் கோரிக்கை அடங்கிய மகஜரை முசலி பிரதேச செயலாளரிடம் கையளித்தனர்.

# வவுனியாவில் சந்தை உள்வட்ட வீதியைச் சேர்ந்த 11 பேர் உட்பட 14 பேருக்கு கொவிட் தொற்று

(வவுனியா நிருபர்)

வவுனியா சந்தை சுற்றுவட்ட வீதியிலுள்ள வர்த்தக நிலையங்களைச் சேர்ந்த 11 பேர் உட்பட 14 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா சந்தை உள்வட்ட வீதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் கடமையாற்றுபவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனை முடிவுகள் நேற்று முன்தினம் வெளியாகியுள்ளன.

அதில் 11 பேருக்கு கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்பை பேணிய மேலும் மூவருக்கும் கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் வவுனியாவில மேலும் 14 பேர் கொவிட் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# ஸ்ரீ கந்தசாமி ஆலய பூசை வழிபாடுகளில் ஈடுபட்டார் வடமாகாண பிரதம செயலாளர்



(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தின் அரச அதிபர் எஸ்.எம்.சமன் பந்துலசேன வடக்கின் பிரதம செயலாளராக ஜனாதிபதியால் கடந்த சில தினங்களுக்கு முன்னர் நியமிக்கப்பட்டார்.

வடமாகாண பிரதம செயலாளராக சமன் பந்துலசேன யாழ்ப்பாணத்தில் நேற்று பதவியேற்கவுள்ள நிலையில் வவுனியா ஸ்ரீ கந்தசாமி ஆலயத்தில் காலை பூசை வழிபாட்டில் ஈடுபட்டார்.

இவ்வழிபாட்டு நிகழ்வில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் , சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்

சம்பவம் தொடர்பாக ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கொரோனா செய்திகள்

## கெஸ்பேவ ஆடைத் தொழிற்சாலையில் 120 ஊழியர்களுக்கு கொரோனா தொற்று

கெஸ்பேவ பகுதியிலுள்ள ஆடைத் தொழிற் சாலை ஊழியர்கள் 120 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த ஆடைத் தொழிற் சாலையை 10 நாட்களுக்கு மூடுவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். ஊழியர் கள் சிலருக்கு கொவிட் - 19 தொற்றுக்குரிய அறிகுறிகள் தென்பட்டதையடுத்து அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த அறிக்கைகளின் பிரகாரம் ஒருசிலருக்கு தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது. இதனையடுத்து அவர்களுடன் தொடர்பிலிருந்த ஏனைய ஊழியர்களுக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு தொற்றுக்குள்ளானோரை தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்துக்கு அனுப்புவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## ஓகஸ்ட் முதலாம் திகதிமுதல் மாகாண பொதுப் போக்குவரத்துக்கு அனுமதி

### இவ்வார இறுதியில் தீர்மானம் என்கிறார் அமைச்சர் லொக்குகே

எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதிமுதல் மாகாணங்களுக்கிடையிலான பொதுப் போக்குவரத்துக்கு அனுமதியளிக்க போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது. இது தொடர்பான இறுதித் தீர்மானம் இவ்வார இறுதியில் கொவிட் - 19 தொற்றுப் பரவலைத் தடுக்கும் தேசிய செயலணிக் கூட்டத்தில் எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே ‘தமிழன்’ நாளிதழுக்குத் தெரிவித்ததாவது,

சுகாதார விதிமுறைகளுக்கமைவாக மாகாணங் களுக்கிடையே பொதுப்போக்குவரத்துச் சேவைகளை ஆரம்பிப்பதற்கு நாம் திட்டமிட்டுள் ளோம். எனினும், சுகாதார அதிகாரிகளின் அனுமதி கிடைக்கப்பெற வேண்டும் எனத் தெரிவித்தார்.

ஜூலை 14ஆம் திகதி மாகாணங்களுக்கிடையே போக்குவரத்து தளர்த்தப்பட்டபோதிலும் 17ஆம் திகதி மீண்டும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

## இரண்டு தடுப்பூசிகளையும் பெற்ற 100 பேருக்கு கொரோனா தொற்று

கொவிட் - 19 தடுப்பூசிகள் இரண்டையும் ஏற்றிக்கொண்ட 100 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் அதிகமானோர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களென சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு தொற்றுக்குள்ளானோரில் பெரும் பாலானோருக்கு நோய் அறிகுறிகள் தென்பட வில்லையெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் ஒரு சிலர் உடல் களைப்பாக உணர்ந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஆறு கிராமசேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிப்பு

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மேலும் சில பகுதிகள் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்படுவதாக இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதன்படி, 5 மாவட்டங்களைச் சேர்ந்த 6 கிராம சேவகர் பிரிவுகள் இவ்வாறு தனிமைப்படுத்தலி லிருந்து விடுவிக்கப்பட்டுவதாகவும் இராணுவத் தளபதி அறிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்ட பகுதிகள்:

கேகாலை மாவட்டம் - கேகாலை பொலிஸ் பிரிவு - மலவிட கிராமசேவகர் பிரிவின் கோலிந்தவத்த இல 03 பகுதி,

இரத்தினபுரி மாவட்டம் - அயகம பொலிஸ் பிரிவு -பரகல கிராம சேவகர் பிரிவு/

காலி மாவட்டம் - எல்பிட்டிய பொலிஸ் பிரிவு - பழைய கொலனி கிராமசேவகர் பிரிவின் திவிதுருவத்த.

முல்லைத்தீவு மாவட்டம் - நாயாறு பொலிஸ் பிரிவு -செம்மலை கிழக்கு கிராமசேவகர் பிரிவின் மீனவர் கிராமம்

மொனராகலை மாவட்டம் - மொனராகலை பொலிஸ் பிரிவு - ஹிந்திகிவுல கிராமசேவகர் பிரிவின் மில்லகெலேவத்த கிராமம்.

## ஆசிரியர் போராட்டத்தால் புதிய கொத்தணி உருவாகும்

### இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன எச்சரிக்கை


சுகாதார வழிகாட்டுதல்களைப் பொருட்படுத் தாமல் போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர் களிடையே புதிய கொரோனா கொத்தணி உருவாகக்கூடும் - என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதும் டெல்ட்டா மாறுபாடு பரவி வரும் நேரத்தில் இத்தகைய ஆர்ப்பாட்டங்களுக்கு அனுமதி வழங்கமுடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆசிரியர்களுக்கு முழுமையாக தடுப்பூசி போடப்படவில்லை, எனவே, அவர்கள் மத்தியில் புதிய கொத்தணி உருவாகலாம் என நிபுணர்கள் எச்சரித்துள்ளதாகவும் சன்ன ஜெயசுமன கூறியுள்ளார்.

தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆசிரியர்களுக்கு உரிமை இருந்தாலும் இந்த போராட்டங்கள் அவர்களிடையே நோய் பரவுவதற்கு வழிவகுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## 90 ஆயிரம் பைசர் தடுப்பூசிகள் நாட்டுக்கு



அமெரிக்காவினால் தயாரிக்கப்பட்ட பைசர் கொவிட்-19 தடுப்பூசியின் மேலும் ஒரு தொகுதி நேற்று நாட்டுக்கு கொண்டுவரப்பட்டது. அதனடிப்படையில் 90 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

547 கிலோகிராம் எடையுள்ள இந்தத் தடுப்பூசிகள் 15 பெட்டிகளில் அடைக்கப்பட்டு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க விமான நிலையத்திற்கு நேற்று அதிகாலை கொண்டுவரப்பட்டதாக விமான நிலைய அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இந்த தடுப்பூசி அளவுகள் பின்னர் அரச மருந்தக கூட்டுத்தாபனங்களின் குளிரூட்டிகள் பொருத்தப்பட்ட வாகனத்தின் மூலமாக கொழும்பிலுள்ள பிரதான களஞ்சியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளன.






## கொழும்பில் நேற்றுமுதல் விசேட சோதனை நடவடிக்கை

தலைநகர் கொழும்பில் முகக் கவசம் அணியாதோரை கைது செய்வதற்கான விசேட சோதனை நடவடிக்கை நேற்றுமுதல் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. பயணக்கட்டுப் பாடுகள் தளர்த்தப்பட்டுள்ள நிலையில் மக்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் இந்தச் சோதனை நடவடிக்கையை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் பலர் முகக்கவசம் அணியாமல் நடமாடுவதாக கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

## கம்பஹாவில் 24 மணித்தியாலங்களில் 566 பேருக்கு கொரோனா தொற்று

கம்பஹா மாவட்டத்தில் நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 566 பேர் கொரோனா தொற்றுக்குள்ளானதாக அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் அந்த மாவட்டத்தில் கொரோனா தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 61 ஆயிரத்து 511 ஆக அதிகரித்துள்ளது.

மஹர சுகாதார அதிகாரி காரியாலயத் துக்குட்பட்ட பகுதியில் 67 பேரும், வத்தளையில் 65 பேரும், மீரிகம மற்றும் கம்பஹாவில் 57 பேரும், அத்தனல்லயில் 50 பேரும் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

அத்துடன் பியகம, தொம்பே, களனி, ஜாஎல பகுதிகளில் முறையே 49, 48, 37, 23 என நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

திவுலுபிட்டியவில் 22 பேரும் சீதுவவில் 17 பேரும் மினுவங்கொடயில் 15 பேரும் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, 336 பேரை தனிமைப் படுத்தல் மத்திய நிலையங்களுக்கு அனுப்புவதற்கு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நடவடிக்கை எடுத்துள் ளதுடன், மேலும் 169 பேர் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இவ்வாறு கொரோனா தொற்றுக்குள்ளானோரில் 48 பேர் முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தைச் சேர்ந்தவர்களென சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கொழும்பில் 360 நோயாளர்கள் நேற்றுமுன்தினம் அடையாளம்

நாட்டில் நேற்றுமுன்தினம் அடையாளங் காணப்பட்ட கொரோனா நோயாளர் களில் அதிகமானோர் கொழும்பில் பதிவாகியுள்ளனர். அதனடிப்படையில் கொழும்பில் 360 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாக கொவிட் -19 தொற்றுப் பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், கம்பஹா மாவட்டத்தில் 256 பேரும் களுத்துறையில் 139 பேரும் தொற்றுக்குள்ளாகி இருந்தனர். காலியில் 172 பேருக்கும், அம்பாறையில் 179 பேருக்கு தொற்று உறுதிசெய்யப் பட்டுள்ளது.

அதனடிப்படையில் நேற்றைய தினம் நாட்டில் மொத்தமாக ஆயிரத்து 666 பேருக்கு கொவிட் தொற்று உறுதிப் படுத் தப்பட்டுள்ளது.

அத்துடன், நேற்று முன்தினம் தொற்றுக்குள்ளானவர்களுள் 10 பேர் வெளிநாடுகளிலிருந்து வருகை தந்தவர்கள் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## துளிச் செய்திகள்

மாரவில பொது வைத்தியசாலையில் பணியாற்றும் விசேட வைத்திய நிபுணர் ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாக பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். இதன் காரணமாக குறித்த வைத்தியர் கண்டியிலுள்ள கொரோனா சிகிச்சை மத்திய நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

கம்பஹா நுதுரு பகுதியிலுள்ள விகாரையில் பிக்குகள் இருவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், விகாரைக்கு வருகைதந்தோருக்கு அன்ரிஜன் பரிசோதனைகளை முன்னெடுப்பதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அளுத்கம, கலுவாமோதர பகுதியில் 143 பேரிடம் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனைகளில் 47 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. கலுவாமோதர, முல்லபிட்டிய, ஹெட்டிமுல்ல, மொரகல்ல ஆகிய பகுதிகளில் வசிப்போரே இவ்வாறு தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.



# இந்திய செய்திகள்

## யுனெஸ்கோ உலக பாரம்பரியப் பட்டியலில் தெலுங்கானாவின் ருத்ரேஷ்வரா கோயில்

தெலுங்கானா ருத்ரேஷ்வரா கோயில் யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய சின்னங்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

தெலுங்கானா மாநிலம் வாராங்கல் அருகே பாலம்பேட்டிலுள்ள ருத்ரேஷ்வரா கோயில், 13ஆம் நூற்றாண்டை சேர்ந்தது. கோயிலை உருவாக்கிய சிற்பியின் பெயரால் இந்தக் கோயில் ராமப்பா கோவில் என அழைக்கப்படுகிறது. இந்திய மத்திய அரசின் பரிந்துரையை ஏற்று உலக பாரம்பரிய இடமாக சேர்க்கப்பட்டுள்ளதாக யுனேஸ்கோ அறிவித்துள்ளது.

இதையொட்டி, பிரதமர் மோடி ட்விட்டரில் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், கம்பீரமான இந்தக் கோயில் வளாகத்துக்கு சென்று, அதன் பிரம்மாண்டத்தின் முதல் அனுபவத்தைப் பெறவேண்டும் என மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

## பழம்பெரும் நடிகை ஜெயந்தி காலமானார்



பழம்பெரும் நடிகை ஜெயந்தி உடல்நலக்குறைவால் தனது 76ஆவது வயதில் நேற்று காலமானார்.

தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு, ஹிந்தி உள்ளிட்ட பல மொழிகளில் 500இற்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்தவர் நடிகை ஜெயந்தி.

தமிழில் ‘எதிர்நீச்சல்’, ‘இரு கோடுகள்’, ‘பாமா விஜயம்’, ‘கண்ணா நலமா’ போன்ற படங்களில் நடித்துள்ளார்.

மறைந்த பழம்பெரும் நடிகர்களாக எம்ஜிஆர், ஜெமினி கணேசன் உட்பட பல நடிகர்களுடன் இணைந்து நடித்துள்ளார். இதில் ஜெமினி கணேசனுடனேயே அதிக படங்களில் நடித்துள்ளார்.

கடந்த சில ஆண்டுகளாக ஆஸ்துமாவால் பாதிக்கப்பட்டிருந்த அவர் சினிமாவிலிருந்து விலகியிருந்தார்.

இந்நிலையில், உடல்நலக் குறைவு காரணமாக பெங்களூரிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நடிகை ஜெயந்தி சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை தனது 76ஆவது வயதில் உயிரிழந்தார்.

பழம்பெரும் நடிகை ஜெயந்தியின் மறைவையொட்டி திரையுலகினர், இரசிகர்கள் என பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

## இமாச்சலில் மண்சரிவில் சிக்கி 9 சுற்றுலாப் பயணிகள் உயிரிழப்பு

இமாச்சலப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட பயங்கர மண்சரிவில் சிக்கி 9 சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்தனர்.

இமாச்சலப் பிரதேச மாநிலம் கின்னோர் மாவட்டத்தில் உள்ளது சங்லா பள்ளத்தாக்கு. இங்கு கடந்த சில தினங்களாக பலத்த மழை பெய்துவருவதால், மலைப் பகுதிகளில் மண்சரிவு ஏற்படக்கூடும் என வானிலை ஆய்வு மையம் அண்மையில் எச்சரித்திருந்தது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் அங்குள்ள மலைப்பகுதியில் பயங்கர மண்சரிவு ஏற்பட்டது. இதில் அங்கிருந்த நூற்றுக்கணக்கான பெரிய பாறைகளும் சரிந்து விழுந்தன. அப்போது, மலை அடிவாரத்திலிருந்த சுற்றுலாப் பயணிகளின் கார்கள் மீது பாறைகள் விழுந்ததில் 9 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தனர். 20இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். அவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரது நிலைமை



கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்பு அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

இதனிடையே, இந்தப் பாறைகள் விழுந்ததில் அங்கிருந்த ஆற்றுப்பாலம் இடிந்து தரைமட்டமானது. இதனால் அப்பகுதியில் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக இமாச்சல் அரசு தெரிவித்துள்ளது.

## ஐஸ்வர்யா ராய் குடும்பமும் சரத்குமார் குடும்பமும் சந்திப்பு



இயக்குநர் மணிரத்னம் இயக்கத்தில் கார்த்தி, ஜெயம் ரவி, விக்ரம், சரத்குமார், த்ரிஷா, ஐஸ்வர்யா ராய், அமிதாப் பச்சன், பிரபு, நிழல்கள் ரவி, ரஹ்மான், விக்ரம் பிரபு உள்ளிட்ட பலர் நடிப்பில் உருவாகிவரும் படம் பொன்னியின் செல்வன்.

எழுத்தாளர் கல்கி எழுதிய நாவலை அடிப்படையாக வைத்து தமிழ், ஹிந்தி, தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் இப்படம் எடுக்கப்படுகிறது. இரு பாகங்களாக உருவாகும் இப்படத்தை லைகா நிறுவனம் தயாரிக்கிறது. முழுவீச்சில் நடைபெற்றுவந்த இப்படத்தின் படப்பிடிப்பு, கொரோனா இரண்டாம் அலை பரவல் காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

தற்போது கொரோனா பரவலின் தாக்கம் குறையத் தொடங்கியதையடுத்து, மீண்டும் படப்பிடிப்பைத் தொடங்கியுள்ள படக்குழு, புதுச்சேரியில் இறுதிகட்டப் படப்பிடிப்பை நடத்திவருகிறது. இதில், ஐஸ்வர்யா ராய், சரத்குமார் சம்பந்தப்பட்ட காட்சிகள் படமாக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், படப்பிடிப்புத் தளத்தில் நடிகை ஐஸ்வர்யா ராயின் குடும்பமும் நடிகர் சரத்குமாரின் குடும்பமும் சந்தித்துக்கொண்டன. அந்தச் சந்திப்பின்போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகிவருகின்றன.

## கர்நாடக முதலமைச்சர் எடியூரப்பா இராஜினாமா

**“என் ஆட்சிக்காலம் முழுவதும் அக்னி பரீட்சையாக அமைந்துவிட்டது” என கண்ணீர் மல்க பேச்சு**



கர்நாடகா முதலமைச்சர் எடியூரப்பா தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். தனது இராஜினாமா கடிதத்தை ஆளுநரிடம் கையளித்துள்ளார்.

கர்நாடகாவில் கடந்த 2019ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26ஆம் திகதி எடியூரப்பா 4ஆவது முறையாகவும் முதலமைச்சராக பதவியேற்றார். 75 வயதை தாண்டிய தலைவர்களுக்கு பா.ஜ.கவில் கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டுவருகிறது. ஆனால், அதிலிருந்து 76 வயதான எடியூரப்பாவுக்கு விலக்களித்து அவருக்கு முதலமைச்சுப் பதவியை பா.ஜ.க. மேலிடம் வழங்கியது. அப்போதே 2 ஆண்டுகள் முடிந்ததும் முதலமைச்சுப் பதவியை விட்டுக்கொடுக்க வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டது. அந்த நிபந்தனையை ஏற்ற எடியூரப்பா முதலமைச்சராக பதவியேற்றார். அவர் பதவியேற்று நேற்றுடன் (ஜூலை 26) 2 ஆண்டுகள் நிறைவடைந்தன.

கடந்த 16ஆம் திகதி டில்லி சென்ற எடியூரப்பா, பிரதமர் மோடி, பா.ஜ.க, தேசிய தலைவர் ஜே.பி.நட்டா, உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோரை நேரில் சந்தித்துப் பேசினார். அப்போது 2 ஆண்டுகள் நிறைவடைவதால் நிபந்தனைப்படி முதலமைச்சர் பதவியை விட்டு விலகுமாறு கேட்டுக்கொண்டனர். முதலமைச்சுப் பதவியை இராஜினாமா செய்வதாக எடியூரப்பாவும் உறுதியளித்தார்.

இந்நிலையில், எடியூரப்பாவின் 2 ஆண்டுகால சாதனையை கொண்டாடும் விதமாக நிகழ்ச்சி ஒன்றுக்கு பெங்களூரில் கர்நாடக அரசு ஏற்பாடுசெய்திருந்தது. இதில் கலந்துகொண்ட எடியூரப்பா, என்னை 7 முறை எம்.எல்.ஏவாக தேர்ந்தெடுத்த மக்களுக்கு நன்றி. நான் கட்சி மேலிடத்தின் முடிவை ஏற்றுக்கொள்வேன். கட்சி மேலிடத்தின் முடிவை மீற மாட்டேன்.

எனக்கு எந்த குறையும் இல்லை. எனக்கு ஆதரவாக மடாதிபதிகள் மாநாடு நடத்துவது அவசியமற்றது. எனது ஆட்சிக்காலம் முழுவதும் அக்னி பரீட்சையாக அமைந்துவிட்டது எனக் கண்ணீர் மல்கப் பேசினார்.

## ஜப்பானில் ‘ஹவுஸ்புல்’ காட்சிகளாக ‘தர்பார்’



ரஜினிகாந்த் நடித்து ஜப்பானில் மொழி மாற்றம் செய்யப்பட்ட ‘தர்பார்’ திரைப் படம் இரண்டாவது வாரமாக அரங்கு நிறைந்த காட்சிகளாக ஓடுகிறது.

முத்து, படையப்பா, சிவாஜி ஆகிய படங்கள் ஜப்பானிய மொழியில் மாற்றம் செய்யப்பட்டபோது அந்நாட்டில் பெரும் ஆதரவு கிடைத்தது. இந்நிலையில், ரஜினி நடித்த ‘தர்பார்’ திரைப்படம் ஜப்பானில் மொழிமாற்றம் செய்யப்பட்டு ஜப்பானில் திரையிடப்பட்டுள்ளது.

எம்கேசி திரையரங்கு உள்ளிட்ட பல்வேறு திரையரங்குகளில் கடந்தவாரம் வெளியான ‘தர்பார்’ , அரங்கு நிறைந்த காட்சிகளாக திரையிடப்படுகிறது.. ஜப்பானில் ஒலிம்பிக் போட்டி தொடக்க விழா நடைபெற்ற நேரத்தில் கூட தர்பார் ஹவுஸ்புல் காட்சியாக திரையிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மாமல்லபுரம் கார் விபத்து:

## நடிகை யாஷிகாவுக்கு இடுப்பு - கால் எலும்பு முறிவு

விபத்தில் சிக்கிய நடிகை யாஷிகா ஆனந்தின் இடுப்பு மற்றும் வலது கால் எலும்பில் முறிவு ஏற்பட்டு தொடர் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அத்தோடு யாஷிகாவின் ஓட்டுநரின் உரிமம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.



நடிகை யாஷிகா அவரது நண்பர்களுடன் மாமல்ல புரத்திலிருந்து சென்னைக்கு காரில் திரும்பிக் கொண்டு இருந்தபோது, காடு பகுதி தடுப்பு வேலியில் கார் மோதி விபத்துக்குள்ளானது. இந்த பயங்கர விபத்தில் யாஷிகாவின் தோழி பவானி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். படுகாயமடைந்த யாஷிகா மற்றும் அவரது 2 ஆண் நண்பர்களும் சென்னையிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து குறித்து மாமல்லபுரம் பொலிஸார் காரை ஓட்டிவந்த யாஷிகா மீது 3 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

முதற்கட்ட விசாரணையில் காரை வேகமாக ஓட்டி வந்ததே விபத்திற்கு காரணம் என்றும் யாஷிகா குடிபோதையில் இல்லை எனவும் தெரியவந்தது.

தற்போது யாஷிகாவுக்கு இடுப்பு மற்றும் வலது கால் எலும்பில் முறிவு ஏற்பட்டு தொடர் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், நடிகை யாஷிகா ஆனந்தின் ஓட்டுகர் உரிமத்தை மாமல்லபுரம் பொலிஸார் பறிமுதல்செய்து நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

## சிக்கிம் - ஐதராபாத்தில் 4 ரிச்டர் நிலநடுக்கம்

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் கடந்த சில வாரங்களாக தொடர்ந்து ஏற்படும் நிலநடுக்கத்தால் மக்கள் அச்சத்திலுள்ளனர். நேற்றுமுன்தினம் இரவு சிக்கிமிலும், நேற்று அதிகாலை ஐதராபாத்திலும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து தேசிய புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளதாவது: சிக்கிம் மாநிலத்தில் நேற்றுமுன்தினம் இரவு 8:39 மணியளவில் 4.0 ரிச்டர் அளவில் மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்நிலநடுக்கத்தால் எந்த பாதிப்பும் ஏற்பட்டதாக தகவல் இல்லை.

இதேபோல் ஐதராபாத்தின் தெற்கு பகுதியில் நேற்று காலை 4.0 ரிச்டர் அளவில் இலேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கத்தால் சேதம் எதுவும் ஏற்பட்டதாக தகவல் எதுவும் வெளியாகவில்லை.

## வேளாண் சட்டங்களை திரும்பப் பெற வலியுறுத்தி நாடாளுமன்றத்திற்கு ட்ரெக்டர் ஓட்டிவந்த ராகுல்

இந்திய மத்திய அரசின் 3 வேளாண் சட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நாடாளுமன்றத்திற்கு ராகுல் காந்தி ட்ரெக்டரில் சென்றமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மத்திய அரசு கொண்டுவந்த மூன்று புதிய வேளாண் சட்டங்களை எதிர்த்து, கடந்த ஆண்டு, நவம்பர் 26ஆம் திகதி தலைநகர் டில்லியில் போராட்டத்தைத் தொடங்கினார்கள் இந்திய விவசாயிகள். குறிப்பாக, பஞ்சாப், ஹரியானா, உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள் கடந்த 9 மாதங்களாக மிகத் தீவிரமான தொடர் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

விவசாயிகளின் தீவிரமான போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக அரசு மற்றும் விவசாயிகள் தரப்பில் 11 முறை பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. ஆனால், அரசின் பிடிவாதம் மற்றும் விவசாயிகளின் உறுதியான நிலைப்பாட்டால் முடிவு எதுவும் எட்டப்படாமல் அத்தனை




பேச்சுவார்த்தைகளும் தோல்வியடைந்தன. இதற்கிடையே, நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் கடந்த 19ஆம் திகதி தொடங்கியது. நாட்டுமக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக ஜந்தர் மந்தர் மைதானத்தில் விவசாயிகள் போராட்டம் தினந்தோறும் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், வேளாண் சட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரும் வயநாடு தொகுதி எம்.பியுமான ராகுல் காந்தி தனது வீட்டிலிருந்தே நாடாளுமன்றத்திற்கு ட்ரெக்டரில் பேரணியாக சென்றார். போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகளும் இதில் கலந்துகொண்டனர்.

பஞ்சாப், ஹரியானா போன்ற மாநிலங்களைச் சேர்ந்த தலைவர்கள் ட்ரெக்டரில் அமர்ந்திருந்தனர். அத்துடன், கட்சியின் ஆதரவாளர்கள் பதாகைகளை ஏந்தி அந்த வாகனத்தை சுற்றி நின்றனர்.

பின்னர் நாடாளுமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய ராகுல்காந்தி,

‘‘போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் உணர்வுகளை புரிந்துகொண்டேன். அவர்கள் (மத்திய அரசு) விவசாயிகளின் குரல்களை அடக்குவதோடு நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்துவதில்லை. புதிய வேளாண் சட்டங்களை திரும்பப் பெறவேண்டும். இந்தச் சட்டம் 3-4 வியாபாரிகளுக்கு மட்டும் ஆதரவாகவுள்ளது என்பதை நாடு அறியும்’’ என தெரிவித்தார்.



# ஹெட்ரிக் தங்கம் வென்ற ஹங்கேரி வீரர்

டோக்கியோ ஒலிம்பிக்கில் வாள் வீச்சுப் போட்டியில் இத்தாலியின் லூய்கி சமேலை எதிர்த்து விளையாடிய ஹங்கேரி வீரர் ஏரோன் ஸ்ஸிலாகி, 15-7 என்ற புள்ளிகள் கணக்கில் தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றார். லண்டன் 2012, ரியோ 2016 ஆகிய இரு ஒலிம்பிக் போட்டிகளிலும் தங்கம் வென்ற ஏரோன் ஸ்ஸிலாகி, தனது மூன்றாவது ஒலிம்பிக்கில் ஆண்களுக்கான தனிநபர் பட்டத்தை வென்று சாதனை படைத்துள்ளார்.

# டோக்கியோ ஒலிம்பிக் 2020

## ஒன்பது இலங்கையர்களில் ஐவர் வாய்ப்பை இழந்தனர்:

# மெத்யூ அபேசிங்க இன்று களமிறங்குகிறார்



டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் நடைபெற்று வருகின்றன. நேற்று நடைபெற்ற போட்டியில் இரு இலங்கை வீரர்கள் களம் கண்ட நிலையில், இருவரும் தோல்வியைத் தழுவினர்.

இலங்கை நேரப்படி நேற்றுக் காலை நடைபெற்ற 73 கிலோ கிராம் எடைப்பிரிவு ஜூடோ போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி களமிறங்கிய சாமர நுவான், ஜிபுடி நாட்டு வீரர் எடென் அலெக்ஸாண்டர் ஹூசைனுடன் மோதினார்.

போட்டி ஆரம்பமாகி 29ஆவது வினாடியில் ஜிபுடி நாட்டு வீரர் எடென் அலெக்ஸாண்டர் ஹூசைன் 10 புள்ளிகள் பெற்று முன்னிலை வகித்தார். போட்டி முடிவடையும் வரை இலங்கை வீரர் சாமர நுவனினால் எந்தவொரு புள்ளியையும் பெற்றுக்கொள்ள முடியாமல் போக, இறுதியில் 10-0 என்ற புள்ளிகள் அடிப்படையில் எடென் அலெக்ஸாண்டர் ஹூசைன் வெற்றி பெற்று காலிறுதிச் சுற்றுக்குத் தகுதிபெற்றார்.

இதேவேளை நேற்று மாலை நடைபெற்ற ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு பெட்மிண்டன் போட்டியில் குழு 'எஃப்' இல் இடம்பெற்றிருந்த இலங்கை வீரர் நிலுக்க கருணாரத்ன, அயர்லாந்து வீரர் நட் குயெனிடம் 21-16 21-14 என்ற நேர் செட் கணக்கில் தோல்வியடைந்தார். நிலுக்க கருணாரத்ன முதல் போட்டியில் சீன தைப்பே வீரரிடம் தோல்வியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதன்படி டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்ற 9 இலங்கை வீரர்களில் 5 வீரர்கள் பதக்கம் வெல்லும் வாய்ப்பை இழந்துள்ளனர். இதேவேளை இலங்கை வீரர் மெத்யூ அபேசிங்க இன்று ஆண்களுக்கான 100 மீற்றர் ப்ரீஸ்டைல் நீச்சல் போட்டியில் களமிறங்குகிறார். இந்தப் போட்டி இலங்கை நேரப்படி மாலை 3.39 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.





# அமெரிக்காவின் அதிர்ச்சித் தோல்வி

(ரமணி)

கூடைப்பந்து போட்டியில் சம்பியனான அமெரிக்கா, டோக்கியோ ஒலிம்பிக்கில் முதல் சுற்றில் 83 - 76 என்ற புள்ளிக் கணக்கில் பிரான்ஸிடம் தோல்வியடைந்தது. மூன்று முறை ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற அமெரிக்கக் கூடைப்பந்தாட்ட அணி 2004ஆம் ஆண்டின் பின்னர் முதன் முதலாகத் தோல்வியடைந்தது.

13-1, 69-63 என்ற கணக்கில் முன்னிலை பெற்ற அமெரிக்கா இறுதி வினாடிகளில் தோல்வியடைந்தது. ஏதென்ஸ் விளையாட்டுப் போட்டியின் அரையிறுதிக்குப் பின்னர், அமெரிக்காவின் ஆண்கள் அணிக்கு இது முதல் ஒலிம்பிக் தோல்வியாகும்.

# இலங்கை – இந்திய T20 தொடர்; ஊடக அறைக்குள் புகுந்த கொரோனா



ஷிகர் தவான் தலைமையிலான சுற்றுலா இந்திய அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரின் முதல் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்ற நிலையில், ஊடகவியலாளர் பகுதியின் அனைத்து நடவடிக்கைகளும் திடீரென இடைநிறுத்தப்பட்டன.

முதல் இருபதுக்கு 20 சர்வதேச போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில், ஊடக அறையில் இணைக்கப்பட்டிருந்த இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தின் ஊழியர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்தே ஊடகவியலாளர் பகுதியின் அனைத்து நடவடிக்கைகளும் திடீரென இடைநிறுத்தப்பட்டன.

ஊடக அறை கிருமி நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று நடைபெறும் இரண்டாவது போட்டிக்காக மீண்டும் திறக்கப்படுமென இலங்கை கிரிக்கெட் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான கிரிக்கெட் நிறுவனத்தின் ஊழியர் தற்சமயம் தனிமைப்படுத்தப்பட்டு, சிகிச்சை மேற்கொண்டு வருகிறார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com





டோக்கியோ 2020 ஒலிம்பிக் ஞாபகார்த்தமாக சீனா இரு தபால் முத்திரைகளை வெளியிட்டது.

# அண்ணனும், தங்கையும் தங்கம் வென்று ஒலிம்பிக் சாதனை

2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் தற்போது நடைபெற்றுவரும் நிலையில் ஒலிம்பிக் வரலாற்றில் ஒரே நாளில் அண்ணனும், தங்கையும் தங்கப் பதக்கம் வென்ற நிகழ்வு நேற்று முன்தினம் டோக்கியோ ஒலிம்பிக்கில் பதிவானது. 2020 ஒலிம்பிக்கை நடத்துகின்ற ஜப்பானைச் சேர்ந்த அண்ணன் - தங்கையே இச்சாதனையை நிகழ்த்தினர். அதுவும் ஒரே விளையாட்டில் 30 நிமிட இடைவெளியில் இச்சாதனை நிகழ்த்தப்பட்டது. தற்காப்புக் கலைகளில் ஒன்றான ஜூடோ போட்டியில், ஆண்கள் 66 கிலோ எடைப்பிரிவில் ஜப்பானின் ஹிபுருமி அபேவும், பெண்கள் 52 கிலோ பிரிவில் அவரது தங்கை உடே அபேவும் இவ்வாறு தங்கப்பதக்கத்தை வென்று, ஒலிம்பிக் வரலாற்றில் முதன்முறையாக ஒரே நாளில் அண்ண னும், தங்கையும் தங்கப்பதக்கம் வென்று புதிய சாதனை படைத்தனர்.



## TOKYO OLYMPIC 2020

| Rank | Team/NOC | 1 | 2 | 3 | Total |
|---|---|---|---|---|---|
| 1 | Japan | 8 | 2 | 3 | 13 |
| 2 | United States of America | 7 | 3 | 4 | 14 |
| 3 | People's Republic of China | 6 | 5 | 7 | 18 |
| 4 | ROC | 4 | 5 | 3 | 12 |
| 5 | Great Britain | 3 | 3 | 1 | 7 |
| 6 | Republic of Korea | 3 | 0 | 4 | 7 |
| 7 | Australia | 2 | 1 | 3 | 6 |
| 8 | Kosovo | 2 | 0 | 0 | 2 |
| 9 | Italy | 1 | 4 | 4 | 9 |
| 10 | France | 1 | 2 | 2 | 5 |




நேற்றிரவு 8 மணி வரைக்குமான பதக்கப் பட்டியல்

## ஐ.பி.எல். 2021

# எஞ்சிய போட்டிகளுக்கான அட்டவணை வெளியானது




கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரின் எஞ்சிய போட்டிகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், போட்டி அட்டவணையும் வெளியிடப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டுக்கான இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரானது கடந்த ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி இந்தியாவில் ஆரம்பமாகி நடைபெற்று வந்த நிலையில், ஒரு சில வீரர்கள் மற்றும் அணி ஊழியர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று அடுத்தடுத்து உறுதி செய்யப்பட்டதையடுத்து, தொடரானது காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

எஞ்சிய போட்டிகளை இந்தியாவில் மீண்டும் நடத்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தாலும், இந்தியாவில் தற்போது கொரோனா வைரஸின் தாக்கம் குறைவடையாத நிலையில், எஞ்சிய போட்டிகள் அனைத்தையும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டது.

இவ்வாறான நிலையிலேயே எஞ்சிய போட்டிகளுக்கான அட்டவணை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் எஞ்சிய போட்டிகள் அனைத்தும் எதிர்வரும் செப்டெம்பர் 19ஆம் திகதி ஆரம்பமாகி, ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி இறுதிப் போட்டி நடைபெறவுள்ளது.

செப்டம்பர் 19ஆம் திகதி நடைபெறுகின்ற 30வது லீக் போட்டியில், அதாவது இரண்டாம் பாதி ஆட்டத்தின் முதல் போட்டியில் நடப்பு சம்பியன் மும்பை இந்தியன்ஸ் - மூன்று முறை சம்பியனான சென்னை சுப்பர் கிங்ஸ் ஆகிய அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. இதேவேளை இந்தியன் ப்ரீமியர் லீக் நிறைவடைந்து அடுத்த இரு நாட்களில், அதாவது ஒக்டோபர் மாதம் 17ஆம் திகதி அதே ஐக்கிய அரபு இராச்சியத்தில் 7ஆவது ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக் கிண்ண தொடர் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருது மியண்டாட் விளையாட்டுக்கழகத்தின் சீருடை அறிமுக நிகழ்வும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கிவைப்பும்

(நூருல் ஹுதா உமர், எம்.என்.எம்.அப்ராஸ்)

சாய்ந்தமருது மியண்டாட் விளையாட்டுக் கழகத்தின் 30ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தயாரிக்கப்பட்ட சீருடை அறிமுக நிகழ்வும், நட்புரீதியான கிரிக்கெட் சுற்றுப் போட்டியும் கழகத்தலைவர் ஏ.பாயிஸின் தலைமையில், சாய்ந்தமருது லீடர் அஷ்ரப் ஐக்கிய விளையாட்டு மைதானத்தில், கடந்த சனிக்கிழமை, பிரதம அதிதியாகக் கலந்துகொண்டிருந்த இலங்கை பொதுச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினரும், சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரியுமான ஏ.எல்.எம்.சலீமினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் மியண்டாட் இஸ்டல்லியன் - மியண்டாட் கெப்பிட்டல் ஆகிய அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மியண்டாட் இஸ்டல்லியன் அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வுசெய்தது. அதன்படி முதலில் துடுப்படுத்தாடிய மியண்டாட் கெப்பிட்டல் அணி நிர்ணயிக்கப்பட்ட 15 ஓவர்கள் முடிவில் 109 ஓட்டங்களை பெற்றது.

110 என்ற இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மியண்டாட் இஸ்டல்லியன் அணி 13.2 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகர்களாக ஸ்டாலியன்ஸ் அணியின் றிஸ்னி மற்றும் இர்ஷாத் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டதுடன், தொடர் ஆட்டநாயகனாக கெப்பிட்டல்ஸ் அணி வீரர் ரஜாத் தெரிவானார். இந்நிகழ்வில் தேசிய காங்கிரஸ் தலைவர், ஏ.எல்.எம்.அதாஉல்லாவின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை பிரதம அதிதியாகக் கலந்துகொண்டிருந்த ஏ.எல்.எம். சலீம் வீரர்களுக்கு வழங்கிவைத்தார்.







Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7